Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

ஜூலை 14 - 20, 2011

ரூபா 30.00

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 919




சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ஆன்மீகம்

### சிவசின்னங்கள்

திருநீறு, உருத்திராக்கம் இவை இரண்டும் சிவசின்னங்கள் எனப்படும். திருநீறு இந்துசமயத்தின் சிறந்த பிரசாதங்களில் முதன்மை வகிப்பதாகும். மூன்று விரல்களால் இடப்படும் திருநீற்றின் மூன்று கோடுகளும் சிந்தனை, சொல், செயல் என்ற திரிசத்தியங்களைக் கூறுகின்றது. முடிவில் யாவரும் சாம்பல் ஆவர் என்ற நிலையான உண்மையை திருநீறு உணர்த்துகின்றது. மேலும் தூய்மையும் வெண்மையுமான நீறு போல் நமது உள்ளம் தூய்மையாகவும் ஞான ஒளி உடையது மாக இருத்தல் வேண்டும் என்பதையும் காட்டுகின்றது.

பசுவின் (ஜீவனின்) மலமாம் ஆணவம், கன்மம், மாயை என்ற தீயில் (ஞானத்தீயில்) நீறுகின்றன என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகின்றது. இதை ஒட்டியே சம்பந்தபெருமான்.. "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு.." என அருளியுள்ளார்.

"நீறில்லா நேற்றி பாழ்" என்பது பழமொழி. திருநீறு அணியும் போது வடக்கு முகமாகவோ கிழக்கு முகமாகவோ அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லிக்கொண்டு அணிய வேண்டும்.

உருத்திராக்கம் ஸ்ரீ உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமானின் திருநேத்திரங்களில் தோன்றிய கண்மணிகள் என்பது பொருள். திரிபுரத்து அசுரர் செய்த கொடுமைகளை தேவர்கள் சிவபெருமானிடம் சொன்ன போது அவரின் திரிநேத்திரங்களில் இருந்து ஒழுகிய நீர்த்துளிகள்.

இது சிவபெருமானின் அருளைக் குறிப்பதால் மாலையாக அணிந்து ஜெபித்தால் தெய்வசக்தி வளரும்.

எஸ்.லக்மணன், யாழ்ப்பாணம்.

### யேசுவின் வழியைப் பின்பற்றுங்கள்

இயேசு தனது புவி வாழ்க்கையில் முழுமை யான ஒரு மனிதனாக, மனித இயல்புகளோடு வாழ்ந்தார் என்பது மட்டுமே கிறிஸ்தவ வாழ்வின் தூய்மையை உறுதிப்படுத்தவும், கிறிஸ்தவ வாழ்வில் நிலைப் படுத்தவும் வலிமையளிக்கிறது. மனித பலவீனங் களோடு வந்த இயேசு பாவங்களை முழுமையாக விலக்கி ஓர் தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தார் என்பதும், நம்மைப் போலவே பல்வேறு சோத னைகளுக்கு உட்பட்டாலும் அந்த சோதனைகளை வெற்றி கொண்டார் என்பதுமே நமது வாழ்வில் நாம் தூய்மையைக் கடைப்பிடிக்க நமக்கு முழுமையான வலிமையைத் தருகிறது.

'என்னைப் பின்செல்' என்பதே இயேசுவின் போதனை. இயேசு எதையெல்லாம் வாழ்நாளில் கடைபிடித்தாரோ அதை மட்டுமே போதித்தார். பழைய ஏற்பாடுகள் எல்லாம் சட்டங்களை மட்டுமே வகுத்துக்கூறுகையில், இயேசு மட்டுமே வாழ்க்கையை வாழ்ந்து நாமும் அதைப் போல வாழ நமக்கு ஊக்கமளிக்கிறார்.

உணவுக்கான சோதனை வருகையில், "மனிதன் உயிர் வாழ்வது, அப்பத்தினால் மட்டுமல்ல, கடவுளின் வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும்" என அதை அடக்கியவர் இயேசு. புகழுக்கான சோதனையும், வசதியான வாழ்க்கைக்கான சோதனையும் வருகையில் அந்த சோதனைச் சாத்தானை துணிவுடன் துரத்தியவர் இயேசு. இயேசு கடவுள் என்று நம்புவது கிறிஸ்தவ வாழ்வின் துவக்கம். அவர் மனிதனாய் வாழ்ந்தார் என்பதை நம்புவதே கிறிஸ்தவ வாழ்வின் பயணம்.

எஸ்.மரியா, கொழும்புத்துறை.

### கஞ்சத்தனம் வேண்டாம்!

மனிதர்களுக்கு அல்லாஹ் பொருளைத் தருவது மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதற் காகவே ஆகும். அல்லாஹ் வழங்கும் நி.'. மத்துக்களை (அருட்கொடைகளை) வெளிக் காட்டாது மறைத்துக்கொள்வதும் சிரமமின்றி வாழ்க்கை நடத்த அல்லாஹ் செல்வத்தை வழங்கியிருந்தும் அதனைச் செலவு செய்யாது சேமித்து வைப்பது கூடாது.

குறிப்பாக மனிதனுக்கு இன்றியமையாத தேவை கள் ஏராளமாய் உள்ளன. உணவு, உடை, இருப்பிடம், பிள்ளைகளுக்குக் கல்வி, அறிவு நூல்கள், மருத்து வம், பயணம், பெற்றோருக்கும், ஏழைகளான உறவி னர்களுக்கும் வழங்குதல், நற்செயல்களுக்காக செலவிடுதல் ஆகிய பல்வேறு செலவுகள் உள்ளன. இவைகள் அனைத்தும் மனிதனுக்குத் தவிர்க்க முடியாத செலவுகள் ஆகும். பணம் செலவாகுமே என்றஞ்சி இத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளாதிருப்பது முட்டாள்தனத்திலும் முட்டாள்தனமாகும்.

முஹம்மது ஹஸனி-கல்முனை-07

## வாசகர் சாலை

### பாராட்டுக்கள்

ஆண்டுகள் கடந்தாலும் மாறாத உறுதியோடு மக்கள் மனதில் இடம்பிடித்த என்றும் அழியாத முரசே! 897 ஆவது முரசில் வெளிவந்த 'இருண்ட வாழ்க்கை' என்ற சிறுகதை என் மனதில் தனி இடம் பிடித்தது. அதை எழுதிய மானியூர் நிருஜனுக்கு எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். சூடு, சுவை, சுவாரசியம், அதுதான் என் அன்பன் தினமுரசு என்றுகூறி விடைபெறுகின்றேன்.

ராணிமகள் றெசிந்தா, சங்கத்தார் வயல்

### அரிய பல தகவல்கள்

மனம் நிறைந்த முரசுக்கு, மனதை விட்டகலா அம்சங்களையும் உன்னில் தாங்கி பல்சுவையான வருகிறாய். சிந்திக்கத் தூண்டும் வித்தியாசமான கட்டுரைகளை வழங்குவதில் எனக்கு மகிழ்ச்சி. பூலான்தேவி, மனதுக்கு நிம்மதி, தீண்டும் இன்பம் பக்கங்கள் சூப்பர். லேடீஸ் ஸ்பெஷலில் வரும் அழகு குறிப்புகள் இயற்கை முறையில் பின்பற்றக் கூடியதாக உள்ளது. இவ்வாறு பல தகவல்களை பிரசுரம் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ்.குணாளினி, திருகோணமலை

### சிந்தனையின் வெளிப்பாடு

முரசுக்கு வணக்கம்.
உன்னில் பல மாற்றங்களைக் காணக் கூடியதாகவுள்ளது. முன்னைய வாரங்களில் வாசகர்சாலையில் எடுத்துக் சொன்ன மாற்றத்தை செய்திருக்கிறாய் என்பதையிட்டு மனநிறைவு அடைகின்றேன். 918 முரசில் வெளிவந்த தமிழ் பெண்கள் பாலியல் குற்றச்சாட்டுக்கள் - எதிர்விளைவு




என்ற கட்டுரை தமிழ் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளின் உண்மை நிலையினை தெளிவாகக் கூறிய சிவனுக்கு எனது வாழ்த்துக்கள். சிவனின் கட்டுரைகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. இவ்வாறு மக்களின் உண்மை நிலையை தெளிவாகக் கூறவேண்டுமென கேட்டுக்கொள் கின்றேன்.

க.கேமா,
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல.919



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.07.2011

கவிதைப் போட்டி இல. 919
தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### நீ யார்?

குடிநீர் எடுத்து,
குடிநீர் குடிக்கும் பிள்ளாய்
உனக்கு படிக்கும்
உணர்வில்லையோ?
நீ பாடசாலை
செல்வதில்லையோ?

எஸ்.ஜனார்த்தனன்,
வவுனியா.

### யாருக்குத் தெரியும்?

தெருவோரக் குழாயடியில்
உன் தாகம் தீர்க்கும் நீர்
அசுத்தமோ?
அருமையோ?
அதை
யாரறிவார் அப்பனே!

எஸ்.எம்.ஹிமாயா, மருதமுனை.

### இது உனக்கானதல்ல..

எந்த அகதிமுகாமின்
அவல நிலையோ இது?
தாகம் தீர்க்க
தவழ்ந்த நிலையில்
நீரைக் குடிக்கும் சிறுவனே
இந்நிலை
உனக்கான விதியல்ல
உணர்ந்துகொள்.

ரு.ஜெயபாலன்,
பதுளை.

### எதுவாயினும்...

இவனென்ன
பாலைவனத்து ஒட்டகமா?
வரட்சி தாங்கி வாழ்வதற்கு
தாகத் தவிப்புக்கு
தண்ணீர்
நல்லதென்ன; கெட்டதென்ன?
குடிச்சுத்தள்ளு!

ம.தர்சிகா, மன்னார்.

### அர்த்தம் பொதிந்த நிலை

அன்னையில்லையோ...?
அப்பன் இல்லையோ...?
உன்னை
ஆற்றித் தேற்ற
யாருமில்லையோ?
வெற்று மேனியாய்
விழுந்த நிலையில்
நீரை உறிஞ்சிக் குடிக்கும்
உனதுநிலை உணர்த்துகிறது
எமக்கு பல அர்த்தங்களை!

எம்.ஹம்ஸத்தவனி,
மட்டக்களப்பு.

### தாகம்

காடு மேடாய் அலைந்தேன்
என் உறவைத் தேடி...
கண்களில் தென்பட்டது
இந்தக் கூவத்துத் தண்ணீர்
அள்ளிப் பருகி என் தாகத்தை
தீர்த்துக்கொண்டேன்.

சுமி,
மருதடி.

## கவிதைப் போட்டி இல.917

### பாராட்டுக்குரியது



### தேசத்தின் குறியீடு

சாலையோர
அழுக்கு நீரும்...
ஒரு
சந்ததியின்
எதிர்காலமும்...
ஒரு தேசத்தின்
பிரதிபலிப்பை
குறியீடாய்
காட்டுகிறது.

அ.அன்பரசி,
மயிலிட்டி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 1772,
கொழும்பு.
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212221811
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):- thinamurasu@live.com


## உங்கள் பக்கம்

### கொடிகாமம் சந்தை ஒழுங்கை திருத்துவது எப்போது?

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சிப் பிரதேசம் முக்கியமான வியாபார மையங்களில் கொடிகாமம் ஒன்றாகும். கொடிகாமம் சந்தைக்குப் பின்புறமாக அமைந்திருக்கின்ற சந்தை ஒழுங்கையினை பல இடங்களிலிருக்கும் மக்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

மிக நீண்ட காலமாக செப்பனிடப்படாது மணற்தரையாகக் காணப்படுகின்ற தாழ்வான இந்தப் பாதை, மழை காலங்களில் மிகவும் மோசமான நிலையில் சீரழிந்து காணப்படுகின்றது. சந்தைக் கழிவுப் பொருட்களும், இவ் ஒழுங்கையால் மழைநீருடன் சேர்ந்து செல்கின்றமையால் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் இவ் ஒழுங்கையினால் இப்பிரதேச மழைநீர் செல்கின்றது. ஆகவே மழை காலங்களில் இந்த ஒழுங்கையினூடாக மக்கள், மாணவர்கள் ஆகியோர் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகின்றனர். இங்குள்ள மக்களுக்கு இந்த பாதை மட்டுமே இருப்பதால் மழை காலங்களில் தண்ணீருக்குள்ளால் சென்றுதான் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதனால் இங்குள்ள மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

தேர்தல் காலங்களில் இப்பாதையைத் திருத்தி தருவதாக வாக்குறுதி அளிக்கின்ற அரசியல்வாதிகளும் இதுவரையில் செப்பனிடுவது பற்றி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதுபற்றி உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் எந்தவித பலனும் அளிக்கவில்லை.

எனவே மீண்டும் தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக இப்பிரச்சினையை முன்வைத்தாயினும் குறித்த பாதையை பயன்படுத்துகின்ற மக்களின் அவலங்களுக்கு முடிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இதனை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

சி.மருதன் கொடிகாமம்.

# நியூசிலாந்தில் பரபரப்பாகிறது

# இலங்கை அகதிகள் விவகாரம்



இலங்கை அகதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 83 பேர் அடங்கிய படகு ஒன்று நியூசிலாந்து நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது தடுத்து நிறுத்தப்பட்டு

நியூசிலாந்தில் அகதிகளை வரவேற்பதில் தயக்கம் காட்டாத ஒரு நாடு. இருந்தபோதிலும் அகதிகள் எனக் கூறி வருபவர்கள் அனைவரையும் உள்வாங்க வேண்டிய அவசியம் நியூசிலாந்திற்குக் கிடையாது என்று நியூசிலாந்தின் பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவுக்குச் சொந்தமான தீவுப்பகுதி ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது நியூசிலாந்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆறு பெண்கள், ஐந்து சிறுவர்கள் அடங்கலாக கப்பலில் பயணம் செய்த 83 பேரும் கப்பலில் இருந்து இறங்கும்படி இந்தோனேசிய அதிகாரிகள் கேட்டுக்கொண்ட போதும் இறங்குவதற்கு மறுத்திருக்கும் இவ் அகதிகள் தங்களை நியூசிலாந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் இல்லையேல் ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பெடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துரைக்கும்போதே நியூசிலாந்துப் பிரதமர் மேற்கண்டவாறு கூறியிருந்தார். அதே வேளை நியூசிலாந்தின் இலங்கைச் சமூகத்தின் பேச்சாளர் எனக் கூறிக்கொள்ளும் சூலராஜபக்ஷ, இவ் அகதிகள் என்ற போர்வையில் கடந்த இரண்டு வருடங்களாக மறைந்திருந்த பயங்கரவாதிகள் நியூசிலாந்திற்குள் நுழைய முயற்சிக்கக் கூடும் என்றபடியால் அவர்களை நாட்டினுள் வர அனுமதிக்கக் கூடாது என்று நியூசிலாந்து அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் நியூசிலாந்து நாட்டின் ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒன்றான 'தேட் டொமினியின் கோஸ்ட்' என்றும் பத்திரிகை நடாத்திய கருத்துக் கணிப்பில் இவ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்றே கூறியிருக்கிறது. இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இலங்கை அகதிகள் விவகாரத்தில் கடுமையான நிலைப்பாடு களை மேற்கொண்டு வருகின்ற நாடுகளின் வரிசையில் நியூசிலாந்தும் சேர்ந்திருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.


## தொழிற்பயிற்சி நிலையங்களை தரமுயர்த்த இலங்கைக்கு இந்தியா நிதியுதவி

நுவரெலியாவில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தை தரமுயர்த்து வதற்காக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு 205.4 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கி யுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று மாலை நாரஹேன்பிட்டியிலுள்ள இளைஞர் விவகார மற்றும் திறன் விருத்தி அமைச்சில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும், இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தாவும் கைச்சாத்திட்டனர்.

இச் செயற்திட்டத்தின் கீழ் நுவரெலியா தொழிற் பயிற்சிக் கல்லூரியில் புதிய உபகரணங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. நூலகத்தை தரமுயர்த்தல், பயிற்றுவிப்பாளர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி, இந்தியாவில் இருந்து பயிற்றுவிப்பாளர்களை வரவழைத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கருத்தில் கொள்ளப்படவுள்ளன. இதன் மூலம் வருடத்திற்கு 800 மாணவர்கள் நன்மை பெறுவர் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இதேவேளை வவுனியாவிலும் யாழ்ப்பாணத்தில் கைதடியி லும் புதிதாக கைத்தொழில் பயிற்சி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறினார்.

## தகவல் வழங்குபவர்களுக்கு சன்மானம் கனடா பொலிஸ் அறிவிப்பு




இலங்கையைச் சேர்ந்த கனடா வாழ் பிரஜையான தமிழ் இளைஞன் ஒருவன் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தகவல் வழங்குபவர்களுக்கு வெகுமதி வழங்கவுள்ளதாக டொரன்டோ பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கிறிஸ்டியான் தனபாலன் என்ற 22 வயதுடைய இளைஞனே கடந்த 2009 ஆம் ஆண்டு தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். கடந்த 2009 ஆம் ஆண்டு காலையில் கிறிஸ்டியான் தனபாலன் என்ற இளைஞனும் மற்றும் அவனது நண்பர்கள் ஐவரும் கென்னடி வீதி மற்றும் புறநகர் ஸ்கார்புரோ பிரதேசத்தின் நெடுஞ்சாலையில் வைத்து ஒரு குழுவினரால் தாக்கப்பட்டனர்.

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான கிறிஸ்டியான் தனபாலன் சன்னிபுருக் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு சில நிமிடங்களிலேயே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் தெரிவிக்கையில், தனபாலனும் அவனது நண்பர்களும் சுமார் 12.15 மணியளவில் கைப்பந்து விளையாடி விட்டு வெளியேறுகையில் 15 -20 பேர் கொண்ட ஆண்கள் மட்டையால் பலமாக தாக்கியுள்ளனர். தனபாலனின் நண்பர்களுக்கு சிறிய காயங்களே ஏற்பட்டதாகவும், தனபாலனே மிக மோசமான தாக்குதலுக்கு உள்ளானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். தனபாலனின் தலையில் பலமான அடி காயம் ஏற்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கான காரணம் மர்மமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இரு குழுக்களுக்கிடையே ஒரு வாய்மொழிப் பரிமாற்றம் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கவில்லை. கனடா தமிழ் சமூகத்தில் உள்ள, இந்த இரு குழுக்களுக்கும் இடையில் இருந்த இன மோதலே இந்த வன்முறைக்கு காரணமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சமூகத்திற்கு மதிப்பளிக்கும் சந்ததிகள் உருவாக்கப்பட வேண்டும்



காலி புதிய பேரூந்து நிலையத்தில் ஜனாதிபதி,

சமூகத்திற்கு மதிப்பளிக்கும் சந்ததிகள் உருவாக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். காலி புதிய பேரூந்து நிலையத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமய சுற்றாடலினுள் நாட்டின் மீது அன்பு செலுத்தும் பிள்ளைகள் உருவாக்கப்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சமாதானத்துடன் வாழக்கூடிய சுற்றாடல் ஒன்று தற்சமயம் நாட்டில் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

## மின்னலுக்கு இரையானார் மாணவி

லுனுகல வெடகேவெள பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் 13 வயது பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். மழையுடன் கூடிய காற்று வீசிக் கொண்டிருப்பதனை வீட்டின் கதவோரமாக தனது மாமியுடன் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த 13 வயது நிரம்பிய எல்.பி. இந்திகா திடீரென ஏற்பட்ட மின்னலினால் தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் அருகில் நின்ற சிறுமியின் மாமியான 42 வயதுடைய ஏ. நந்திகா கல்யாணி பலத்த காயங்களுடன் லுனுகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மரத்தில் தொங்கியது சடலம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அடர்ந்த காட்டுக்குள்ளிருந்து மரத்தில் தொங்கியபடி சிறுவன் ஒருவனின் சடலம் கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக வாகரைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வாகரைப் பிரிவின் கதிரவெளி - புச்சாங்கேணி எனும் கிராமத்தில் வசிக்கும் 16 வயதுடைய பவானந்தம் சதீஸ்காந்தன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது பிரேத பரிசோதனைக்காக சடலம் வாழைச்சேனை ஆதார வைத்திய சாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வாகரைப் பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## கரையோரக் காவல்படையினர் ஹனோயில் சந்திப்பு

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஸ் உட்பட்ட பிராந்தியத்தைச் சேர்ந்த 17 நாடுகளின் கரையோரக் காவல்படையின் பிரதிநிதிகள் வியட்நாம் தலைநகர் ஹனோயில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வியட்னாமில் நடைபெறவுள்ள மாநாட்டில் முன்வைக்கப்பட வேண்டிய பல முக்கியமான விடயங்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையேயான கடற்பிராந்திய சட்டங்களை சிறந்த முறையில் அமுல்படுத்துவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. கடலில் ஏற்படும் அனர்த்தங்களின்போது உடனடியாக நாடுகள் இணைந்து மீட்டல் மற்றும் பாதுகாத்தல் போன்ற விடயங்களிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல்(Fax):- 021 222 1811
ஈ-மெயில்(E-mail):- thinamurasu@live.com

# முரசம்

## எது வழி எப்படிப் பயணம்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

சனல்-4 தொலைக்காட்சியின் பெயர் உலகம் பூராகப் பரவுவதற்கு இலங்கை நிகழ்வுகள் பெரிதும் உதவி இருக்கின்றன.

தமிழ் மக்களின் அவலமும், அழிவும் சிறந்த விளம்பரமாக்கப்பட்டதில் சனல்-4 தொலைக்காட்சி நல்ல பயன்பெற்றுள்ளது.

மனிதாபிமானம் உள்ளவர்களுக்கும், மனித நேசிப்புள்ளவர்களுக்கும் சனல்-4 ஒளிபரப்பிய காட்சிகள் ஏற்கமுடியாததாகவும், உணர்ச்சிவசப் படுத்தக் கூடியதாகவும் இருக்கவே செய்யும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்கவே முடியாது.

அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளின் அரசியல் பிரதிநிதிகளும், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளும், கண்டிப்பதும், குற்றம் சாட்டுவதும், விசாரணை தேவை என்று கூறுவதும் வேடிக்கையாகவே இருக்கின்றது.

இலங்கையில் அவலங்கள் தொடர்வதற்கும், பயங்கரவாதம் வளர்ச்சிபெற்றதற்கும் சர்வதேச பின்னணி ஏதோ ஒரு அளவில் இருந்துள்ளது என்பதைப் போல், யுத்தம் அதன் இறுதிக்கட்டத்தை மிகவும் கோரமான பதிவுகளோடு முடித்துக் கொள்ளப்போகிறது என்பதைத் தீர்மானித்தவர் களிலும் சர்வதேச சமூகத்தில் பங்கு கணிசமான அளவு உண்டு என்பதை எவரால் மறுக்க முடியும்.

பேரவலத்தைத் தடுத்து நிறுத்தும்படியும், அழிவுகளை முடிவுக்குக் கொண்டுவரும்படியும் எமது உறவுகள் அவர்கள் வாழும் நாடுகளின் வீதிகளில் இறங்கி அவலக்குரல் எழுப்பினார்களே அப்போதும், கவனத்தை ஈர்க்க (ஏற்கமுடியாதது என்ற போதும்) தீக்குளித்தார்களே! அதைக்கூட இதே சர்வதேச சமூகம் கண்டுகொள்ளவில்லையே. அங்கு இருந்த ஊடகங்கள் முன்னுரிமை வழங்கவில்லையே ஏன், இந்த சனல் -4 தொலைக்காட்சி கூட கண்ணை மூடிக்கொண்டதே ஏன் என்ற கேள்விக்கு இவர்களால் பதில் சொல்ல முடியுமா?

ஆகவே, இங்கு அவலங்களும், அழிவுகளும் தொடர்வதற்கும், நடப்பதற்கும், காரணமானவர்களும் அல்லது அதற்கு ஏதோ ஒரு வகையில் பங்களிப்புச் செய்தவர்களும் அப்போது, உணர்ச்சிவசப்படாமல், மனிதாபிமானம் பற்றிப் பதற்றமடையாமல் இருந்து விட்டு இன்று குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுவதில் என்ன நியாயம் இருக்கமுடியும்.

இங்கு நடந்த எவையும் நியாயப்படுத்த முடியாதவை. அதேவேளை சனல்-4 தொலைக் காட்சி ஒளிபரப்புச் செய்தவை மட்டும் இங்கே நடந்தவை அல்ல, அதையும் தாண்டிய கொடுமை களும் காட்டுமிராண்டித்தனங்களும் நடந்துமுடிந்திருக்கின்றது. அதில் தமது உடன்பிறப்புக்களையும், பாசத்துக்குரியவர்களையும், தமது வளங்களையும், சொத்துக்களையும் இழந்து தவிப்பவர்கள் இன்னும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வாழும் சாட்சிகளாக அழிவின் வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைப் பற்றி சனல்-4 தொலைக்காட்சிக்கோ, இதே சர்வதேச சமூகத்துக்கோ இருக்கக் கூடிய அக்கறை அல்லது கவலை என்னவாக இருக்கும்.

இவற்றைக் கையில் எடுப்பதால் என்ன இலாபம் இருக்க முடியும் என்ற அவர்களின் தேடலுக்கு எதுவுமில்லை என்பதே விடையாக இருக்கும்.

இலங்கையில் தமிழ் மக்கள் தாம் கௌரவமாக வாழவும், தமது அரசியல் அபிலாஷைகளைப் பெற்றெடுக்கவும் கொடுத்திருக்கும் விலை ஈடு இணையற்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனாலும் தொடர்ந்துமோ, அல்லது எதிர்காலத் திலோ மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்தை நடத்தவோ, அழிவுகளை சந்திக்கவோ தயாரில்லை. அதற்கு தமிழ் மக்களை உசுப்பேற்றி இழுத்துச் செல்ல முடியுமென்று எவரும் நம்பினால் அது இந்த நாட்டில் எஞ்சியிருக்கும் தமிழ் மக்களையும் அழிக்கவே வழி தேடியதாக இருக்கும்.

எனவே, நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் சிந்திக்கும் அதேவேளை நடைமுறைக்குப் பொருத்தமான வகையில் தமிழ் மக்கள் தமது முன்னாலுள்ள சவால்களை எதிர்கொண்டு முன்னேறுகின்ற போதே இருப்பதைப் பாதுகாப்பதோடு, இழக்கப்பட்ட உயிர்களைத் தவிர ஏனைய அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் ஊட்டப்பட வேண்டும்.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# வடக்கு தேர்தலில் நடக்கும் நிகழ்வுகள்

**இலங்கையில்** அதிகமான அமைச்சர்கள் நடமாடும் மாவட்டமாக யாழ்ப்பாணம் தற்போது இருக்கின்றது. அடுத்த வாரமளவில் ஜனாதிபதியும் யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் தங்கி இருக்கப் போகின்றார். யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பதினாறு சபைகளுக்கான உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான பிரச்சாரப்பணிகள் களைகட்டி இருக்கின்றது என்பதற்கு இவை சாட்சியமாகும். அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தின் பகுதிகளில் படையினரால் தடுக்கப்பட்டிருந்த வீதிகளை மக்கள் பாவனைக்குத் திறந்துவிடுவதும், வீதிகளைப் புனரமைப்பதும், புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதும், துவிச்சக்கர வண்டிகள் தையல் இயந்திரங்கள், மற்றும் தொழில் உபகரணங்கள், வழங்குவதுமாக ஐரூராக பணியாற்றிக் கொண்டிருக் கின்றனர். தேர்தல் நடைபெறு வதற்கு முன்னர் அமைச்சர்களிடமிருந்து பெறக் கூடிய அத்தனை நன்மைகளையும் பெற்றுவிட வேண்டும் என்று மக்களும் தமது முறைப்பாடுகளை பட்டியலிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த விவகாரத்தை வெறுமனே தேர்தல் கால நடவடிக்கையாக மட்டும் பார்க்க முடியாது. இந்தச் சூழலை வாய்ப்பாக யாழ்ப்பாணமும், யாழ்ப்பாண மக்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்கம் இந்தத் தேர்தலில் கணிசமான வெற்றியைப் பெற வேண்டுமென அதிக அக்கறை காட்டி வருகின்றது. அரசாங்கத்தின் பரபரப்பான செயற்பாடு களைக் கண்டு தேர்தலில் அரச தரப்பின் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழப்பமடைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. கூட்டமைப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் தேர்தல் நடைபெறும் 19 சபை களையும் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனால், கூட்டமைப்பின் ஏகப்பிரதி நிதித்துவ நிலைப்பாடு அடிபட்டுப் போய்விடும். அல்லது கணிசமான வெற்றியைப் பெற்றுக் கொண்டால், ஈ.பி.டி.பி. யும் சில சபைகளைக் கைப்பற்றுகின்ற சூழல் சிலவேளை ஏற்பட்டாலும் கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு மாறான சூழலும் உண்டு என்ற உண்மை அம்பலத்துக்கு வந்துவிடும்.

இந்த தர்மசங்கடமான சூழலை எதிர்கொள்வதால் கூட்டமைப்பு பலத்த சவால்களை எதிர் கொண்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது. இதற்கிடையே, கூட்டமைப்பின் வேட்பாளரின் வீட்டுக்கதவில், நாயின் தலையை வெட்டி மாட்டிச் சென்றிருக்கும் நிகழ்வும், இன்னொரு கூட்டமைப்பு உறுப்பினரின் வீட்டுக்கு முன்னால் மலர்வளையம் வைக்கப்பட்டிருந்த தாகவும், இன்னும் சில வேட்பாளர்களின் வீடுகளுக்கு இரவில் கற்கள் எறியப்படுவதாகவும் நாளுக்கு நாள் குற்றம் சாட்டவும் செய்கின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக் களுக்கு மர்மநபர்களே காரணம் என்றும் கூறுகின்றனர். யார் இந்த மர்மநபர்கள் என்ற கேள்விக்கு கூட்டமைப்பினர் தமது பிரதான அரசியல் எதிரியாக வர்ணிக்கும் அமைச்சர் டக்ளஸ் தலைமையிலான ஈ.பி.டி.பிக் கட்சியை நோக்கி விரல் நீட்டவில்லை என்பது ஈ.பி.டி.பி.யைப் பொறுத்தவரை ஆறுதலான விடயமாகவே உள்ளது.

**கூட்டமைப்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் தேர்தல் நடைபெறும் 19 சபை களையும் முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனால், கூட்டமைப்பின் ஏகப்பிரதி நிதித்துவ நிலைப்பாடு அடிபட்டுப் போய்விடும்.**

கூட்டமைப்பு மீது எது நடத்தப்பட்டாலும் அது அவர்களுக்கு ஆதரவையும், அனுதாபத்தையும் தேடிக் கொடுத்துவிடும். ஒவ்வொரு முறையும், அனுதாப வாக்குகளுக்காகவே அவர்கள் முயற்சி செய்து வந்திருக்கின்றனர் என்பதால் இம்முறை அதற்கு இடமளித்துவிடக் கூடாது என்பதால் ஈ.பி.டி.பி.யும், ஏனைய சிறிய கட்சிகளும் மிகக் கவனமாக இருப்பது தெரிகின்றது. ஆகவே கூட்டமைப்புத் தாம் எதிர்பார்க்கும் அனுதாப அலைக்கான சூழலை தாமே உருவாக்க வேண்டும். அல்லது தேர்தல் குறித்த தமது நிலைப்பாட்டில், மாற்றங்கள் எதையேனும் செய்ய வேண்டும். அந்த மாற்றமானது மொத்தமாக தேர்தலிலிருந்து தாம் ஒதுங்கி விடுவது, அல்லது ஜூலை கலவரம், துக்க நாட்கள் அனுஷ்டித்து மக்கள் தேர்தலை விரும்பவில்லை என்று தமது பாணியில் எதை யாவது சொல்லி தப்பித் கொள்ள வேண்டும். அதுவும் சாத்தியப்படாது என்றால், அரசாங்கமும், வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பி.யும், தேர்தல் பிரச்சாரப்பணி களில் தமது செயற்பாடுகளுக்கு இடையூறாக நடந்து கொள்கின்றன என்றும் அதனால்தான் கூட்டமைப்பால் கணிசமான வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று காரணம் சொல்லக் கூடும். ஜே.வி.பி மற்றும் சுயேட்சைக் குழுக்கள் போட்டியிட்டாலும் அவை சபைகளையோ, கவனத்தை ஈர்க்கக் கூடிய உறுப்பினர்களைப் பெறுவார்கள் என்றும் நம்பமுடியவில்லை. ஐ.தே.கட்சி, சற்றுவித்தியாசமாகக் கூட்டமைப்பையும், ஈ.பி.டி.பியையும் விமர்சித்தபடி ஒன்றிலும் ஒட்டாத வகையில் தமது பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது. யாழ்ப்பாண மக்களின் பார்வையில் ஐ.தே. கட்சிக்கென்று தனியான வாக்கு வங்கியொன்று மில்லை. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை காரைநகரில் பெற்றுக் கொள்ள நேர்ந்தது. இது தனிப்பட்ட செல்வாக்கா கவே இருக்கக் கூடும். அந்த நிலையானது இந்தத் தேர்தலில் எத்தகைய நன்மையை ஐ.தே.கட்சிக்குப் பெற்றுக் கொடுக்கப்போகின்றது என்பது கேள்விக்குரிய தாகவே இருக்கப் போகின்றது.

தவிரவும், இப்பத்தி எழுதப்படும்வரை தேசியக் கட்சியென்றளவில் ஐ.தே.கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் முக்கியஸ்தர்கள் எவரும் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் தலைகாட்டவில்லை. இவற்றுக்கு மாறாக, அதாவது யாழ். குடாநாட்டில் ஐ.தே. கட்சி மேற்கொள்ளும் பிரச்சாரப் பணிகளுக்கு மாறாக ஐ.தே.கட்சியின் தலைமை, அரசுக்கு சார்பு இராஜதந்திரத்தை எடுத்திருப்பதும், பொன்சேகா தமிழ் மக்களுக்கு எவ்வித அரசியல் அதிகாரத்தையும் வழங்கக் கூடாது என்று பகிரங்கமாக தமது அடிமன நிலைப்பாட்டைக் கூறியிருப்பதும் ஐ.தே.கட்சியின் வேட்பாளர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் மத்தியில் அதிருப்தியையே நிச்சயம் ஏற்படுத்தி யிருக்கின்றது. இதன் எதிரொலிப்பு நிச்சயம் ஐ.தே.கட்சியின் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஐ.தே.கட்சி தொண்டர்கள் மத்தியில் அந்த ஏமாற்றமானது அவர்களைப் பிரச்சாரங் களில் சுறுசுறுப்பாக இயங்கவிடாமல் தடுத்துவிட்டுள்ளது. அரசாங்கம் வெற்றி பெற்றால் உடனடியாகவே வடக்கு மாகாண சபைக்கான தேர்தலையும் நடத்தக் கூடுமென்ற எதிர்பார்ப்புக்களும் உண்டு. இந்நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் களத்தின் போக்கையும், முடிவுகளையும் கண்காணிப்பதிலும், பதிவு செய்வதிலும் சர்வதேச மற்றும், தென்னிலங்கை ஊடகங்கள் நேரடியாக ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. வடக்குத் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெறுவதற்கு முயற்சிப்ப தற்கு இன்னொரு காரணம், சர்வதேச நெருக்கடிகளுக்கு பதிலடியாகவும், தேர்தல் வெற்றியை முன்னிறுத்த முடியும் என்ற கருத்தும் உண்டு.

ஜூலை 23 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இன்னும் ஒருவாரகால இடை வெளிக்குள் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியுமென்று நம்பவில்லை. ▫

# யாரை நம்பி எம்மை பின்னகரச் சொன்னார்கள்?

**யுத்தம்** இறுகியவண்ணம் இருக்கும் போது நாம் இனி யுத்தத்தில் வெல்லுவது சாதகமற்றது எனத் தெரிந்து கொண்ட தலைமை, நமது மக்களையும், போராளிக ளையும் இருப்பிடங்களை தக்கவைப்பதற்காக மேற்குலக நாடுகளில் செயற்படும் எமது பொறுப் பாளர்கள் மற்றும் இந்தியாவில் எமக்கு ஆதரவாக செயற்படும் தலைவர்கள், எமது உள்ளூர் சில அரசியற் கட்சித்தலைமையுடனும் தொடர்பு கொண்டு பாதுகாப்பது பற்றியும் அடுத்த நகர்வு பற்றியும் பேசியது.

இதற்கு அவர்கள் பலர் கூறிய கருத்து, போரை இனியும் தொடரவேண்டாம் ஒரு முடிவுக்கு கொண்டுவரும்படியும், சொல்லப்பட்டதாம். இதனால் அவர்களது சொல்லை சில தளபதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் எமது போராளி களுக்குள் முரண்பாடு ஏற்படத்தொடங்கியது. முரண்பாடு ஏற்படக் காரணம், கிளிநொச்சி விழ்ந்தபின் போரைத் தொடர்ந்துகொண்டு செல்வதில் அர்த்தமில்லை என எமது புலனாய்வு தகவல்கள் எடுத்து கூறியும் புலம்பெயர் நாட்டு பொறுப்பாளர்களின் கண்துடைப்பு பேச்சுக்களை நம்பி இறுதிவரை போராட பணிக்கப்பப்பட்டது. இது அநேக போராளிகளின் மனதை மாற்றிவிட்டது. இதுவும் நம் போராட்டம் விழ்ச்சியடைய ஒரு காரணம். இது எம் அத்தனை போராட்ட கனவுகளையும் புதைத்துவிட்டது.

மேற்குலக நாடுகளில் நமது செயற்பாடுகளை கையாண்டுவந்த கே.பி மற்றும் நெடியவன், காஸ்ரோ போன்ற பொறுப்பாளர்கள் நமக்காக நமது போராட்டத்தை காக்கும்படி புலம்பெயர் தேசத்தை கேட்ட வண்ணம் இருந்ததாகவும் அவர்கள் விரைவில் ஒரு நல்ல தீர்வு ஏற்படுத்தி தருவார்கள் எனவும் முதலில் நமக்கு தகவல் வந்தது. மேலும் இந்த நடவடிக்கைக்கு சாதகமாக புலிகளைத் தாக்குதல்களை குறைத்துக்கொள்ளும் படியும் சொல்லப்பட்டது. நம்மை இந்த காலகட்டத்தில் மேற்குலகில் இருந்த எமது அந்த பொறுப்பாளர்கள் வழிநடத்த தொடங்கிவிட்டனர் .இது தான் நாம் அத்தனையையும் இழந்து மண்டியிட வைத்த

> யாரை நம்பி எம்மை பின்னகரச் சொன்னார்கள்? எதற்காக இப்படி செய்தார்கள்? நமது தலைமைக்கு எப்படி குழிபறிப்பு நடந்தது? இந்நிலையில் தமிழ் நாட்டு அரசியல் வாதிகளும், மற்றும் பாதிரியார் ஒருவர் . இந்திய மத்திய அமைச்சர்கள் சிலரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர். நமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொன்னவை என்ன? செய்தவை என்ன? மேற்குலகின் நம் பொறுப்பா ளர்களாக இருந்த கே.பி. காஸ்ரோ. நெடியவன். போன்றோரும் மற்றைய நம் புலம் பெயர் தேச நடவடிக்கை பொறுப்பாளர்களும் செய்தது என்ன? என்ன சொல்லி நம் தலைமையை யும் போராட்டத்தயும் குழிபறித்து விழ்த்தினர்?

அந்த பொறுப்பாளர்கள் யாரை நம்பி எம்மை பின்னகரச்சொன்னார்கள்? எதற்காக இப்படி செய்தார்கள்? நமது தலைமைக்கு எப்படி குழிபறிப்பு நடந்தது? இந்நிலையில் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும், மற்றும் பாதிரியார், இந்திய மத்திய அமைச்சர்கள் சிலரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், நமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொன்னவை என்ன? செய்தவை என்ன? மேற்குலகின் நம் பொறுப்பாளர்களாக இருந்த கே.பி, காஸ்ரோ, நெடியவன், போன்றோரும் மற்றைய நம் புலம் பெயர் தேச நடவடிக்கை பொறுப்பாளர்களும் செய்தது என்ன? என்ன சொல்லி நம் தலைமையை யும் போராட்டத்தையும் குழிபறித்து வீழ்த்தினர்?

எப்படி எல்லாம் நமது நகர்வுகளை முடக்கி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து கொன்று குவித்தனர் நம் பொறுப்பாளர்களை? நமக்குள் இருந்து கொண்டே நமது தகவல் களை யார் யார் அரசுக்கு கொடுத்தனர்? அவர்கள் உள்ளூர் அரசியல் வாதிக ளுடன் பேசுவதாக சொல்லி எப்படி அரச கைப்பொம்மை களாகி நமது கட்டளைப் பீடத்தை சிதைத்தனர்? எம் வான்படை கண்ட தோல்வி தான் ஏன்? தென்பகுதி களில் எந்தவிதமான தாக்குதல்களையும் செய்யவிடாது தடுத்தது யார்? என்ன சொல்லி தடுத்தனர்? சரணடைய சொன்னது யார்? நமது தலைமை அதற்கு எப்படி இணங்கியது? அந்த இறுதி நாட்களில் தலைமையை காப்பாற்ற புலிகள் செய்த நடவடிக்கைகள் என்ன? அதற்கு கே.பி, நெடிய வன், காஸ்ரோ செய்தது என்ன? புலம்பெயர் செய்தியாளர்கள் செய்தது என்ன? அதுபற்றி சொல்லுகிறேன். கேளுங்கள் ஆனால் நான் இதில் யாரையும் குற்றம் சொல்லவரவில்லை. நடந்த சம்பவத்தை மட்டும் சொல்லுகிறேன் மக்களே! நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். அந்த நாட்களில் நடந்த சிலவற்றை.

2006 இல் மூதூர் வரையும், அதன் பின்னர் யாழ்ப்பாணம் மண்கும்பான் வரையும் சென்று திடீரென திரும்பி வந்தனர் எமது போராளிகள். அப்போது ஏன் இத்தனை இழப்புக ளோடு திரும்பி வந்தனர் என்ற கேள்வி பலர் மனதி லும் எழுந்ததுதான்.

(தொடரும்...)



புலிகளின் மூத்த தளபதி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம்

நன்றி : இணையம்

---

## தமிழக அரசியல்

# தர்ம அடிக்கு தயாராகும் தியேட்டர் உரிமையாளர்கள்

கடந்த ஆட்சியின் போது திரையுலகில் "மிரட்டல் ராஜாவாக" திகழ்ந்ததாகக் கூறப்படும சன் பிக்சர்ஸ், கடந்த சில தினங்களாக தனித்தனிப் புகார்களில் சிக்கியிருந்தது. தற்போது, சன் பிக்சர்ஸ் நிறுவனத்துக்கு எதிராக ஒரு திரைத்துறை சங்கமே புகார் கொடுக்கவுள்ளது.

திரைப்படத் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் என தனித்தனி பார்ட்டிகளால் தொடுக்கப்படும் வழக்குகள், வெளியே செட்டில் செய்யப்படக் கூடியவை. ஆனால், ஒரு குழுவாகத் தாக்கல் செய்யப்படும் வழக்கு அப்படியல்ல.

தமிழ்நாடு தியேட்டர் உரிமையாளர்கள் சங்கமே, சன் பிக்சர்ஸ்"க்கு எதிரான கூட்டு நடவடிக்கையை எடுக்க முடிவெடுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. இதற்கான ஏற்பாடுகளில் சங்க இணைச் செயலர் ஸ்ரீதர் இறங்கியிருப்பதாகவும், கூறப்படுகின்றது.


ஆரம்பத்தில் எந்திரன் திரைப் படத்தைத் திரையிட்டது தொடர்பில் சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் திரிபாதியிடம், தியேட்டர் உரிமையாளர்கள் ஆறு பேர், மாத்திரம் மனு அளித்திருந்தனர். அவர்களது மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன், இந்த விவகாரம் நீதிமன்றம் செல்லும் பட்சத்தில், தியேட்டர் உரிமை யாளர்கள் ஆறு பேருக்கும் சாதகமாகவே வழக்கு முடியும் எனவும் நீதிமன்ற வட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபரம் பரவி யதையடுத்து, வெவ்வேறு தியேட்டர் உரிமையாளர்கள் தனித்தனியாக புகார் கொடுக்கத் தயாராகிய நிலையில்தான், தமிழ்நாடு தியேட்டர் உரிமையாளர்கள் சங்கம் இதில் தலையிட்டது என்று கூறப்படுகின்றது.

இதுதொடர்பாக, வடபழனியில் (சென்னை) தியேட்டர் உரிமையாளர்களின் கூட்டம் ஒன்று நடை பெற்றது. அதில் எடுக்கப்பட்ட முடிவில், வெவ்வேறாக புகார் கொடுப்பதைவிட, சன் பிக்சர்ஸ்"க்கு எதிராக கூட்டுப் புகார் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட் டுள்ளது. தனித்தனியாக (அடை யாளம் தெரி யும் விதத்தில்) அடிப்பதைவிட, கும்பலாகச் சேர்ந்து தர்ம அடிக்கப் பார்க்கிறார்கள் இவர்கள்! அவர்களையும் குறை சொல்ல முடியாது. நாளைக்கே ஆட்சி மாறினால், இவர்கள் தியேட்டரை வெளி மாநிலத்துக்கா தூக்கிச் செல்ல முடியும்?

ரிஷி

# காசநோயிற்கான சிகிச்சை



**சளியில்** கிருமி இல்லாதுபோ[illegible] வீதம், ஆரம்பத்தில் சளியில் கிருமி காணப்பட்டவற்றில் இரண்டு மாதத்தில் கிருமி காணப்படாததன் 100% ஆல் தரப்படும்.

வகை I சிகிச்சை 3 மாதத்தில் சளியில் கிருமி இல்லாது போதல் 90% மேல் இருக்கும்.

சளியில் கிருமி இல்லாது போகும் வீதம் குறைவாக இருப்பதற்கான காரணங்களும், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளும்.

1. நோயாளி சிகிச்சை பெற்றுக் கொண்டு இருப்பார். ஆனால் 2 ஆம் மாத முடிவில் சளிப்பிரிசோதனை செய்யப்படவில்லை. 2 ஆம் மாத முடிவில் சளியில் கிருமி காணப்படின் நான்கு மருந்துகளை மேலும் 1 மாதத்திற்குக் கொடுத்தல் வேண்டும். எனவே, 2 ஆம் மாத முடிவில் கட்டாயம் சளிப்பரிசோதனை செய்யப்படல் வேண்டும்.

02.மருந்தினை நோயாளி எடுத்தலை நேரடியாக அவதானிக்கலாம். நோயாளி ஒழுங்காக மருந்து எடுக்கமாட்டார். இதனால் சளியில் கிருமி காணப்படும். எனவே, நேரடியாக அவதானித்து மருந்து எடுத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

03.அதிகமான நோயாளிகள் சிகிச்சையின் ஆரம்பத்திலேயே மருந்து எடுத்தலைக் கைவிட்டுவிடுகின்றனர். எனவே, நோயாளிகளுக்குத் தொடர்ச்சியாக மருந்து எடுத்தலின் முக்கியத்துவத்தை அறிவூட்ட வேண்டும். மருந்து எடுத்தலைக் கைவிடுவோரை உடனடியாகக் கண்டுபிடிக்கும் செயல்முறை இருத்தல் அவசியம்.

04.ஏற்கெனவே சிகிச்சை அளிக்கப்பட்டவர்களுக்கு மீளவும நோய் ஏற்படும்போது, தவறாது வகை II சிகிச்சை அளிக்கப்படல். சரியான சரிதத்தினை நோயாளியிடம் இருந்து பெறுவதால் இதனைத் தவிர்க்கலாம்.

05.மீளவும் நோய் ஏற்படும்போது வகை I மருந்துகள் தவறாகப் பயன்படுத்தல், முதலில் நோய் ஏற்பட்டு சிகிச்சை பெற்றவர்களுக்கு வகை II மருந்துச் சேர்க்கையே கொடுக்கப்படல் வேண்டும்.

06.சளிப்பரிசோதனையில் (+) எனக் கண்டறிந்தால் சளிப் படலத்தினை மீளவும் பரிசோதித்தல்.

07.இறப்பு வீதம் அதிகமாக இருத்தல். நோய் கடுமையான பின் சிகிச்சைக்கு வருவதால் இறப்புவீதம் அதிகமாக இருக்கும்.

08.தொடக்கத்தில் சளிமாதிரியில் அதிக கிருமிகள் காணப்படல். (3+)

3+ உள்ளவர்களில் 2 மாதங்களின் பின்பும் (+) இருக்கும்.

மேலதிகமாக ஒரு மாதத்திற்கு மருந்து கொடுக்கப்படும்போது (-) ஆக மாறும். ஆரம்பத்திலேயே நோயாளிகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதால் இவை குறைவடையும்.


***சிகிச்சை பற்றிய காலாண்டு அறிக்கை***

சளியில் கிருமி காணப்படும். காசநோயாளரின் குணமடையும் வீதம் 90%ற்கு மேல் இருத்தல் வேண்டும்.. சிகிச்சை வெற்றியளிக்கும் வீதமானது, குணமடையும் வீதத்தினதும், முற்றாகச் சிகிச்சை பெற்றோரின் வீதத்தினதும் அளவாகும்.

இறப்பு வீதம் அதிகரிப்பதற்கான காரணங்களில் ஒன்று பிந்திய நிலையில் நோயினைக் கண்டறிதல் ஆகும். சிகிச்சை பலனளிக்காது இறப்பர்.

சிகிச்சை பலனளிக்காமைக்குக் காரணம் நேரடியாக அவதானிக்காது விடல். மருந்துகள் மீளத் தொடங்கும்போது வகை II இற்குப் பதிலாக வகை I மருந்துகளைத் தவறுதலாகக்கொடுத்தல்.

நோயாளி தொடர்ந்து எல்லா மருந்துகளையும் எடுக்காமை. மருந்திற்கு ஆரம்ப நிலையிலேயே எதிர்ப்பு உள்ள கிருமிகள் காணப்படல் என்பனவாகும்.



**Dr. சி. ஜமுனானந்தா**

***இடையில் கைவிடுவதற்குக் காரணம்***

சரியான முறையில் நோயாளிகள் அறிவூட்டப்படாமை, நட்பாகப் பழகாமை, மருந்துகள் ஒழுங்காகச் சென்றடையாமை என்பனவாகும்.

வேறு இடங்களுக்கு மாற்றுதல் அதிகமாகக் காணப்படின் சிகிச்சைக்கு வராதவர்களுக்கும் தவறுதலாக இதில் அடங்கலாம்.

***ஏ. ஒழுங்கான மருந்து விநியோகத்தினையும், ஏனைய பொருட்களின் விநியோகத்தினையும் மேற்கொள்ளல்.***

காசநோய்க்கான சிகிச்சையிலும், நோய்த்தடுப்பிலும், முக்கியமான மருந்துகளும், அதனுடன் தொடர்பான பொருட்களினதும், ஆய்வுகூடப் பொருட்களினதும் விநியோகமாகும். அவற்றுள் பின்வருன முக்கியமானவை.

01.காசநோயினைக் குணப்படுத்தும் மருந்துகள்.

02.ஊசிகளும் சிறிஞ்சிகளும்.

03.சளியினைச் சேகரிக்கும் பாத்திரம். சளிப்படலத்திற்குரிய ஸ்சிலைட் (கண்ணாடித் தகடு)

04.ஆய்வுகூடப் பதார்த்தங்கள்.. நுணுக்குக்காட்டி.

05.பதிவுப் புத்தகங்கள்.

இவை சரியான முறையில் சேமிக்கப்பட்டு, பாதுகாப்பாக விநியோகிக்கப்படல் வேண்டும்.

***ஐ. மேற்பார்வையிடல் தரிசிப்புக்களை நடைமுறைப்படுத்தல்***

வைத்தியசாலைகளிற்குச் சென்று நோயாளிகள் இனம் காணப்படுகின்றனரா? என மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். காசநோயாளருடன் தொடர்புடையோரிலும் தொற்று உள்ளதா எனப் பரிசோதிக்கப்படுகின்றனரா என்பவற்றை அவதானித்து ஊக்கப்படுத்தல் வேண்டும். வைத்தியசாலைகளில் சுகாதார உத்தியோகத்தர்கள், காசநோயாளர்களைக் கண்டறிதலில்,

01.காசநோய் இருக்குமென ஐயம் உள்ளோரைச் சரியாக இனம் கண்ட சளிப்பரிசோதனைக்கு அனுப்புதல் வேண்டும்.

02.சளிப்பரிசோதனைக்குரிய படிவத்தினை நிரப்புதல் வேண்டும்.


03.சளியினைச் சேகரித்து, விபரங்களைப் பாத்திரத்தின் பக்கத்தில் ஒட்டி, நுணுக்குக்காட்டிச் சோதனைக்கு அனுப்புதல் வேண்டும்.

04.காசநோயாளருடன் தொடர்புடையோரில் நோய் அறிகுறிகள் காணப்படின். மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(தொடரும்...)

# கண்ணதாசனின்
## அர்த்தமுள்ள இந்துமதம்

பாகம் - 09



176

**இரண்டாயிரம்** ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்து நாட்டில் ஒரு விவசாயியைக் காதலித்த குற்றத்திற்காகக் கொலை செய்யப்பட்டாள் ஒரு பதினாறு வயது ராஜகுமாரி.

அவளை அடைத்திருந்த முதுமக்கள் தாழியை அண்மையிலே கண்டுபிடித்திருக்கிறார்கள்.

"ஆயிரம் வருஷம் கழித்து அவள் மறுபடியும், எகிப்து மன்னனைக் கட்டிக்கொண்டாள்" என்றும், "அந்த விவசாயிதான் எகிப்து மன்னாகப் பிறந்தான்" என்றும் ஒருவர் எழுதியிருந்தார்.

இந்தக் கதைகள் உண்மையோ, பொய்யோ, ஜீவன்களைச் சிருஷ்டிக்கும் வேலையைச் சுலபமாக்கிக்கொள்ள ஆண்டவன் மறுபிறப்பை உண்டாக்கி இருக்கிறான் என்பதை நம்பலாம்.

ஆக, சொர்க்கம், நரகம், மறுபிறவி என்பதெல்லாம் வெறும் ஏமாற்று வித்தைகள் என்று கேலி பேசுவதைவிட, வாழ்க்கைச் சாலையை ஒழுங்குபடுத்திக்கொடுக்கும் அற்புதங்கள் என்று ஏற்றுக்கொள்வதில் நியாயம் உண்டு.

அது சரி, ஜீவன்தான் மறுபடி பிறக்கிறதே. மறுபடி பிறந்து அது பூமியில் தண்டனையை அனுபவிக்கப் போகிறதே, அதற்குச் சொர்க்கமும் நரகமும் எதற்கு என்ற கேள்வி எழும்.

பகவத்கீதைப்படி, உத்தராயணத்தில் செத்தவர்களுக்கு மட்டுமே பிறப்பு உண்டு. தட்சிணாயணத்தில் செத்தவர்களுக்கு இல்லை.

தட்சிணாயணத்தில் செத்தவர்கள் பாவம் செய்தவர்களாக இருந்தால், அவர்களைக் கொண்டுபோய் வைக்க நரகமும், புண்ணியவான்களைக் கொண்டுபோய் வைக்கச் சொர்க்கமும் இருக்கின்றன.

"சொர்க்கத்தில் சுகபோகப் பிருந்தாவனம் இருக்கும்" என்கிறார்கள். நரகத்தில் எண்ணெய்க் கொப்பறையும் செக்கும் இருக்கும் என்கிறார்கள். இவையெல்லாம் உண்மையா?

இவையெல்லாம் மனிதனின் கற்பனா வடிவங்கள்.

சொர்க்க-நரகம் என்பது இறைவனின் நீதிமுறை என்றே எனக்குப் புரிகின்றது. ஆனால், அதன் அமைப்பை யாரும் பார்த்ததில்லை.

ஆவிகளின் உலகத்தில் ஏதோ ஒரு இருப்பிடம் இருக்கத்தானே செய்யும்? அதற்கொரு வடிவம் கற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

சினிமாக்காரர்கள் அரண்மனை செட் போடும்போது அவரவர் மனோதர்மத்திற்கேற்பப் போடுவது போல், சொர்க்க நரகத்தையும் பலர் கற்பனை செய்திருக்கிறார்கள்.

நீதிமன்றம் எப்படி இருக்கும் என்பது. நீதிமன்றத்துக்குப் போகும்வரை யாருக்கும் தெரியாது. எல்லாரும் போய்ப் பார்த்த பிறகுதான் தெரிந்துகொள்ள முடியும்.

தண்டனையோ பரிசோ எதுவானாலும் சரி, அவற்றில் இருந்து தப்ப இக வாழ்க்கையில், 'சூதாடுவதையும், குடிப்பதையும், தாசி வீட்டுக்குப் போவதையும் பாவங்கள்' என்று நான் கருதவில்லை. அவை மனிதன் தனக்குத்தானே விளைவித்துக்கொள்ளும் தீங்குகள்.

அடுத்தவனைக் கெடுப்பது. துரோகம் செய்வது, பிறன் மனை இச்சிப்பது போன்றவையே பாவங்கள் என்று இந்துப் புராணங்கள் கூறுகின்றன.

மாமிசம் உண்பதைக் கூட 'மதவிரோதம்' என்று அவை கூறியதில்லை.

சடலத்தைத் தூக்கிச் செல்லும்போது, 'ஐயோ' புண்ணியவான் போய்விட்டாரே!' என்று பத்துப் பேர் சொன்னால், அந்த வார்த்தைகளே சொர்க்கத்தின் படிக்கட்டுகள். 'சண்டாளன் போய்விட்டான்' என்றால் அது நரகத்தின் படிக்கட்டுகள்.

அந்த நல்ல பெயரையே மனிதன் தேடிக்கொள்ள வேண்டும்.

இந்துக்களின் வேதங்களும், புராணங்களும் அதையே வலியுறுத்துகின்றன.

இதோ காஞ்சிப் பெரியவர் பேசுகிறார்.

'மற்ற மதங்களில் இல்லாத பல அம்சங்கள் நம் மதத்தில் இருக்கின்றன. அதில் கர்ம கொள்கை என்று ஒன்று சொல்கிறார்கள். நம் மதத்திலிருந்தே வந்த பௌத்தம் போன்ற மதங்கள் இதை ஒப்புக் கொண்டாலும். ஏனைய மதங்களில் இந்தக் கொள்கை இல்லை.

'கர்மா தியரி' என்றால் என்ன?

எந்தச் செயலுக்கும் பிரதியாக ஒரு விளைவு உண்டு. Cause and effect என்பதாகும். action and reaction என்பதாகவும் இவை தவிர்க்க முடியாத விதிகளாக இருக்கின்றன என்றும் 'பிசிக்ஸில்' சொல்கிறார்கள். பௌதிகத்தில் சொல்வதையே மனுஷ்ய வாழ்க்கைக்கும் பொருந்தி கர்மக் கொள்கையை நம் ஆன்றோர்கள் கூறுகிறார்கள். பிரபஞ்சத்தில் ஜடமான பூதங்கள் போலவே சைதன்யம் என்ற அறிவுள்ள ஜீவன்களும் அடக்கம். இவை ஒன்று சேர்ந்தது தான் லோக வாழ்வு. எனவே ஒன்றுக்கு இருக்கும் நியதி, தர்மம் இன்னொன்றுக்கும், இருக்கத்தான் வேண்டும். மனிதனின் ஒவ்வொரு கர்மாவுக்கும் விளைவாக ஒரு பலன் உருவாக்கித்தான் தீர வேண்டும் என்பதே Karmatheory. 'பாப கர்மம்' செய்தால் அதற்கான தண்டனையை மனுஷ்யன் அனுபவிக்க வேண்டும். புண்ணிய கர்மம் செய்தால் அதற்கான நற்பலன் அவனை வந்தடையும்' என்கிறது நம் மதம்.

இம் மாதிரிப் பாப-புண்ணியக் கர்மங்களை மனிதன் அனுபவிக்க வேண்டும் என்பதாலேயே அவனுக்கும் பல பிறவிகள் உண்டாகின்றன என்கிறது நம் மதம். நல்லது செய்ய வேண்டும். கெட்டது செய்யக் கூடாது என்பதைச் சகல மதங்களும் சொன்னாலும், அவை நம் மதம் மாதரி இத்தனை அழுத்தம் கொடுத்து, காரணம். விளைவு (cause and effect) தொடர்பைச் சொல்லவில்லை. மறுபிறப்புக் கொள்கையை (rweincornation Theory) மற்ற மதங்கள்- பாரத தேசத்தில் தோன்றாத மற்ற மதங்களில் எதுவுமே - சொல்லவில்லை. அது மட்டுமில்லை, இதற்கு மாறாகப் பல தினுசான கருத்துக்களைச் சொல்கின்றன. ஆன படியால் அந்த மதஸ்தர்கள் மனிதனுக்குக் கர்மா தீகிறவரை பல ஜன்மங்கள் உண்டு என்ற நம் கொள்கையைப் பலமாக ஆட்சேபிப்பார்கள்.


பொதுவாக அந்நிய மதஸ்தர் கருத்து என்னவென்றால், 'இந்த ஒரே ஜென்மத்தோடு மனுஷ்யனுக்குப் பிறவி தீர்ந்து விடுகிறது. இந்த ஜன்மா மதஸ்தர் கருத்து என்னவென்றால், 'இந்த ஒரே ஜென்மத்தோடு மனுஷ்யனுக்குப் பிறவி தீர்ந்துவிடுகிறது. இந்த ஜன்மா முடிந்த பின் அவன் உயிர் என்றைக்கோ ஒரு நாள் சுவாமி கூறுகிற தீர்ப்பைக் கேட்பதற்காக ஓரிடத்தில் போயிருக்கும்.

தொடரும்...

# மக்களுக்குப் புரியாத இராஜதந்திரம்

இலங்கையில் தற்போது ராஜதந்திர நகர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருகின்றன. இதில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திரம் இன்று முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்திய அரசாங்கம் முன்வைத்து நடைமுறைப்படுத்த முயற்சித்த 13 ஆவது அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை அமுல்செய்வது தொடர்பில் இலங்கையே முடிவுசெய்யவேண்டும் என்று இந்தியா கூறியிருப்பது அதன் இராஜதந்திர முன்னகர்வை எடுத்துக்காட்டுகிறது.

ஏனெனில் இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வுக்கு 13ஆம் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் மற்றும் பிளஸ் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார். எனவே அந்தப் பொறுப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமத்துவதன் அடிப்படையிலேயே இந்தியாவின் கருத்து அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.



**இலங்கையின் எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிர மசிங்க, ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு இலங்கை வரலாற்றில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சாதாரணமாக நாடு ஒன்றின் எதிர்க்கட்சி தலைவர் ஒருவருக்கு ஐக்கிய நாடுகளின் செயலாளர் ஒருவரைச் சந்திக்கமுடியாது. எனினும் ரணில் விக்கிரமசிங்க, பான் கீ மூனைச் சந்தித்தமை முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது. இதற்கு மாற்றுக் காரணம் ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது, ரணில் விக்கிரம சிங்க, தனிப்பட்ட எதிர்க் கட்சி தலைவர் என்ற அடிப்படையில் அல்லாமல், இலங்கை அரசாங்கத்தின் சார்பாகவே சந் தித்துள்ளார்**

13 ஆவது சீர்திருத்தத்தில் உள்ள காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களையே வழங்கமுடியாத நிலையில் இலங்கை இருக்கும்போது அதற்கு மேலாகச் சென்று எவ்வாறான தீர்வு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படப்போகிறது என்பதை இந்தியா தூரத்தில் இருந்து பார்க்கும் ஒரு இராஜதந்திரமே தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்தியா முன்னர் இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வந்தது எனினும் தற்போது சீனாவுடன் இலங்கை நெருங்கிய உறவைக் கொண்டிருப்பதால் முன்னரைப்போன்று அழுத்தத்தை கொடுக்கமுடியாத நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே தமது நாட்டுக்கு இலங்கையால் கிடைக்கவுள்ள சொந்த நலன்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இனப்பிரச்சினை விடயத்திலும் காய்நகர்த்தும் இராஜதந்திர நடவடிக்கையையே இந்தியா மேற்கொண்டு வருகிறது. எனினும் தமிழகத்தில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் ஏதாவது அரசியல் அழுத்தங்கள் ஏற்படுமாயின் சிலவேளையில் இந்தியாவின் இராஜதந்திரத்தில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கு அடுத்தபடியாக இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டு தொடர்பிலும் இந்தியா இராஜதந்திர நகர்வு ஒன்றை முன்னெடுத்துள்ளது. எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்படும் போது இந்தியா எவ்வாறு நடந்துக்கொள்ளும் என்ற கேள்விக்கு இந்திய வெளியுறவுச்செயலளார் நிருபமாராவ் தெரிவித்துள்ள பதிலில், அந்த விடயம் தொடர்பில் இலங்கையே பதில்சொல்லவேண்டும் என்று தமது பொறுப்பை தட்டிக்கழித்துள்ளது.

எனவே இங்கு தமிழர்களுக்கு சார்பாக அல்லது இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்தியா உதவியளிக்கும் என்று யாரும் எதிர்ப்பார்த்திருந்தால் அதற்கு முற்றுப்புள்ளி வைத்ததாகவே கருதவேண்டியுள்ளது. மறுபுறத்தில் இங்கிலாந்தின் பாதுகாப்பு செயலாளர் 'லியாம் பொக்ஸ்' இலங்கை வந்து சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

இந்த சொற்பொழிவின் போது, இலங்கை மீது சர்வதேசம் சுமத்தியுள்ள போர்க்குற்றச்சாட்டுக்கு இலங்கை தீவிரமான கவனத்தைச் செலுத்தவேண்டும் என்று கோரியுள்ளார். இங்கிலாந்து அரசாங்கத்தின் கொள்கையாக அது இருக்கின்ற போதும் லியாம் பொக்ஸ், இலங்கையின் நண்பன் என்ற அடிப்படையிலேயே இலங்கைக்கு அழைக்கப்பட்டு சொற்பொழிவுக்கும் அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் லியாம் பொக்ஸ ின் கருத்து இலங்கை அரசாங்கத்தை சங்கடத்திற்கு உட்படுத்தியிருக்கும் எனினும் இங்கிலாந்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு அந்தநாட்டு அரசாங்கம் உரிய பாதுகாப்பை வழங்கமுடியவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காட்டுவதற்கு இலங்கை இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தியுள்ளது என்பதைக் காணலாம். இதேவேளை இலங்கையின் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பு இலங்கை வரலாற்றில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சாதாரணமாக நாடு ஒன்றின் எதிர்க்கட்சி தலைவர் ஒருவருக்கு ஐக்கிய நாடுகளின் செயலாளர் ஒருவரைச் சந்திக்கமுடியாது. எனினும் ரணில் விக்கிரமசிங்க பான் கீ மூனைச் சந்தித்தமை முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது. இதற்கு மாற்றுக் காரணம் ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க, தனிப்பட்ட எதிர்க்கட்சி தலைவர் என்ற அடிப்படையில் அல்லாமல், இலங்கை அரசாங்கத்தின் சார்பாகவே சந்தித்துள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. ஏனெனில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பான் கீ மூனை சந்தித்த போது இலங்கையின் ஐக்கிய நாடுகளுக்கான பிரதி வதிவிடப்பிரதிநிதி சவேந்திர சில்வா மற்றும் அமெரிக்காவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் ஆகியோரும் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர். எனவே இங்கு ரணில் விக்கிரமசிங்க தெரிந்தும் கூட இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை அல்லது இலங்கைக்கு எதிரான முனைப்புகள் குறித்து பேசியிருப்பார் என்று கருதமுடியாது.

எனவே இங்கும் இராஜதந்திர விளையாட்டு ஒன்று இடம்பெற்றுள்ளது. அதாவது உள்நாட்டில் கீரியும், பாம்புமாக உள்ள இலங்கையின் ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் நாட்டுக்காக பான் கீ மூனை சந்தித்தமை உண்மையில் நாட்டை பொறுத்தவரையில் முக்கியமான அதுவும் வரவேற்கக்கூடிய நிகழ்வாகவே கருதப்படவேண்டும் இந்த முனைப்பு தொடருமானால் இலங்கைக்கு எதிராக வெளிநாட்டு சக்திகளின் ஆதிக்கத்துக்கு என்றுமே வழியிருக்காது என்பது திண்ணம் எனினும் பான் கீ மூனிடம் ரணில் விக்கிரமசிங்க, கூறிய ஒரு கருத்து மீண்டும் இலங்கையில் ஆளும் எதிர்க்கட்சிகளுக்கு இடையில் இணக்கம் ஏற்படாது என்ற நிலைப்பாட்டை எடுத்தியம்பியுள்ளது. வரலாற்றில் அசோக மன்னர் போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டபோது அது தொடர்பில் துக்கப்பட்டமையை போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் நடந்துக்கொள்ளவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார் எனினும் இறுதிப்போரில் பொதுமக்களுக்கு இழப்புகளே ஏற்படவில்லை எனக்கூறி வரும் இலங்கை அரசாங்கம் இதனை எவ்வாறு ஏற்றுக்கொள்ளும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். ■

**அமலன்**

## அதிரடி அய்யாத்துரை



**மேற்கு** நாடுகளுக்கு விட... அடிச்சுப்போட்டு வந்திருக்கிற அணில் அண்ணாச்சி போன இடத்தில மூன் ஐயாவைச் சந்திச்சு குசலம் விசாரிச்சப்போட்டு வந்திருக்கிறாருங்கோ. மூன் ஐயா அண்ணையைப் பார்த்து நாட்டில நிலமை எப்படி இருக்குது? சனல்-4 குடுத்த வைத்தியம் எப்படி இருக்கிது எண்டெல்லாம் விசாரிச்சிருக்கிறாருங்கோ. எல்லாத்துக்கும் பௌவியமாப் பதில் சொன்ன அணில் அண்ண கிடைச்ச சந்தில சிந்து பாடிப்போட்டு வந்திருக்கிறாருங்கோ.உவற்ற உந்தச் சிந்து நாட்டில இரண்டு தரப்பின்ர எரிச்சலையும் கிளப்பியிருக்காமுங்கோ.

அதாவது, மிஸ்டர் தருஸ்மன் குருப் தயாரிச்ச அறிக்கை சம்மபந்தமா விளக்கமளிக்கிறதுக்கு அதிகாரத்தரப்புக்குக் கால அவகாசம் கொடுக்க வேணுமெண்டு மூன் ஐயாட்ட கோரிக்கை வைச்சவராமுங்கோ. உது அதிகாரத்தரப்புக்கு எரிச்சலாயிருக்குதாமுங்கோ. அப்படி எதுவும் நடக்கவேயில்லையெண்டு அதிகாரத்தரப்பு சொல்லிக்கொண்டிருக்க, அணில் அண்ணையின்ர உந்தக் கருத்து தப்பு நடந்ததுதான், விசாரிக்கிறதுக்கு ரைம் குடுங்கோ எண்டமாதிரி இருக்குதெண்டு அதிகாரத்தரப்பு உறைப்பில இருக்கிறதாமுங்கோ. அதே மாதிரி ரண்டு எழுத்துக்காரரின்ர விசுவாசியளும் அணிலின்ர கருத்தால குமுறினமாமுங்கோ. "போனவர் அதிகாரமானவரைப்பிடிச்சு உள்ளுக்கை போடச் சொல்லி மூன் ஐயாட்டச் சொல்லாம சாட்டுக்கு அவகாசம் கேட்கிறாரே" எண்டுறதுதான் மற்றத் தரப்பின்ர விவாதமாமுங்கோ.

அது சரி பாம்புக்குத் தலையையும், விலாங்குக்கு வாலையும் காட்டிமாப்போல இரட்டை வேடம்போட்டு பழக்கப்பட்டுப்போன உடம்பல்லே இது திருத்தவே முடியும்.

**புலிகளை** அழிச்ச பெருமைக்குரிய சிறைவாழ் தள்பதியார் சிறுபான்மை இனத்துக்கு அரசியல் தீர்வு தேவையில்லையெண்டு திருவாய் மொழிந்திருக்கிறாராமுங்கோ. உவர் இப்ப மட்டுமில்லையுங்கோ. முன்னம் தளபதியாராய் பொறுப்பில இருந்த காலத்திலையும் சிறுபான்மை இன மக்களை மோசமாய்த்தான் சொல்லிக்கொண்டு இருந்தவருங்கோ. சண்டை முடிஞ்சு அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசைவர களத்தில குதிச்சவர்.

அப்ப உந்த கூத்தமைப்புக்காரர் என்ன சொன்னவையள். தளபதியார்நல்லவர், வல்லவர்.சிறுபான்மை மக்களிடம் அன்பானவர் ஏதோ பதவியில இருக்கேக்க ஒண்டு ரண்டு வார்த்தையல் மிஸ்யூஸ் பண்ணிப்போட்டார். எனிமேல் அப்படி நடக்கமாட்டார். அதிகாரத்துக்கு வந்தவுடன் அதிகாரங்களையெல்லாம அள்ளித் தரப்போறார் எண்டுதானே சொன்னவையள்.

பிறகு எலெக்சனும் முடிஞ்சுது. தளபதியாரும் கம்பி எண்ணப்போட்டார். கூத்தமைப்புக்காரரும் தாங்கள் சொன்னதையெல்லாம் மறந்திருக்கினம். ஆனாலும் தளபதியாரின்ர உண்மையான குணங்கள் மாறவேயில்லை எண்டுறத்தை அவர் இப்ப சொல்லியிருக்கிற விசயம் தெட்டத் தெளிவாய் அவரின்ர சுயரூபத்தைக் காட்டிப்போட்டுதெல்லோ.

பாத்தியளோ உந்தக் கூத்தமைப்புக்காரர் தாங்கள் சுகமாய் இருக்கிறதுக்காக எப்படியானவையளையெல்லாம் அப்படியானவையள் எண்டு சொல்லி எங்கட சனத்தின்ர தலையில கட்டிவைக்கப் பாக்கினமெண்டு இனியாவது எங்கட சனம் திருந்தவேணும் உணர்ச்சிவசப்பட்டு வீட்டுக்குக் வோட்டப்போட்டு வீதியில நிக்கிறதுகளுக்கெல்லாம் அதிகாரத்தைக் கொடுக்காமல் ஏதோ ஏதாச்சும் செய்யிறதுகளைத் தெரிஞ்செடுத்து விடவேணும்.

**குடாநாட்டுப்** பொம்பிளைப் பிள்ளையொண்டு இணையத்தில விளையாட்டுக்காட்டிச் சுளைசுளையாய்க் கறந்துபோட்டுதெண்டு சில தமிழ் இணையங்கள் செய்திபோட்டதை நீங்கள் பாத்திருப்பியளோ தெரியாது. அதுக்கு இன்னொரு இணையம் மறுப்புப் போட்டுத் திட்டித் தீர்த்ததையும் பாத்தியளோ தெரியாது. எங்கட குமர்ப்பிள்ளையளின்ர வாழ்க்கையில விளையாடுறதுக்கு முதலில இந்த மீடியாக்காரர் எல்லாம் கொஞ்ம் மைண்டை றிலாக்ஸ் பண்ணி செய்தியளைப் போடவேணுமெண்டுறது ஒருபக்கம் இருக்க, சேவரில பதிஞ்சவன் எல்லாம் இணையம் நடத்த வெளிக்கிட்டுத் தங்களை ஊடகக்காரர் எண்டு ஊடகத்துறையை அவமானப்படுத்திக்கொண்டு இருக்கிறது ஒருபக்கம் கிடக்க, உப்பிடியான சந்தர்ப்பத்திலதான் எது எது ஆராருக்குச் சொந்தம் எண்டுறத ஒவ்வொருதரும் மாறிமாறி வசைபாடி காட்டிக்குடுக்கினமுங்கோ. புதுப்புதுப் பெயர்களுக்குள்ள கவர் எடுத்து இருக்கிற ஆசாமி களும் வெளிச்சத்துக்கு வருகினமுங்கோ. இவையள் எல்லாம் எங்கட சனத்தை உசுப்பேத்தி உசுப்பேத்தி படுகுழிக்குள் தள்ளின ஊடக ஜாம்பவான்கள்தானுங்கோ. இப்ப முகமூடியைப் போட்டுக்கொண்டு வேறொரு திசையில எங்கட சனத்தை நாசமாக்கிறதுக்கு பிளான் பண்ணிக்கொண்டிருக்கினமுங்கோ. அதனால எங்கட சனம்தான் உப்பிடியானவையின்ர வலைக்குள்ள விழாம ரெக்னிக்கா இவையளை டைவேட் பண்ணிவிட வேணுமுங்கோ இல்லையெண்டா எங்கட கலாச்சாரத்தையும் எங்களையும் அந்தக் கடவுளால கூட காப்பாத்த முடியாமப்பேயிடுமுங்கோ.

# கிழக்கின் ஐந்தாண்டுத் திட்டமும் மக்கள் எதிர்பார்ப்பும்

**லோகேஸ்வர்**

**கிழக்கு** மாகாணத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற ஒரு செய்தியாக கடந்த மாதத்தில் கிழக்கின் ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான செய்திகள் அமைந்திருந்தன.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்திக்கான நிறுவனத்தினரின் முழு உதவியுடன் கிழக்கு மாகாண சபையி-னால் தயாரிக்கப்பட்டுள்ள 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரைக்குமான கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது மிகவும் சிறப்பானதொரு விடயமாகும்.

இத்திட்டத்தின் கீழ் பொதுப்படையான அனைத்து விதமான அபிவிருத்திகளும் அடங்கியிருக்கின்றன. விவசாயம், மீன்பிடி, உட்கட்டமைப்பு, மனித அபிவிருத்தி, தொழில்துறை அபிவிருத்தி சுற்றாடல், அனர்த்த முகாமைத்துவம் என பல துறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாகாண சபை உறுப்பினர்களுக்கும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதி நிதிகளும், கிழக்கு மாகாண திணைக்களங்களின் அதிகாரி களும் கலந்து கொண்ட திருமலையில் நடைபெற்ற இத்திட்டம் குறித்த கருத்தரங்கில் பல்வேறு பட்ட வகைகளி லும் விவாதங்கள் நடைபெற்றுள்ளன.

அவற்றில், இத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய விதம் குறித்தும் இன்னும் பல பற்றியும் விவாதங்கள் நடைபெற்றுள்ளன. இது கூட ஒரு காத்திரமான விடயமே.

எவ்வாறானாலும், மாகாணத்தின் அபிவிருத்தியில் அனைத்து அரசி யல் தரப்பினரும், அதிகாரிகளும் ஒன்றிணைந்து ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும். ஒருமித்த அபிவிருத்தி மாகாணத்துக்கு ஏற்பட வேண்டும் என்பதே சிந்தனையாகும்.

ஒரு நல்ல விதமான கல்விச் செயற்பாடு நடைபெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றங்களில் ஏற்பட்ட குழப்பம் அந்தச் செயற்பாட்டையே நிறுத்தும்படி செய்தன. அது போன்று நல்லதொரு சுமுக மான அமைதிச் சூழல் உருவாகி-வரும் வேளையில் கொலைகள், வங்கிக் கொள்ளைகள் நடத்தப்பட்டு பாதுகாப்பு விவகாரத்தில் பல்வேறு சிக்கல்கள் கொண்டுவரப்பட்டன.

இவ்வாறான செயற்பாடுகள் கிழக்கின் அமைதிக்குப் பங்கத்தை ஏற்படுத்தும் என்பதை அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த வாரத்தில் மட்டக்களப்பு சத்துருக் கொண்டானில் கைத்துப்பாக்கிகள் சகிதம் இருவர் கைது செய்யப்பட்டுமிருந்தனர்.

வங்கிக் கொள்ளையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவோ, கொள்ளையிடப்பட்ட பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ இதுவரை எந்தவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. இருப்பினும் சந்தேகத்தின் பேரில் கொள்ளை நடைபெற்ற வங்கியின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்

இவ்வாறான நிலையிலும் மட்டக் களப்பு மக்களின் அமைதியைப் பற்றி அனைத்து அரசியல் தரப்பினரும் சிந்தித்தே ஆகவேண்டும் என்றே பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்

கிழக்கின் அபிவிருத்தி பற்றி சிந்திக்கும் ஒவ்வொருவரும் அதன் அமைதியிலும், மகிழ்ச்சியிலும் அக்கறை செலுத்தியே ஆகவேண்டும். கிழக்கை அபிவிருத்தி செய்தல் என்பது ஒரு மிக நீண்ட காலத் திட்டமாகும். ஒழுங்குபடுத்தல்கள் மிகவும் சீராகவும், நேர்த்தியாகவும், திறமையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே அனைவரும் விரும்புகின்றனர்.

அபிவிருத்திகளானது, தேவையான இடத்திற்குத் தேவையானதைக் கொடுப்பதாக அமைந்திருக்க வேண்டும் அல்லாமல் தேவைக்கு அதிகமாக அல்லது கால, இட அறிவின்றி மேற்கொள்பவையாக அமைந்து நிதிகளை வீணாக்குவதாக அமைந்து விடக்கூடாது.

மக்களின் தேவைகளை நன்கு அறிந்து எதிர்கால நலன்கள் அதேபோன்று கால ஓட்டம், உலகமயமாக்கலின் வேகம் அதன் தொழில்நுட்ப மாற்றங்கள்,மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சி அல்லது பரிணாம வளர்ச்சி என்பவை உள்ளிட்ட பல விடயங்கள் நன்கு கவனத்தில் எடுக்கப்பட்டே அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வெளிநாடுகளைப் பொறுத்தவரையில், சனத்தொகை வளர்ச்சி எதிர்கால மேம்பாடுகள் என பல விடயங்களும் கவனத்தில் எடுக்கப்பட்டே அபிவிருத்திகளுக்கான திட்டங்கள் தயாரிக்கப்படுவதும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதும் வழக்கமாக உள்ளன. அவை திட்டத் தயாரிப்பாளர்களுக்கும் செயற்படுத்து பவர்களுக்கும் நன்கு தெளிவான வகையிலேயே செயற்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன.

அதனாலேயே நடைமுறைக் காலங்களை சிறந்த முறையில் அந்நாடுகளால் எதிர் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன என்பதே கடந்தகால வரலாறாகும்.

சுதந்திரத்துக்கு முன்னர் எமது நாட்டை ஆட்சிக்குள் வைத்திருந்த அந்நிய அரசுகள் திட்டமிட்டு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் கொண்டு நடத்திய திட்டங்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த வடிகாலமைப்பு போக்குவரத்து ஏற்பாடுகள் தொழில்துறை அமைப்புகள் நமது நாட்டில் இன்னமும் இருந்து கொண்டே இருக்கின்றன. அவற்றினைக் கொண்டே இன்றும் அனைத்து பிரதே சங்களும் செயற்பட்டும் வருகின்றன.

இதனைப் புரிந்து கொண்டு கிழக்கின் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதானது சிறப்பாக அமைந்திருக்கும். அத்துடன் அபிவிருத்தி திட்டங்கள் உட்பட அனைத்திலும் பொதுப் படையான வேண்டுதல்கள் கருத்துக்கள் உள்வாங்கப்படுதல் அவசியமாகின்றனது. ஏனெனில் அரசியல் வாதிகள் உள்வாங்கப்படுவது போன்று திட்டமிடலாளர்கள், புத்திஜீவிகளும் தமது கருத்துக்களையும் எண்ணங் களையும் வெளிப்படுத்த வாய்ப்புக்கள் வழங்கப்படல் வேண்டும். எடுத்தோம் கவிழ்த்தோம் நிலையில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தோல்வியில் முடிந்துவிடும் வரலாறுகளும் பாடங்களைக் கற்றுத்தந்தி ருக்கின்றன என்றவகையில் இதனைக் கருத்திலெடுத்தல் வேண்டும்.

> நீண்டகாலமாக இனப்பிரச்சினை என்ற கொடிய யுத்தப்பிரச்சினைக்குள் இருந்து மீண்டு வந்த கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட ஜன நாயக விழிப்புணர்வானது, கல்வி, பொருளாதார, தொழில், மற்றும் உட்கட்டுமானங்கள் என அனைத்துத் துறை களிலும் முன்னேற்றத்தையே எதிர்பார்த்து நிற்கின்றனது. இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்களாக அபிவிருத்தி குறிக்கோளுடன் செயற்படும் அரசியல்வாதிகள் சிறந்த வகையிலான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் பிரதேசத்தின் மேம்பாடு எதிர்கால சந்ததியினருடைய முழுமையான நலனையும் பாதுகாக்கின்ற அடுத்து வருகின்ற பரம்பரைகளுக்கு நன்மையைப் பயக்கும்.





அதே போன்று அபிவிருத்திகள் என்பவை அனைத்து தரப்பினருடைய பங்குபற்றலுடன் மேற்கொள்ளப் படுவதானது இன்னமும் சிறப்பான நடவடிக்கைகளுக்கு ஏதுவானதாக அமைந்திருக்கும். அரசியல் பேதங்கள் வேறுபாட்டுச் சிக்கல்களை நமது பிரதேசத்தின் எதிர்கால நலனில் பாதிப்பினை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதில் பொது மக்கள் மிகவும் கவனமாகவே இருக்கின்றனர்.

எழுந்தமானமாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் கைவிடப்பட்டு மிகச் சிறந்த முறையில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைக்குள் கொண்டு வரப்படுதலானது மேம்பாடுடைய கிழக்கை உருவாக்கும் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

நீண்டகாலமாக இனப்பிரச்சினை என்ற கொடிய யுத்தப்பிரச்சினைக்குள் இருந்து மீண்டு வந்த கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட ஜனநாயக விழிப்புணர்வானது, கல்வி, பொருளா-தார, தொழில், மற்றும் உட்கட்டு மானங்கள் என அனைத்துத் துறைகளி லும் முன்னேற்றத்தையே எதிர்பார்த்து நிற்கின்றனது. இந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்களாக அபிவிருத்தி குறிக்கோளுடன் செயற்படும் அரசி யல்வாதிகள் சிறந்த வகையிலான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் பிரதேசத்தின் மேம்பாடு எதிர்கால சந்ததியினருடைய முழுமை யான நலனையும் பாதுகாக்கின்ற அடுத்து வருகின்ற பரம்பரைகளுக்கு நன்மை பயக்கும்.

நிச்சயமான அபிவிருத்திகளை மேற்கொண்டு அனைத்துவிதமான வழிகளிலும் மக்கள் எதிர்பார்க்கின்ற மேம்பாடுகள் வசதி படைத்தவர்களை மேலும் வசதி பெறுபவர்களாகவும், கீழ் மட்டத்தினரை மேலும் கீழ் நிலைக்குள் தள்ளுவதாகவும் அமைந்து விடாதிருக்க திட்டமிடலாளர்களே கவனத்துடன் செயற்பட வேண்டும்.

மூலவளப்பாதுகாப்பு, பொருத்தமான தொழில்நுட்பம், மூலவளக்கட்டுப்பாடு, வளங்களை மீள் சுற்றுகை மூலம் பயன்படுத்தல், மனித வளவிருத்தியை ஊக்குவித்தல், காடழிப்பைத் தவிர்த்தலும் மீள் காடாக்கமும், பொதுமக்கள் விழிப்புணர்வு, திட்டமிடலில் சூழல் ஒருங்கிணைப்பு, பச்சைவீட்டு விளைவை தடுத்தல், ஓசோன் துவாரத்தைக் கட்டுப்படுத்தல், கரையோரப் பாதுகாப்பு உள்ளிட்ட விட யங்கள் கவனத்தில் எடுக்கப்படும் போதே நிலைத்து நிற்கும் அபிவிருத்தியினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

கடந்த காலங்களில் கொடூரமான அழிவுகளைச் சந்தித்த கிழக்கு மாகாணத்துக்கு நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கை களே தேவையானவையாக உள்ளன என்பதனை அனைவரும் மனதில் கொள்தல் நன்று. உலகின் அனைத்து நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற திட்டங்கள் யாவுமே மனித வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வகை யிலே அமைந்திருக்கின்றன். என்ற அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஐந்தாண்டு திட்டமானது பொறிமுறைகள் நிமிர்ந்த செயற்பாடுகள் மூலம் மேம்பாட்டை நோக்கிச் செல்கின்றதொரு ஒன்றாக அமைய வேண்டும் என்பதே அனைவ ரினதும் எதிர்பார்ப்பாகும்.

சமூக,பொருளாதார,கலாசார சிக்கல்களைக் கொண்டு வருபவை யாகவோ அபிவிருத்திகளை அர்த்தமற்றவையாகவோ மாற்றுபவையாகதிட்டங்கள் அமைந்துவிடக்கூடாது என்பது இந்த இடத்தில் மிகவும் முக்கியமானது.

நிலைத்திருக்கும் அபிவிருத்தியில் சூழலும் அபிவிருத்தியும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அதிகரித்துவரும் மனிதத் தேவைகளை நிறைவு செய்து வைக்கும் பொருட்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுதல் சிறப்பு. அந்தவகையில் அரசியல் பேதங்களை மறந்து அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுதலே கிழக்கின் தேவையாகும். மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தையும் நிறைவேற்றுபவையாக கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் நினைவில் கொள்ளப்படவேண்டும். ■

# அவலம் சுமந்த அகதிகள்

அத்திமுகத்தோன்

அவலம் 38

“**இஞ்சரப்பா...** மெயின் றோட்டால போகாமல் உள்ளுக்கை ஒழுங்கையால போவமே?” அவள் கேட்டாள்.

“ஏன் குஞ்சு...?”

“றோட்டால போகப் பயமாக் கிடக்கப்பா...?

“சரி...”

அவர்கள் இருவரும் பிரதான வீதிக்கு வராமல் ஆனந்தபுரம் சந்தியை நோக்கி போய்க்கொண்டிருந்தார்கள். மிதிவண்டியின் பின்பாகத்தில் அவர்களுக்கான உடைகளும் முக்கிய ஆவணங்களும் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்களும் அடங்கிய சிறிய பையொன்று இருந்தது. அதுதான் அவர்களுடைய அப்போதைய சொத்து. மிதிவண்டியின் முன் ‘பாரில்’ அவள்தன் குழந்தையோடு உட்கார்ந்திருந்தாள். அவளை நினைக்க அவனுக்குக் கவலையாக இருந்தது. ஷெல் விழுந்து வெடித்த இடமும் அதில் கர்ப்பிணிப் பெண் இறந்ததையும், அதற்கப்புறம் சகலனின் உறவுக்காரப் பொடியன் ஒருவன் வந்து சொன்ன விடயங்களையும் நினைத்துக் கவலைப்படுகிறாள் என அவன் நினைத்துக்கொண்டான்.

“குஞ்சு..”

“ம்..”

“என்ன பயந்துபோனியே...?”

“......”

“நீ ஒண்டுக்கும் யோசியாதை. பிறக்கும் பொழுது என்ன எழுதப்பட்டு, அது அனுப்பப்படுகிறதோ அது நடந்தே தீரும்...”

அவள் சிரித்தாள்.

“ஏன் சிரிக்கிறாய்...?” அவன் கேட்டான்.

“நடக்கிற சம்பவங்கள் எங்களுக்கான விதியல்ல எண்டு முன்னம் ஒருக்காச் சொன்ன ஞாபகம். உங்கட வார்த்தை முரண்படுது.”

“வாழ்க்கையே முரண்படேக்கை வார்த்தைகளும் முரண்படத்தானே செய்யும்...” கூறிவிட்டு அவன் சிரிக்க அவனோடு சேர்ந்து அவளும் சிரித்தாள்.

சகலன் வீட்டிலிருந்து புறப்பட்டவர்கள், பின்பக்கத்து வீதி வழியாகச் செல்கையில், வழியில் இயக்கத்தினுடைய வழங்கற்பகுதியின் தையல் பிரிவு மீது கிபிர் நடத்திய விமானத் தாக்குதலில் கூரைகளால் வேயப்பட்ட அந்த இடம் அலங்கோலமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. பனை வடலிகள் முறிந்து. வீதிக்குக் குறுக்கே பாரிய மரங்களின் கிளைகளும் விழுந்து கிடந்தன. வீதிக்கும் தையல் பகுதியின் வாயிலுக்கும் இடையில் ஒரு பாரியகுழி தோற்றம் பெற்றிருந்தது.

“கிபிர்க்காரன்ர இலக்கு தவறிவிட்டுது...” அவன் கூறினான்.

“ம்...” அவளும் அதை ஆமோதித்தாள்.

“உள்ளுக்கை கொட்டில்களுக்கு நடுவில விழுந்து வெடிச்சிருந்தால், எல்லாம் எரிஞ்சு போயிருக்கும். எத்தனை பொம்புளைப் பிள்ளையள் வேலைசெய்த இடம். எல்லாம் கஷ்டப்பட்ட குடும்பத்துப் பிள்ளையள்.. இப்ப அதுகள் தொழில் இல்லாமல் என்ன செய்யுதுகளோ...? பாவங்கள்...” அவன் அந்தப் பிள்ளைகளுக்காகப் பரிதாபப்பட்டான்.

“இப்ப அதில அரைக்கரைவாசியை இயக்கம் புடிச்சிருக்கும்...” அவள் கூறியதற்கு அவன் எதுவும் கூறாது மௌனமாக மிதிவண்டியைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

தூரத்தே ஆனந்தபுரம் சந்தி தெரிந்தது. சந்தியை அண்மித்ததும் அவள் கேட்டாள்.

“என்னப்பா சந்தி வெறிச்சோடுது. இஞ்சத்தேயாக்களும் வெளிக்கிடுகினம் போலக் கிடக்குது.”

அவன் மிதிவண்டியின் வேகத்தைக் குறைத்தவாறே... சுற்றுவட்டச் சூழலை அவதானிக்கத் தொடங்கினான். சந்திக்கு அண்மையாக செந்தூரன் சிலைச் சந்திக்குச் செல்லும் பிரதான தெருவில் அமைந்துள்ள இயக்க முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டான். அது துல்லியமான இலக்குப் பிசகாத தாக்குதலாக இருந்தது.

“சந்தியில முன்னுக்கும்; பின்னுக்கும் கிபிர் அடிச்சதைக் கண்டு சனம் பயந்திட்டுதுகள். அதுதான் எழும்பிப் போகுதுகள்.”

“தங்கச்சியும், மனிசனும் இருக்கினம்.



“ஐயோ... எங்களுக்கேன் இந்த நிலை...? நாங்கள் என்ன பாவம் செய்து பிறந்தனாங்கள்... அறுதலிமக்கள் அடிபடவெண்டு வெளிக்கிட்டவங்கள்...ஏன் ஆமியை இவ்வளவு தூரம் வரவிட்டவங்கள்...? பாழ்படுவார் ஆமிக்காரருக்கும் படுகிற பாடு கொஞ்சமாவது தெரியக் கூடாதே... ஐயோ... என்ர ஆம்புளைப் பிள்ளையள்... எனக்கினி ஆர் இருக்கினம்... ஆ...கடவுளே...” அவர்கள் அழுவதை எல்லாரும் பார்த்தவண்ணம் சென்றுகொண்டிருந்தார்கள்.காரணம் சாவு என்பது சாதாரண-மாகிப் போன நிலையில். உறவினர்கள் தவிர வேறெவரும் இறந்தவர்களுக்காக அழுவதற்கு அங்கு இருக்கவில்லை.

அவையளைச்சுற்றிச் சனங்கள் எல்லாம் வெளிக்கிடுதுகள். அவர் என்னடா எண்டால் இயக்கம் விடாது.. எண்ட நினைப்பில இருக்கிறார். என்ன நடக்கப் போகுதோ தெரியாது...” அவள் மனம் சலித்துக் கூறிக்கொண்டாள்.

அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் கதைத்தவாறே இரணைப்பாலை, செந்தூரன் சிலைச் சந்திக்குச் செல்லும் பிரதான தெருவில் மிதிவண்டியைத் திருப்பினார்கள். புதுக்குடியிருப்புச் சந்திக்கு அருகாமையில் இராணுவம் வந்துவிட்டதாக கதை பரவியதில். சந்தியில் இருந்த மக்களும், இடம்பெயர ஆயத்தமாகி நின்றார்கள். சிலர் ஏற்கெனவே தங்களது தரப்பாள் வீடுகளைப் பிடுங்கிக்கொண்டு சென்றுவிட்டதினால் அங்கு சனநெருக்கம் மிகக் குறைவாக இருந்தது.

அவனும் அவளும் செந்தூரன் சிலையைத் தாண்டி மாத்தளனுக்குச் செல்லும் பிரதான சாலையில் ஏறிச் சென்றுகொண்டிருந்தபோது, தலைக்கு மேலாக ஒரு ஷெல் கூவியவண்ணம் போய் எங்கேயோ விழுந்து வெடித்துக் கொண்டது.

அவர்கள் மட்டுமல்ல. அந்தத் தெருவினில் சென்றுகொண்டிருந்த அனைவரும் திகைத்துப் போனார்கள். அவர்களைத் தவிர மற்றவர்கள் நிலத்தில் விழுந்து பாதுகாப்புத் தேடிக்கொண்டார்கள்.

அவனும்-அவளும் குழந்தையோடு திடீரென நிலத்தில் படுக்கமுடியவில்லை. அருகில் இருந்த தண்ணீர் பாயும் மதகு ஒன்றினுள் குழந்தையோடு போய் பதுங்கிக்கொண்டாள். அவன் மதகு வாயினுள் குந்தியிருந்தபடி வானத்தை அண்ணாந்து பார்த்தபடி இருந்தான்.

“உள்ளுக்கை வாங்கோ... ஷெல் வந்து வெடிச்சாலும்..”

குறுகிய உயரமுடைய அந்த மதகுக்குள் தலையை நிமிர்த்த முடியாத வேதனையுடன் அவள்-அவனை அழைத்தாள்.

“உதுக்குள்ளை என்னண்டு பிள்ளை இருக்கிறது...? வா போவம். சனங்கள் எல்லாம் றோட்டில போகத் தொடங்கியிட்டுதுகள்...”

அவள் மிகவும் சிரமப்பட்டுக் குழந்தையுடன் வெளியில் வந்தாள். குழந்தையின் உடல் முழுதும் வியர்வை சுரந்திருந்தது. அவளும் தனது நெற்றியில் வழிந்த வியர்வையைக் கையால் துடைத்துவிட்டு பிரதான சாலையில் ஏறினாள். மீண்டும் அவர்களது பயணம் தொடங்கியது.

“செந்தூரன் சிலையடியும் இனிக் கொஞ்ச நாளையால வெறிச்சோடிப்போயிடும்...”மிதிவண்டியின் பாரில் இருந்தவாறே அவள் கூறுகிறாள்.

“சன நடமாட்டம் இல்லையெண்டதும் ஆமிக்கு உள்ளுக்கை நுழைய வலு லேசாய் இருக்கும். எத்தனை சந்தியள்.... எத்தனை பாதையள் கிடக்குதுகள்... எல்லாப் பக்கத்தாலையும் அவன் ஷெல் அடித்துக்கொண்டு வெளிக்கிட்டால் ஒரு கிழமை. ஒரு மாதம் பயிற்சி எடுத்த பொடியளால தாக்கப் பிடிக்க முடியாது. ஓடி வந்திடுவாங்கள். இப்படியே துரத்தித் துரத்திக்கொண்டு வந்து மாத்தளன் வரைக்கும் வரப்போறான். அதுக்குப் பிறகு எங்கை ஓடப்போகுது உந்தச் சனங்கள்...?”

“சகலனும், மச்சாளும் முறையாய் மாட்டுப்படப்போகினம்...” அவனும் பதிலுக்குக் கூறிக்கொண்டே கள்ளுத்தவறணைத் திருப்பத்தைக் கடந்தபோது எதிரே கூக்குரல்கள் கேட்கத்தொடங்கின.

“என்னப்பா... சனம் கத்திக்குளறுது.. இயக்கம் நிக்குதோ தெரியாது...?” அவள் பயப்பீதியுடன் கூறவும், அவர்களது மிதிவண்டி அந்தச் சம்பவ இடத்துக்குச் செல்லவும் சரியாக இருந்தது.

சற்று நேரத்துக்கு முன் ஏவப்பட்ட ஷெல்லினால் இருவர் இறந்ததாகவும், நால்வர் காயமடைந்ததாகவும், காயப்பட்டவர்களை மாத்தளன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டதாகவும் அங்கு நின்றவர்கள் கூறியதை அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

“ஐயோ...என்ர தம்பி...”

“ஐயோ... நான் பெத்தராசாவே...”

“ஐயோ... எங்களுக்கேன் இந்த நிலை...? நாங்கள் என்ன பாவம் செய்து பிறந்தனாங்கள்... அறுதலிமக்கள் அடிபடவெண்டு வெளிக்கிட்டவங்கள்...ஏன் ஆமியை இவ்வளவு தூரம் வரவிட்டவங்கள்...? பாழ்படுவார் ஆமிக்காரருக்கும் படுகிற பாடு கொஞ்சமாவது தெரியக் கூடாதே... ஐயோ... என்ர ஆம்புளைப் பிள்ளையள்... எனக்கினி ஆர் இருக்கினம்... ஆ கடவுளே...”

தாய், தந்தை, சகோதரி உட்பட யாவரும் அந்த இடத்தில் நின்று கதறிக் குளறுவதைப் பலர் பார்த்துக் கொண்டே சென்றார்கள். காரணம் சாவு என்பது சாதாரணமாகிப் போன நிலையில், உறவினர்கள் தவிர வேறெவரும் இறந்தவர்களுக்காக அழுவதற்கு அங்கு இருக்கவில்லை.

இறந்து கிடக்கும் அந்த இரு இளைஞர்களையும் அவன் பார்த்தான். மூத்தவனுக்கு இருபத்தியிரண்டு வயதிருக்கும். அடுத்தவனுக்கு இருபது வயது இருக்கும். இருவரும் அரும்பு மீசையோடு தந்தையின் முகச்சாயலை ஒத்திருந்தார்கள். வலது கையின் மணிக்கட்டுப்பகுதி துண்டாடப்பட்ட நிலையில் ஒருவனுக்கு நெஞ்சுப்பகுதியில் இருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. துண்டாடப்பட்ட கைத்துண்டு நெஞ்சின் மேல் போடப்பட்டிருந்த நிலையில், இரண்டாமவனின் தலையில் அரைப்பகுதி சிதைந்து, ஒரு கண் வெளியே தள்ளியவாறு குரூரமாகக் கிடந்தான்.

பெத்த நாளில் இருந்து அந்த இருவரையும் வளர்த்து ஆளாக்கும்வரை பெற்றவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள்... என்பதை நினைக்க அவனுக்குக் கண்கள் கலங்கிவிட்டன.

“வாங்கோப்பா போவம்.... எனக்கென்னவோ செய்யுது...” அவள் அவனை அவசரப்படுத்தினாள்.


“உப்பிடி அழுதுகொண்டிருந்து இனி என்ன செய்யிறது...? ஆகவேண்டியதைப் பார்த்திட்டு, அங்கால போற வழியைப் பாருங்கோவன்...” கண்கள் கலங்கிய நிலையில் நின்ற ஒருவர் கூறிவிட்டு அவர்கள் கொண்டு வந்த சாமான் பொதிகளுக்குள் கிடந்த மண்வெட்டியை எடுத்து வீதியின் அருகோரம் குழிவெட்டத் தொடங்கினார். அவர் குழிவெட்டுவதைக் கண்டதும் உறவுகளின் கூக்குரல்கள் அதிகரிக்கத் தொடங்கின.

அவனுக்கும் மேற்கொண்டு அந்த இடத்தில் நிற்க முடியவில்லை. மிதிவண்டியின் ‘பாரில்’ மனைவியை ஏறும்படி கூறிவிட்டு, வண்டியை இயக்கத் தொடங்கினான்.

மாத்தளன் சந்தியில் சனநெரிசல் அதிகமாக இருந்தது. மாத்தளன் கடற்கரையில் இருந்து முள்ளிவாய்க்கால் செல்லும் பிரதான வீதியில் வாணிப நிலையங்கள் தோற்றம் பெற்றிருந்தன. நெரிசல் அதிகமாக இருந்ததால், அவர்கள் இருவரும் இறங்கி மெதுவாக நடந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

பிரதான வீதியில் இருந்து கிழக்குப் பக்கமாக கப்பல் றோட்டில் ஏறி இரண்டு வீடுகள் கழிந்த நிலையில், ஐயா இருக்கும் வீட்டைச் சென்றடைந்தார்கள். அந்த நேரத்தில் அவர்கள் குடும்பமாக வந்திறங்கியதைக் கண்டதும் அவரின் முகத்தில் ஆச்சரியம் தென்பட்டது.

(அவலம் தொடரும்...)



**அடர்ந்த** காடு ஒன்றில் மான்கள் கூட்டம் கூட்டமாக வசித்து வந்தன. ஒரு நாள் அந்த மான் கூட்டத்தை சிங்கம் ஒன்று தாக்கியது. எல்லா மான்களும் பயந்து ஓடி தங்களது உயிரை காத்துக் கொண்டன.

ஆனால் ஒரே ஒரு குட்டி மான் மட்டும் அந்த சிங்கத்திடம் மாட்டிக் கொண்டது. அதைப் பார்த்து மனம் இரங்கிய சிங்கம் அதைக் கொல்லாமல், தன் வாயால் கவ்வி தன்னுடைய குகைக்கு எடுத்துச் சென்றது.

பிறகு, அந்த குட்டி மான் அந்த குகையிலே வளர்ந்து வந்தது. பகலில் எங்கு சென்று மேய்ந்தாலும், மாலையில் அந்த குகைக்கே திரும்பிவிடும். சிங்கமும் அதை தன் குகையில் தங்கிக் கொள்ள அனுமதி அளித்தது.

சிங்கம் மானைத் தன் குட்டி போலவே பாதுகாத்து வந்தது. மானும், சிங்கத்திடம் மாறாத



# சகவாசம்

பாப்பா முரசு சிறுகதை

அன்பு கொண்டிருந்தது. சில மாதங்கள் கழித்து அந்த குட்டி மான் நன்றாக வளர்ந்து கொழுத்தது.

ஒரு நாள் அந்த மான் மேய்ந்து கொண்டிருந்த போது இன்னொரு மான் வந்து, "ஏய்! நீ நம் குல எதிரியான சிங்கத்தின் குகையில் வசிக்கிறாய் என்பது உனக்குத் தெரியுமா? நீ அதோடு சகவசாசம் வைத்திருப்பது உன் உயிருக்குத்தான் ஆபத்து. இதுகூட உனக்குத் தெரியாதா? நீ உடனடியாக அந்த குகையை விட்டு வெளியேறு நம் இனத்தோடு சேர்ந்து வாழ். அதுதான் உனக்கு நல்லது'' என்று புத்திமதி கூறியது.

அதற்கு அந்த மான், "ஏய் முட்டாளே! நீ எங்கள் பாசத்தைப் பற்றி புரியாமல் உளறுகிறாய். நான் குட்டியாக இருந்த போதே, என்னைக் கொல்லாமல், என் மீது அன்பு கொண்டு, என்னை பாசத்தோடு வளர்த்து வருகிறது, அந்த சிங்கம். இப்போது அதை விட்டு பிரிவது, அதற்கு நான் செய்யும் நம்பிக்கை துரோகமாக இருக்கும். ஒரு போதும் அதை நான் செய்யவேமாட்டேன். மேலும், அந்த குகை எனக்கு நல்ல இருப்பிடமாக இருக்கிறது. அங்கே எனக்கு தேவையான சுதந்திரமும், நல்ல உணவும் கிடைக்கிறது.


காட்டில் உள்ள மற்ற மிருகங்கள் என்னை ஏதாவது செய்தால், அந்த சிங்கத்திற்கு பதில் சொல்ல வேண்டுமே என்று பயந்து, என்னை எதுவும் செய்யாமல் விட்டு விடுகின்றன. மற்ற சாதுவான விலங்குகள் என்னைப் பார்த்தாலே பயப்படுகின்றன. என்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் என்னை வணங்கி விட்டே செல்கின்றன.

"எனக்கு கிடைக்கும் இந்த மரியாதை, கௌரவத்தை எல்லாம் நான் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை. மேலும், எனக்கு என்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று தெரியும். எனவே, உன் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டு போ'' என்று கூறி அதன் வாயை அடைத்தது.

அந்த மானும் "நீ எப்படியும் போய் தொலை. எனக்கென்ன?'' என்று மறுமொழி கூறிவிட்டுச் சென்றது.

ஒரு நாள் காட்டில், காலை நேரத்தில் அடைமழை பெய்யத் தொடங்கியது. அதனால் சிங்கமும், மானும் அந்த குகையை விட்டு வெளியே வரவில்லை. அன்று முழுவதும் மழை விட்ட பாடில்லை. இரவு வேறு நெருங்கியது. மழையால் வேட்டையாட வெளியே செல்ல முடியாத சிங்கம் பசியால் வாடியது. அப்போது அதன் பார்வை மானின் மீது பட்டது. அதன் இயற்கை குணம் தலைக்கேறியது.

உடனே மான் மீது பாய்ந்த சிங்கம் அதை அடித்துக் கொன்று தன் பசியை தீர்த்துக் கொண்டது. எதிரிகளுடன் சகவாசகம் வைத்துக் கொள்வது என்றுமே ஆபத்தையே தரும் என்பதை அறியாத மான் பரிதாபமாக உயிரைவிட்டது.



# அமாவாசை

தினமும் வரும் நிலா அமாவாசையில் மட்டும் வருவதில்லை. சந்திரன் தன்னைத் தானே ஒருமுறை சுற்றி வர 291/2 நாட்கள் ஆகுது. அது தன்னைத் தானே சுற்றிக்கொண்டு பூமியையும் சுற்ற... இதே 291/2 நாட்கள்தான் ஆகுது. பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றி வர 24 மணி நேரம் ஆகுது. அது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்ற 3651/4 நாட்கள் ஆகுது. சந்திரன் பூமியைச் சுற்ற, பூமி சூரியனைச் சுற்ற... இப்படியே ஒன்றுக்கொன்று மாறி மாறி சுற்றி வருவதால்தான் மாதத்தில் ஒருநாள் நாம் சந்திரனையே பார்க்க முடியாமல் போய் விடுகிறது. அமாவாசை தினத்தன்று சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் சந்திரன் வந்துடுது. அப்போ பூமியை நோக்கி இருக்கும் சந்திரனின் மேற்பரப்பில் சூரியஒளி விழுவதில்லை. அதனால் தான் அமாவாசைக்கு மட்டும் சந்திரன் நம் கண்ணுக்கு தெரிவதில்லை.

சிறிய செலவுகளில் கவனமாக இருங்கள். ஏனெனில், சிறிய ஓட்டை தான் கப்பலையே மூழ்கடித்துவிடும் ஆற்றல் கொண்டது -

பெஞ்சமின் பிராங்க்ளின்

## வாரம் ஒரு திருக்குறள்




**கூடா ஒழுக்கம்**

**"மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர்"**

மனதில் மாசு இருக்கத் தவத்தால் மாண்பு பெற்றவரைப் போல் நீரில் மூழ்கி மறைந்து நடக்கும் வஞ்சனை உடைய மாந்தர் உலகில் பலர் உள்ளனர்.

குறள்:278



## வாரம் ஒரு நாடு

# அமெரிக்கா



**தலைநகர்:** வாஷிங்டன்
**பரப்பளவு:** 98,26,630 சதுர கிலோமீற்றர்.
**மக்கள் தொகை:** 30 கோடியே 70 இலட்சம்.
**மொழி:** ஆங்கிலம், **எழுத்தறிவு:** 99 சதவீதம்,
**நாணயம்:** டொலர், **மதம்:** கிறித்தவம்
**அமைவிடம்:** வட அமெரிக்காவில் அமைந்துள்ளது. கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும், மேற்கே பசிபிக் பெருங்கடலும், வடக்கே கனடாவும், தெற்கே தென் அமெரிக்காவும் உள்ளது.
**தற்போதைய அதிபர்:** பராக் ஒபாமா.
**மாநிலம்:** 50 மாநிலங்களை கொண்டுள்ள அமெரிக்கா, ஒரு ஜனநாயக குடியரசு நாடு.
**விளைபொருட்கள்:** கோதுமை, மக்காச்சோளம், சோயா மொச்சை, பார்லி, ஓட்ஸ், அரிசி, கரும்பு, உருளைக்கிழங்கு, பருத்தி, புகையிலை. **கனிம வளம்:** நிலக்கரி, செம்பு, ஈயம், பாஸ்பேட்டுகள், யுரேனியம், துத்தநாகம், தங்கம், வெள்ளி, பெற்றோலியம், இரும்பு.
**தொழில்கள்:** இரும்பு, எக்கு, உணவு பதப்படுத்துதல்,இரசாயனம், உலோகத்தொழில், மின்னணுத் தொழில், இயந்திர உற்பத்தி, காகிதம், பெற்றோலியப் பொருட்கள், வாகன உற்பத்தி.
**ஏற்றுமதி:** இயந்திரங்கள், இரசாயனப்பொருட்கள், மோட்டார் வாகனங்கள், ஆகாய விமானங்கள், இராணுவ தளபாடங்கள், தானிய வகைகள்.

# பறக்கும் மீன்கள்

மீன்கள் என்றால் நீரில் நீந்தும். நடக்கும் மீன்கள் கூட உண்டு. ஆனால், பறக்குமா என்று வியப்பாக இருக்கிறதா? பறக்கும் மீன்களும் இருக்கின்றன. இவை பறப்பதற்கு ஏற்ப, 'எக்சோசீட்டஸ்' என்ற முன்பக்கத் துடுப்புகளைக் கொண்டுள்ளன. இவற்றை நன்கு விரித்து வைத்து இருக்கும்போது, இந்த மீனை மேலே இருந்து பார்த்தால், விமானம் போலத் தோன்றும். பறக்கும் மீன் நீரினுள் இருக்கையில், தன் இறக்கை போன்ற துடுப்பை, உடலோடு ஒட்டியவாறு வைத்திருக்கும். வேகமாக செல்ல நினைக்கையில், நீரினுள் இருக்கும்போதே பறப்பதற்கு முன் ஓடு தளத்தில், ஓடும் விமானம் போல் வேகமெடுத்து, நீரின் மேற்பரப்பை நோக்கி நீந்தி வந்து, நீர்ப்பரப்பை அடைந்ததும் தன் பக்கத் துடுப்புகளை முழுவதும் விரித்துத் துள்ளித் தாவும். அப்போது, நீர்ப்பரப்பிலிருந்து 1.5 மீற்றர் உயரத்தில் சென்று, 90 மீற்றர் தூரம் வரை, பத்தே விநாடிகளில் பறந்து செல்லும் திறன் கொண்டவை. இந்த வகையான பறக்கும் மீன்களுக்கு பெரிய கண்கள் உண்டு.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள், சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 27.07.2011

வர்ணம் தீட்டும் போட்டி இல.898
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு. த.பெ.இல:167, யாழ்ப்பாணம்.


**வர்ணம் தீட்டும் போட்டி இல: 896**

**பரிசுக்குரியவர்:** சி. மதுஷா,வாழைச்சேனை, மட்டக்களப்பு.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. யோ.சிவரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. எம்.எம்.ஹிமாயா, குறுந்துவத்தை, சிலாபம்.
03 எவ்.ஷிபானா, பிரதான வீதி, சாய்ந்தமருது.
04. க.லொசியா, சேர்ஜ் வீதி, மாத்தளை
05. த.அனோஜ், பிரதான வீதி, காலி.
07. சி.சிந்துஜா, பூவசரங்குளம், வவுனியா.
08. கு.ஆதித்யா, பரந்தன், கிளிநொச்சி.

## கண்டுபிடியுங்கள்




**படத்தில் 1 முதல் 15 வரை உள்ள எண்களில் 5 எண்கள் மட்டும் ஒரு நட்சத்திரத்தை உருவாக்கியுள்ளன. அந்த எண்கள் எவை? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.**

# காஸ்மிக் ஆண்டு


சர்வதேச மகளிர் ஆண்டு, மனித உரிமைகள் ஆண்டு, சர்வதேச வன ஆண்டு மாதிரி காஸ்மிக் ஆண்டையும் ஐ.நா. கொண்டாடி வருகிறது என்று நினைத்து விடாதீர்கள். அது வேறு. இது வேறு.

பூமியும், மற்ற கிரகங்களும் தம்மைத் தாமே சுற்றி வருவதுடன் சூரியனையும் சுற்றி வருகின்றன. அப்படிச் சூரியனும், ஒன்பது கோள்களோடு சேர்ந்து நட்சத்திரக் குடும்பத்தின் மையத்தைச் சுற்றி வருகிறது. இப்படி சூரியக் குடும்பம் ஒரு தடவை சுற்றி முடிக்க 20 மில்லியன் ஆண்டுகள் எடுக்கும். இப்படி 250 மில்லியன் ஆண்டுகள் சேர்ந்தால் தான் ஒரு காஸ்மிக் வருடமாம். அடேங்கப்பா...?

**மனிதன் முக அழகில் மட்டும் அல்ல உடல் நலத்திலும் முக்கிய பங்கு வகிப்பது பற்கள். சிலருக்கு பற்கள் முன்பக்கமாக நீண்டும், வரிசையாக** இல்லாமலும் இருக்கும். இதன் காரணமாக அவர்களது முக அழகு சிதைந்து விடும். இதனால் ஏராளமானோர் தன்னம்பிக்கை இழந்து வாழ்வில் எதையும் சாதிக்க முடியாதவர்களாக மாறி விடுகிறார்கள்.

பற்களின் அழகு சிதைந்து போவதற்கு குழந்தை பருவத்தில் அதை முறையாக கவனித்து பராமரிக்காதது தான் காரணம். ஒரு குழந்தையின் பல் வரிசை சரி இல்லாமல் போனால் முக அழகு சிதைந்துவிடும். பற்கள்

# குழந்தைகளை தாக்கும் பல் நோய்கள்



நன்றாக இருந்தால் தான் முகம் அழகுடன் பளிச்சிடும். பல் போனால் சொல் போச்சு என்பது பழமொழி. இதற்கேற்ப குழந்தைகளின் பல் சொத்தையாகி விழுந்துவிட்டால் அவர்களால் தெளிவாக பேசமுடியாது.

இதனால் தன்னம்பிக்கை இழந்துவிடுவார்கள். குழந்தைகளுக்கு ஒரு சில பற்கள் விழுந்து விட்டாலும் கூட அவர்களால் உணவை நன்றாக மென்று சாப்பிட முடியாது. இதனால் அவர்களுக்கு அடிக்கடி அஜீரண கோளாறு ஏற்படும். குழந்தையின் சிரிப்பிலும் பல் முக்கிய பங்கு வகிக்கிறது. பல் இல்லாத குழந்தையின் சிரிப்பு அதன் அழகை சிதைத்து விடும்.

குழந்தைக்கு 6 முதல் 7ஆம் மாதத்திற்குள் பல் முளைக்க தொடங்கும். 19ஆவது மாதத்தில் 20 பற்கள் முளைத்துவிடும். பல் முளைக்கும் கால கட்டத்தில் தான் குழந்தை கண்ட கண்ட பொருட்களையும் எடுத்து வாயில் வைத்து கடிக்கும். இதனால் நோய் தொற்றி காய்ச்சல், வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்படலாம்.

இதனால் பெற்றோர் அந்த சமயத்தில் குழந்தைகள் மீது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இல்லாவிட்டால் கிருமித்தொற்றால் பல்வேறு நோய்களின் பிடியில் குழந்தை சிக்க நேரிடும். குழந்தையின் பல் விஷயத்தில் பெற்றோர் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

குழந்தைக்கு சொக்லெட், ஐஸ்கிரீம் போன்றவை சாப்பிடும் போது அதில் உள்ள இனிப்பு வாயில் ஒட்டிக் கொண்டால் பல் சொத்தையாகிவிடும். எனவே எந்த உணவுப் பொருள் கொடுத்தாலும் சாப்பிட்ட பிறகு குழந்தையின் வாயை நன்றாக கழுவுவது நல்லது.

நொறுக்குத் தீனி சாப்பிடும் குழந்தைகள் தான் அதிகளவில் பற்களை இழந்து தவிப்பதாக புள்ளிவிவரம் ஒன்று தெரிவித்துள்ளது. எனவே குழந்தைகளுக்கு நொறுக்கு தீனியை ஆசை, ஆசையாக வாங்கிக் கொடுக்கும் பெற்றோர், சாப்பிட்டு முடிந்ததும் குழந்தையின் வாய்க்குள் தண்ணீர் விட்டு கழுவிவிடுவது நல்லது.



# கண்ணிற்கு ஒளிதரும் பொன்னாங்கண்ணி!

**காய்கறிகளில்** உள்ள சத்துக்களை விட கீரைகளில் 20 சதவிகிதம் கூடுதலாக சத்துக்கள் காணப்படுகின்றன. இரத்தத்தில் உள்ள சீனியின் அளவை கட்டுப்படுத்தும் தன்மை கீரைக்கு உண்டு என்பதால் நாம் உண்ணும் உணவில் வாரத்திற்கு இரண்டு முறை கீரை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மற்றக் கீரைகளை விட பொன்னாங்கண்ணி கீரைக்கு தனிச்சிறப்பு உண்டு. இந்தக்கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களின் உடல் பொன்போல ஜொலிக்கும் என்பார்கள். அதனால்தான் இது பொன்னாங்கண்ணி என்று அழைக்கப்படுகிறது. 'பொன்னை எறிந்தாலும் பொடிக்கீரையை எறியாதே' என்ற பழமொழியும் இதனால் உருவானதுதான்.

பொன்னாங்கண்ணியில் சீமைப்பொன்னாங்கண்ணி, நாட்டுப் பொன்னாங்கண்ணி என இரு வகை உண்டு. இந்த கீரையில் இரும்பு, கல்சியம், பொஸ்பரஸ், புரதம், விற்றமின்கள் ஏ, பி, சி போன்றவை உள்ளன. பொன்னாங்கண்ணிக்கீரை குளிர்ச்சியை தரவல்லது.

இக்கீரையின் காம்புப்பகுதிகளையும் சேர்த்து சமைத்தால்தான் முழுமையான சத்து கிடைக்கும். இதிலுள்ள சத்துக்கள் கண்களுக்கு ஒளியையும் நல்ல தெளிவான பார்வையையும் அளிக்கும். அத்துடன் கண் தொடர்புடைய அனைத்தையும் குணப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு.

இந்த கீரையை சமைத்து சாப்பிடுவதுடன் வேறுவகையிலும் பயன்படுத்தலாம். பொன்னாங்கண்ணிக்கீரையை வெண்ணெயில் வதக்கி இரு கண்களில் வைத்து துணியால் கட்ட கண் நோய்கள் போய்விடும் பார்வை தெளிவு பெறும். இக்கீரையை பகலில் மட்டுமே சாப்பிட வேண்டும்.

பொன்னாங்கண்ணி கீரையை உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் இதயம் வலுப்பெறும். இரத்த ஓட்டம் சீரடையும். மூளை, நரம்புகள் பலம் பெற்று சீரான நிலையில் இயக்கம் பெறும். வயிறு, குடல் கல்லீரல், மண்ணீரல், போன்ற உறுப்புகளின் பலத்திற்கு இக்கீரை பெரிதும் துணை புரிகிறது.

இது உடலில் மிகுதிப்படும் உஷ்ணத்தை தணித்து உடலை சமநிலையில் வைத்திருக்கும். உடலுக்கு வலுவையும் நல்ல வளர்ச்சியையும் அளிக்கவல்லது. உஷ்ணமிகுதியால் மூலநோய் ஏற்பட்டு வருந்துபவர்கள் இக்கீரையை சாப்பிட்டு வர நோயிலிருந்து நிவாரணம் பெறலாம். இரத்தம் கொட்டும் மூலமாக இருந்தாலும் குணமாகும்.

நன்றி-இணையம்



# 62 திருப்பங்கள் நிறைந்த பூலான்தேவியின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

மாதுசிங் நல்லவன். இவன் தன் தலைவனுக்கு உண்மையான விசுவாசி. தலைவன் ஆபத்தில் இருக்கிறான் என்னும் போது தான் மட்டும் தப்பித்துக்கொள்ள மறுத்தானே! இவன்தான் உண்மையானவன். மாதுசிங் என் மரியாதைக்குரியவனாகிவிட்டான்.

பொலிசாரை-பாக்குவெட்டிக்குள் சிக்கிக்கொண்ட பாக்கு மாதிரி-மடக்கிப் போட ஒரு திட்டம் போட்டான் மல்லா.

மல்லா தலைமையில் ஒரு குழுவும். மாதுசிங், பரத் சிங் ஆகியோர் தலைமையில் ஓவ்வொரு குழுக்களுமாக மொத்தம் மூன்று குழுக்களாக ஆட்களைப் பிரித்தான் மல்லா.

மாது சிங் தலைமையிலான குழு நாம் இப்போது இருக்கும் மலைக்குன்றில் இருந்து பொலிசாரை நோக்கிச் சுட்டுக்கொண்டிருக்க வேண்டும். பொலிசாரும் பதிலுக்குச் சுட்டுக்கொண்டே வருவார்கள்.

தப்பியோடுவது போல பாசாங்கு செய்தபடி மாதுசிங் குழுவினர் பொலிஸ் கோஷ்டியை மலைக்குன்றின் மையப்பகுதிக்கு இழுத்துச் செல்ல வேண்டும்.

அந்த நேரம் மலைக்குன்றின் இடது பக்கத்தில் இருந்து பரத்சிங் குழு பொலிஸ் கோஷ்டியை நோக்கித் தாக்கத் தொடங்கும். பொலிஸ் கோஷ்டியின் கவனம் அப் பக்கம் நோக்கித் திரும்பும் போது வலதுபக்கம் இருந்து மல்லாவின் குழு பொலிஸ் கோஷ்டி மீது பாய்ந்து தாக்கும்.

மல்லா தன் திட்டத்தை மளமளவென்று சொல்லிவிட்டு, அதேவேகத்தில் தன் குழுவுடன் புறப்பட்டான்.

மூன்று குழுக்களாகப் பிரிந்தபோது என்னை மட்டும் எந்தக் குழுவிலும் மல்லா சேர்க்கவில்லை. எனக்கு வெட்கமாக இருந்தது. நான் ஒரு சுமைமாதிரி அவர்கள் மத்தியில் இருப்பது போல கூச்சமாகவும், சங்கடமாகவும் இருந்தது.

புறப்படும்போது சட்டென்று என்னை நோக்கினான் மல்லா. "நீ என்னோடு வா. என் அருகிலேயே நின்றுகொள். நான்சொல்வதை மட்டும் செய். சரியா?" என்றான் மல்லா. மகிழ்ச்சியோடு தலையசைத்தேன்.

மலைப்பாதை என்பதால் பொலிஸ் கோஷ்டி மெல்ல மெல்ல நிதானமாக ஜாக்கிரதையாகத்தான் மேலே ஏறி வந்துகொண்டிருந்தது. அதனால் மலைக்குன்றுகளின் மறைவில் நாங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று.

காத்திருந்தபோது, எனக்குள் அந்தக் கேள்வி எழுந்தது.



"புறப்படும்போது சட்டென்று என்னை நோக்கினான் மல்லா. "நீ என்னோடு வா. என் அருகிலேயே நின்றுகொள். நான்சொல்வதை மட்டும் செய். சரியா?" என்றான் மல்லா. மகிழ்ச்சியோடு தலையசைத்தேன்.
மலைப்பாதை என்பதால் பொலிஸ் கோஷ்டி மெல்ல மெல்ல நிதானமாக ஜாக்கிர தையாகத்தான் மேலே ஏறி வந்துகொண்டிருந்தது. அதனால் மலைக்குன்றுகளின் மறைவில் நாங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதாயிற்று.
காத்திருந்துபோது, எனக்குள் அந்தக் கேள்வி எழுந்தது. இங்கே வரப்போகும் பொலிஸ் கோஷ்டியில் என்னைக் கடித்த அந்தப் பொலிஸ்காரர்களும் இருப்பார்களா?
நினைத்தபோது உச்சியில் சுள்ளென்று கோபம் ஏறியது."

இங்கே வரப்போகும் பொலிஸ்கோஷ்டியில் என்னைக் கடித்த அந்தப் பொலிஸ்காரர்களும் இருப்பார்களா?

நினைத்தபோது உச்சியில் சுள்ளென்று கோபம் ஏறியது. உடம்பெல்லாம் இரத்தம் கொதிப்போடு பாய்வது மாதிரி தகிப்பாக இருந்தது.

எங்கும் ஒரே பயங்கர அமைதி.

நான் மல்லாவின் காதருகே, அவனுக்கு மட்டும் கேட்கும்படியாகச் "நானும் சுடவே சுடவேண்டும்." மல்லா தன் உதட்டில் வைத்து சைகை காட்டினான். பின்னர் சைகையாலேயே சொன்னான் சுடலாம் சுடு என்று.

திடீரென்று துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மலைக்குன்றுகள் அவற்றை எதிரொலித்து பயங்கரத்தை உணர்த்தத்தொடங்கின.

மாதுசிங் ஆட்கள் நாங்கள் பதுங்கியிருந்த மலைக்குன்றுகளைத் தாண்டி ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் உண்மையாகவே ஓடுவதாகவே நினைத்துக்கொண்டு பொலிஸ் கோஷ்டி துரத்திக்கொண்டு வந்தது.

இப்போது எமக்கு அவர்களைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. அந்த நாய்களையும்தான்.

காதுகள் பெரிதாகி முன்புறமாக மடங்கி இருந்த பெரிய நாய்கள்-சங்கிலியால் கட்டி பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவை வேட்டுச் சத்தத்துக்கும் மத்தியில் ஓங்கிக் குரைத்துக்கொண்டிருந்தன.

துப்பாக்கிகள் சீறிக்கொண்டிருந்தன. எனக்குப் படபடப்பாக இருந்தது.

"தலையைத் தூக்காதே" என்று காதருகே கிசுகிசுப்பாகச் சொன்னான் மல்லா. நான் குப்புறப்படுத்துக்கிடந்தேன். அப்படித்தான் படுத்திருக்க வேண்டும் என்று மல்லா சொல்லிவிட்டான்.

எங்களால் பொலிஸ் கோஷ்டியைப் பார்க்க முடியும். அவர்களால் எங்களைப் பார்க்க முடியாது.

பரத்சிங் இடது புறமிருந்து தாக்குதலைத் தொடுத்த பின்னர்தான் நாங்கள் தாக்க வேண்டும்.

ஆனால் திட்டமிட்டதற்கு மாறாக அந்தச் சம்பவம் நடந்துவிட்டது.

எங்கள் குழுவில் யாரோ ஒருவன் தலையை வெளியே நீட்டிவிட்டான்.


அவனைக் கண்டுவிட்ட நாய் ஒன்று நாம் கிடந்த திசையை நோக்கி பாய்ந்துவர முயற்சித்தபடி குரைத்தது.

நாயின் சங்கிலியைப் பிடித்துக்கொண்டிருந்த பொலிஸ்காரன், நாய் குரைத்த தி[illegible] ந்தேகமாகப் [illegible] திடீரென்று சங்கிலியை இருந்து நாயை விடுவிட்டதும் [illegible] தெரிந்துவிட்டது.

நாம் பதுங்கியிருந்த திசையை நோக்கி நாக்கைத் தொங்கப்போட்டபடி அந்த நாய் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்துகொண்டிருந்தது.

பொலிஸ் கோஷ்டியின் கவனமும் நாய் இருந்த திசையை நோக்கித் திரும்பியது. இனித்தான் விபரீதம்.

(திருப்பங்கள் தொடரும்...)



# சிரஞ்சீவியின் இலட்சியம்

அரசியலில் நுழைந்த பிறகு பெரும்பாலும் சினிமா விழாக்களை புறக்கணித்து வந்த சிரஞ்சீவி, அந்த விழாவிற்கு பொலிவுட் நடிகர் அமிதாப் பச்சன் வருகிறார் என்ற தகவல் அறிந்து பங்கேற்றார்.

நிகழ்ச்சியில் பேசிய அமிதாப், சிரஞ்சீவி இதுவரை 149 படங்களில் நடித்துள்ளார். திடீரென அவர் அரசியலில் குதித்ததால் சினிமாவுக்கு முழுக்கு போட்டுள்ளார். அவர் அரசியலில் நுழைந்தாலும் 150ஆவது படத்தில் நடிக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அவரைத் தொடர்ந்து பேச வந்த நடிகர் சிரஞ்சீவி, "எனது 150ஆவது படத்தில் அமிதாப் பச்சன் கௌரவ வேடத்தில் நடிக்க ஒப்புக்கொண்டால் நான் மீண்டும் சினிமாவில் நடிக்கத் தயார்" என்றார்.

இந்நிலையில் சிரஞ்சீவி அளித்துள்ள பேட்டியொன்றில், நான் இனி சினிமாவில் நடிக்கமாட்டேன். ஆந்திர முதல்வர் ஆகத்தான் விரும்புகிறேன். ஆந்திர மக்களும் நான் முதல்வர் ஆக வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள் என்று கூறியுள்ளார்.

# எஸ்.ஏ.எஸ் - ஷக்தி டைாய்

சமீபத்தில் நடந்த தயாரிப்பாளர்கள் கூட்டம் ஒன்றில், எஸ்.ஏ.சந்திரசேகருக்கும், ஷக்தி சிதம்பரத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. தற்போதைய தலைவர் எஸ்.ஏ.சந்திரசேகரை பார்த்து எக்குதப்பா பேச எஸ்.ஏ.சந்திரசேகர் ஷக்தி சிதம்பரத்தை ஓங்கி இருக்கிறார்.

இதைப்பார்த்த ஷக்தி சிதம்பரம் பதிலுக்கு, நீங்க பத்து அடி அடிச்சா, நானும் ஒத்தயடியாவது அடிப்பேன், வயசுக்கு மரியாதை கொடுத்தா காப்பாத்திக்குங்க என காச்மூச்சுன்னு கத்தியிருக்கிறார். கூடவே நீங்க புரடியூசருன்னா, நாங்களும் கரண்ட் புரடியூசர்தான் என மீண்டும் பேச ஆரம்பித்திருக்கிறார். இதைப்பார்த்த மொத்த கூட்டமும் வாயடைத்துவிட்டது.

# முற்றிலும் புதிய மம்பட்டியான்

ஒரு பெரிய நாயகனும், ஒரு வெற்றிப்பட இயக்குநரும் அடிக்கடி சந்தித்தால் என்ன நடக்கும்? அதேதான் நடக்கப் போகிறது அஜீத் விஷயத்தில். மங்காத்தா படத்தை அடுத்து பில்லா 2 படம்தான் அஜீத்தின் அடுத்த படம். ஆனால், அப்படத்தை துவங்குவதற்கு முன்பாகவே வேறொரு இயக்குனரை அடிக்கடி சந்திக்கிறாராம் அவர். இந்த விஷயம் படு இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த இரகசிய பலூனில் எந்த நேரத்திலும் குண்டூசி விழும் என்பது அவர்களுக்கு தெரியாதல்லவா?

அப்படிதான் இந்த சந்திப்பும் டிஸ்கஷனும் வெளியே தெரிய ஆரம்பித்திருக்கிறது. அஜீத்தை பொறுத்தவரை யார் இயக்குனர் என்பதை கடைசிவரை யூகிக்கவே முடியாது. கடைசி நேரத்தில் கூட இவர் வேண்டாம் என்று வேறொருவரை நியமிக்கும் அவசரக் குடுக்கை அவர். இதற்கு முன் பலமுறை இதுபோன்ற சம்பவங்கள் நடந்திருக்கிறது. பில்லா 2 படத்தையே முதலில் விஷ்ணுவர்த்தன் இயக்குவதாகதான் இருந்தது. சட்டென்று அவரை மாற்றிவிட்டு சக்ரி டோலட்டி என்ற இயக்குனரை முடிவு செய்தவர் அஜீத். அந்த வகையில் அஜீத் தற்போது டிஸ்கஸ் செய்து கொண்டிருப்பது யாருடன் தெரியுமா? மதராசப்பட்டினம் விஜய்யுடன். ஏற்கனவே கிரீடம் படத்தின் மூலம் இருவரும் இணைந்து பணியாற்றியிருக்கிறார்கள்.

அஜீத்தின் மூட் அறிந்து நடக்கக் கூடியவர் விஜய். தெய்வ திருமகள் படத்தை முழுசாக முடித்துக் கொடுத்துவிட்ட விஜய் தினந்தோறும் அஜீத்தை சந்திக்க வந்துவிடுகிறார். இருவரும் மணிக்கணக்கில் பேசி வருகிறார்கள். ஒரு ஆக்ஷன் படம் கொடுத்து தலையை நிமிர வைங்க வாத்யாரே ...

# த்ரிஷாவின் தொழி

நகமும் சதையுமாக, ஒன்றி திரிந்த த்ரிஷாவும், ரம்யா கிருஷ்ணனும் சண்டை போட்டுக் கொண்டனரா?. மிகவும் நெருங்கிய தோழிகளான இவர்களுக்கும் புகைச்சல் எழ காரணம் என்னவாம்? சமீபத்தில் நடிகை ரம்யா கிருஷ்ணன் அளித்த பேட்டியொன்றில், தன் கணவர் கிருஷ்ணவம்சி இயக்கும் படத்தில் த்ரிஷா

நடிக்கப் போவத

இதை கேள்விப்

எழுந்துவிட்டாரா

நமக்குள் இருக்கு

தொழில் வேறு.

கதையே சொல்

கிருஷ்ண வம்சி,

கேட்கவில்லை.

அப்படியிருக்க,

நடிக்கிறேன் என்

எப்படி சொல்ல

ஆதங்கப்படுகிறா

# நடக்கப் போகும் நல்

இதுவரை செய்ததெல்லாம் எப்படியோ? இதுதான்

போகும் உருப்படியான காரியம். சங்கத்தில் உறுப்

வயோதிக நடிகர் நடிகைகளுக்கு என்று தனியாக

கட்டவிருக்கிறது. இதற்கான முயற்சியை நடிகர் ச

சரத்குமார் அதிதீவிரமாக எடுத்துவருகிறார்.

நடிகர் சங்கத்தில் அவ்வப்போது மருத்துவச் சிகி

நடத்தி வருகிறது சரத்குமார் தலைமையிலான

சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் முழு

உடல் பரிசோதனை செய்து கொண்ட நிகழ்

மாதங்களுக்கு முன்பு நடந்தது. நடிகர் சர

இந்த முகாமில் கலந்து கொண்

பரிசோதனை செய்து

தற்போது

கட்டும் பண

ஈடுபட்டிருக்

சமீபத்தில்

கோரிக்கை

சந்தித்தது.

வைக்கப்ப

முதிய உற

வேண்டும்

ஒரு ஏக்கர்

அரசு பரிசீலி

புதிய கட்ட

குரல்கள் கே

# ஹா

நட்சத்திர

வந்திருப்பதாக

கூறியது. சினிம

அப்பா ரியல்

மாநிலம்தான் எ

நிரந்தரமாக குடி

படங்களை முடி

'வேள்வி' என்ற

குறும்பு பார்வை'

'காதல் அதையும்

படப்பிடிப்பு முடித்

அடுத்தடுத்த படங்

அனைத்து பயிற்சி

இப்போது எனக்கு

நடிக்க வேண்டிய

படங்களின் வாய்

நடிகைகளுக்கு த

என்னுடைய இயற்

பிடிக்கும். அவரை

அதனாலேயே ஹா

என்றார்.

# ரஜினி

ரஜினி எப்போ

செய்திகளுக்கு அடி

சுற்றிச் சுற்றியே கட

வந்த வண்ணமுள்ள

கிடைத்துவிட்டது. ர

அளவுக்கு 100 சதவீத

பெற்றுவிட்டார் எனத்

இதுநாள் வரை ர

சிகிச்சை மற்றும்

எலிசபெத் மருத்துவ

வேண்டுமானாலும் நா

ஓரிரு தினங்களில் ர

கே.எஸ் ரவிக்குமார்

அவரது ஆலோசனை

அதைத் தொடர்ந்து செ

பிறகு படப்பிடிப்புக்காக

# ாழில் பக்தி

போவதாக கூறியிருந்தார். கேள்விப்பட்டதுமே கொதித்து விட்டாராம் த்ரிஷா. இருக்கும் நட்பு வேறு, வேறு. என்னிடம் சொல்லவில்லை வம்சி, கால்ஷீட்டும் ல்லை. உண்மை பிருக்க, நான் அவர் படத்தில் றன் என்று ரம்யாகிருஷ்ணன் சொல்லலாம்? என்று கூறி ப்படுகிறார் த்ரிஷா

# திகட்ட திகட்ட காதலித்து விட்டேன்: சிம்பு

நடிகர் சிம்புவும், நடிகை நயன்தாராவும் காதலித்ததும், பின்னர் காதல் முறிவு ஏற்பட்டதும் நடந்து முடிந்த சங்கதி. சிம்புவுடனான காதல் முறிவுக்கு பிறகு தமிழ் சினிமாவில் இருந்து விலகி இருந்த நயன்தாராவுக்கு நட்புடன் ஆறுதல் சொல்லி வந்தார் பிரபுதேவா. பிற்காலத்தில் அந்த ஆறுதலும், அக்கறையும் நயன்தாராவை கவர, பிரபுதேவாவை காதலிக்க ஆரம்பித்தார். பிரபு தேவாவும் நயன்தாராவிடம் மனதை பறிகொடுத்தார்.

இதற்கிடையில் தன் முதல் மனைவி ரம்லத்தை பிரபுதேவா விவாகரத்து செய்துவிட்டார். விரைவில் நயன்தாராவை, இரண்டாவதாக திருமணம் செய்யவிருக்கிறார் பிரபுதேவா. இந்நிலையில் நடிகர் சிம்பு அளித்துள்ள பேட்டி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காதல் பற்றிய கேள்வியொன்றுக்கு பதில் அளித்திருக்கும் சிம்பு, காதல் தோல்வியால் இதுவரைக்கும் நான் எந்த தனிமையையும் உணரவில்லை. எல்லாமும் நடந்து முடிந்துவிட்டது என இந்த வாழ்வை ஈஸியாகவும் எடுத்துக் கொள்ளவில்லை. இனி எனக்கான அடையாளமாக அந்தக் காதல் இருக்குமான்னு தெரியவில்லை. எல்லாமே மாறக் கூடியதுதானேன்னு நடை போட ஆரம்பித்து விட்டேன்.

என்னை பொறுத்த வரைக்கும் தனிமையை எல்லா மனிதர்களும் உணரணும் எனத் தத்துவம் பேசுகிறார் சிம்பு.



# நல்ல விஷயம்

இதுதான் நடிகர் சங்கம் செய்யப் ் உறுப்பினராக இருக்கும் னியாக ஒரு இல்லம் நடிகர் சங்கத் தலைவர் ர். ுவச் சிகிச்சை முகாம்களை பிலான அமைப்பு. முழுமையான நிகழ்வு கடந்த சில நடிகர் சரத்குமாரும் கொண்டு மருத்துவ செய்து கொண்டார். ற்போது புதிய கட்டடம் டும் பணியில் பெட்டிருக்கும் சங்கம், மீபத்தில் பல்வேறு காரிக்கைகளுடன் முதல்வரை ந்தித்தது. அப்போது வக்கப்பட்ட ஒரு கோரிக்கைதான் திய உறுப்பினர்களுக்கு இல்லம் கட்ட ண்டும் என்பது. இதற்காக அரசிடம் ஏக்கர் நிலம் கேட்டிருக்கிறார்களாம். சு பரிசீலிக்குமா, இல்லையா என்பது வேறு விஷயம். ப கட்டடத்திலேயே இந்த இல்லம் நிறுவப்படலாமே என்ற கள் கேட்கிறது சங்கத்திற்குள்ளேயே!

# சித்ரா கலங்கினார்

சின்னக் குயில் எனத் திரை இசை ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்படும் கே.எஸ். சித்ரா மீண்டும் பாட ஆரம்பித்துள்ளார். இசைமேதைகள் எம்.எஸ் விஸ்வநாதன், இளையராஜா ஆகியோரால் திரையுலகுக்கு கொண்டுவரப்பட்டவர் சித்ரா. மலையாளப் பாடகி என்றாலும், தமிழை அத்தனை அழகாகப் பாடி ரசிகர்களை வசியம் செய்தார். இதுவரை 15,000 பாடல்களைப் பாடி, ஆறு தேசிய விருதுகள் உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள அவர், சமீபத்தில் பெரும் சோகத்தைச் சந்தித்தார்.

அவரது ஒரே மகள் நந்தனா துபாயில் நீச்சல் குளத்தில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார். இந்த அதிர்ச்சியை சித்ராவால் தாங்க முடியவில்லை. இதனால் பாடுவதையே நிறுத்திவிட்டிருந்தார். இப்போது மீண்டும் பாடத் தொடங்கியுள்ளார். மலையாளப் படத்துக்காக ஒரு பாடல் பாடும் வாய்ப்பு வந்ததும் அவர் ஏற்றுக் கொண்டார். இந்தப் பாடல் ஒரு தாய் தன் மகள் மீது கொண்டிருக்கும் பாசத்தைச் சொல்லும் பாடல். சென்னையில் எம்.ஜி. ஸ்ரீகுமார் இசையில் இந்தப் பாடலைப் பாடும்போது ரெக்கார்டிங் தியேட்டரில் கதறி அழுதுவிட்டாராம் சித்ரா.

# றாசினி உருவான கதை

சத்திர நடிகைகள் பட்டியலில் இடம்பிடிக்கவே சினிமாவுக்கு நப்பதாக நடிகை ஹாசினி தெரிவித்தார். இது குறித்து அவர் ு, சினிமாவுக்கும் என் குடும்பத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ரியல் எஸ்டேட் தொழிலில் பிரபலமாக இருக்கிறார். ஆந்திர தான் என்னுடைய சொந்த ஊர். இருந்தாலும் சென்னையிலேயே மாக குடியேறிவிட்டோம். ப்ளஸ் டூ படிக்கிறேன். தற்போது இரண்டு ள முடித்துவிட்டேன்.

' என்ற படம் மூலம் அறிமுகமானேன். இப்போது 'அரும்பு மீசை பார்வை' படத்துக்கு பரவலான பாராட்டுகள் கிடைத்துள்ளன. அடுத்து அதையும் தாண்டி புனிதமானது' என்ற படத்தில் நடித்துள்ளேன். ப்பு முடித்துவிட்டது. இறுதிக்கட்ட பணிகள் நடந்து வருகிறது. த்த படங்களுக்குத் தயாராகி வருகிறேன். சினிமாவுக்கான பயிற்சிகளையும் கற்றுள்ளேன். கிளாமர் வேடங்கள் எனக்குப் பொருந்தாது.

வண்டிய சூழல் மற்றும் நட்சத்திர அந்தஸ்து உள்ள ் வாய்ப்புகள் வந்தால் நடிப்பேன். கிளாமர், நக்கு தவிர்க்க முடியாத ஒன்று. மேகனா தான் இயற்பெயர். நடிகை சுஹாசினியின் நடிப்பு எனக்குப் அவரைதான் ரோல் மொடலாக நினைக்கிறேன். யே ஹாசினி என்று பெயர் வைத்துக் கொண்டேன்





# னி உடல்நிலை?

எப்போது வருவார் என்ற கேள்வியே ஓராயிரம் க்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இந்த கேள்வியைச் யே கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக செய்திகள் ணமுள்ளன. இப்போது இந்த கேள்விக்கு விடை டது. ரஜினி எந்த நேரத்திலும் சென்னை திரும்பும் 0 சதவீதம் பழைய உடல்நிலை மற்றும் தெம்பைப் ர் எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ரை ரஜினியை வீட்டுக்கே போய் பார்த்து ற்றும் ஆலோசனைகள் அளித்துவந்த மவுன்ட் ருத்துவமனை மருத்துவர்கள் ரஜினி எப்போது லும் நாடு திரும்பலாம் என்று கூறிவிட்டனர். இன்னும் ளில் ரஜினியைப் பார்க்கப் போகும் இயக்குநர் குமார் 'ராணா' படப்பிடிப்பு தொடங்குவது குறித்த ாசனையைப் பெற்றுவிட்டு சென்னை திரும்புகிறார். ர்ந்து சென்னை வரும் ரஜினி, ரசிகர்களைச் சந்தித்த ப்புக்காக வெளிநாடு செல்வார் என்று தெரிகிறது.



# தேன் கிண்ணம்

## காதல் கசக்குமா...?

"காதல் கசக்குதையா
வரவர காதல் கசக்குதையா..."

என்ற பாடலைக் கேட்கும் போது "சீ... சீ... இந்தப் பழம் புளிக்கும்" என்ற திராட்சைப்பழம் எட்டாத நரியின் கதை தான் ஞாபகத்துக்கு வருகிறது. காதல் யாருக்குத்தான் கசக்கும். காதல் என்பது மிகவும் இனிமையானது. இன்பமானது. இயல்பானது. நம் எல்லோராலும் மிகவும் நெருக்கமாகவும் உணர்வுபூர்வமாகவும் அனுபவிக்கப்படுவது.



கண்மூடித்தனமான காதலும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாத காதலும் (உண்மையில் இவையெல்லாம் காதல் என்றே சொல்லி விட முடியாது. வெறும் கவர்ச்சியாலும், பருவக் கோளாறாலும் வந்தவையே) உருப்படாமலோ சரிப்படாமலோ போவதுண்டுதான். ஆனால் ஒருவரையொருவர் புரிந்து மனதால் காதலிப்பவர்களின் காதல்கள் ஒருபோதும் உருப்படாமலோ சரிப்படாமலோ போகாது.

தேவதாஸ் பார்வதி காதலோ, அம்பிகாவதி அமராவதி காதலோ தோற்றுப் போகவில்லை. அந்தக் காதல் இன்றுவரை வாழ்கிறது. எமது சமுதாயத்தின் அந்தஸ்து மோகம், சாதிமத பேதம், பணம்... என்ற கோட்பாடுகளுக்குள் காதலர்கள்தான் பிரிக்கப்பட்டார்கள். காதல் சாகவில்லை.

ஆனால் காலத்துக்குக் காலம் காதலின் தன்மை, அதாவது காதலர்கள் காதலை வெளிப்படுத்தும் தன்மை மாறிக் கொண்டுதான் போகிறது. கிட்டப்பா காலத்தில் காயாத கானகத்தே.. பாடி களவாக நடந்த காதல்.. இன்று இணையங்களினூடும் அம்மா, அப்பாவின் அனுமதியுடனும் நடக்கிறது.

சரியாக யோசித்துப் பார்த்தால் காதலர்கள் சில காலம் ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுப் பேசி தம்மை நன்கு புரிந்து கொண்ட பின் வாழ்க்கையில் இணைவது ஆரோக்கியமானது என்பது விளங்குகிறது.

இப்பாடலில்

நம்ம தகப்பன் பேச்சை தாயின் பேச்சை மதிக்கணும்

நீயாகப் பெண் தேடக் கூடாது என்றும் கூறப்படுகிறது.

பெற்றோர்கள் பேச்சை கண்டிப்பாக மதிக்க வேண்டும்தான். ஆனால் அதையே பெற்றோர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதுதான் தப்பானது. எத்தனை திருமணங்கள் மனதால் விரும்பாமல் வெறுமனே தாய் தந்தையரின் விருப்பத்துக்காக நடந்து மனதளவில் தோல்வி கண்டுள்ளன.

வாழப்போவது பிள்ளைகள். ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற்றோர் வழங்கலாம். கட்டாயப்படுத்தக் கூடாது. இப்படியான கட்டாயக் கல்யாணங்கள் செய்தவர்கள்தான் மனைவியைக் காதலிக்க மறக்கிறார்கள். காதல் என்பது புனிதமானது தான். அது காதலிப்பவர்களைப் பொறுத்துத்தான் வெற்றி பெறுவதிலும், தோல்விபெறுவதிலும் இருக்கிறது.

## சீதனம் சாதித்தவை

சுகமான வாழ்தலுக்கான
புதுப்பித்தலை எண்ணியெண்ணியே
வண்ண சொப்பனம்
காணும் பரந்த
வெளியின் ஓரத்தில்
விரிந்த அறிவிலார்.
பாரம்பரியங்களின்
கடைப்பிடிப்பில் சிலர்
வெற்றுச் சாக்குகளைச்
சீதனங்களால்
நிரப்புவதேனோ!
அளவு கொடுக்கப்பட்ட
வாழ்வு ஏக்கங்களால்
அழுதழுதே கண்ணீர்
திர்ந்து போனது
எம்மவருக்கு.
சீதனம் வாங்கி
சாதனை படைத்தவர்கள் இன்று
சிதைந்து ஊதாரியாய்
உறங்கிக் கொண்டிருப்பதுதான்
மாயமாகிப் போனது.
இளமைத் துடிப்பின்
இரத்தங்கள் சீதனங்களாலேயே
வலுவிழந்து பாழடைந்து
போய்க் கிடக்கிறது
இந்நிலையை மாற்றுவோம்.
இருத்தலுக்கான வாழ்தலை
நம்புவோம் எனத் தொடங்கி
வாழ்வுக்கான புது முயற்சித்தலை
பாவித்து புது வாழ்வுக்கான
பாதைக்கு வழி சமைப்போம்.

கிண்ணியா நஸார் இஜாஸ்.

## அவதானமாயிருங்கள்...

போலிப் புன்னகைகள்
பொய்யான வாழ்த்துரைகள்
நட்பு என்ற தூய்மைக்குள்
நிறைத்துப் பெருமை கொள்ளும்
ஏமாற்றுப் பேர்வழிகள்
ஏராளம் உலவுதிங்கே
அவதானமாயிருங்கள்...

அகம் வேறு எண்ணங்கள்
புறம் வேறு புகழுரைகள்
உள் நெஞ்சில் வக்கிரங்கள்
உண்மை போன்ற நடிப்புக்கள்
உயிர் வாங்க வருவார்கள்
உயிர் காக்கும் நட்பென்று
அவதானமாயிருங்கள்...

சோகத்தைத் தாண்டிவிட்டு
தோள் கொடுக்கும் சொந்தம் என்று
கூசாமல் பொய் பகர்வர்
நட்பென்ற புனைபெயரில்
ஓநாய்களாயிருப்பர்
அவதானமாயிருங்கள்...

அறம்பற்றி உரைத்து
அறிஞர் போல் இருப்பர்
நீங்களில்லா சூழலிலே
துரோகங்கள் புரிந்து
உங்களையே வைவார்கள்
அவதானமாயிருங்கள்...

அழுக்காறு, அவா, வெகுளி
இன்னாச்சொல் எல்லாம்
இவரோடே கூட்டிருக்கும்
இருந்தும்...
இன் சொல்லில் விசம் கலந்து
இரை கௌவக் காத்திருப்பர்
அவதானமாயிருங்கள்...

பா.பொன்நிலவன், மீசாலை.

## பூக்களிடம் கற்றுக்கொள்

ஒரு நாளில் மலர்ந்து
அந்நாளிலேயே மடிகின்ற போதிலும்
புன்னகையைத் தொலைக்காமல்
பூத்துக் குலுங்குகிறது புது மலர்.

நிலையற்ற வாழ்வென்று
நித்தமும் தெரிந்து கூட
புத்தம்புதுப் பொலிவுடன்தான்
பூரித்து நிற்கின்றது.

வண்ணங்கள் பல
கொண்ட போதும்
எண்ணத்தில் என்றும்
இருந்ததில்லை ஏற்றத்தாழ்வு.

கண்ணைக் கவரும்
கவர்ச்சி இருந்தும் கூட
கர்வம் கொள்ளவில்லை
காண்போரை மயக்கும் அழகியென.

தேன் குடிக்கும் தேனியிடம்
வீண் சண்டை போடவில்லை
தான் என்ற அகம்பாவம்
கொஞ்சமும் கொள்ளவில்லை.

அவற்றிடம் இருந்து நாம்
அதிகம் கற்க வேண்டும்
அறியாமை இருளையும்
அடியோடு அகற்ற வேண்டும்.

ஆஷா-யாழ்ப்பாணம்.

## நான் யார்?

கருவில் உருவான
கலை மோக நினைவுகள்
புகையில் புண்பட்டு
புதுவழி தேடி- நின்ற போது...

கருவில்-எனைக்
கட்டிச் சுமந்த-தாயின்
கை படாமல்-தொட்டில்
கட்டித் தாலாட்டும்
தொன்மை மாறி-இன்று

பதுங்கு குழியில் -எனை
தூங்க வைத்து
பாலூட்டும்-தாயின்
பாச அணைப்பு எங்கே?...

கண் விழித்து- நான்
காண்பதெல்லாம் -மேகம்
நிறைந்த
வானூர்தியும்-இரவில்
வெளிச்சமாகும்-வெடி ஓசையும்...

தாலாட்டு இதுவென்று-நான்
நினைத்தேன்-என் தாயின்
உயிர் தாவிய-கொடூர
யுத்தம் இதுவென்று
இன்றுதான் புரிகிறது.

அநாதை மடத்தில்
வளர்ந்த-எனக்கு
அன்னை தெரியுமா?
தந்தை தெரியுமா?
விடுகதையான-என்
வாழ்க்கைக்கு-விடிவு
எப்போதோ?
'பாவி' எனும் பதத்தின்
அர்த்தம் நானோ?
நான் யார்??...

மல்லிகை வாணன்,
திருமலை.

## பாடுகள் போதும்


முட்கம்பி முகாம் வாழ்க்கை முடித்து
ஒருவாறு
வீட்டு முற்றமதில் வந்து சேர்ந்த போது
வெறுமையாகியிருந்தது வீடு மட்டுமல்ல
எனது இதயமும்தான்.
'காவலாய் நின்ற வேலிகள்;
கன்னம் வைத்தவை போக
மீதியை
'காக்கும் கரங்களும்'
கைப்பற்றிக் கொண்டன கச்சிதமாக!
புயலடித்து ஓய்ந்த பின்
புதினம் பார்க்கும் கண்கள் போல
எனது வீடு வளவை
வியப்புடன் மேய்கின்றன என்னிருவிழிகள்.
கூரையை இழந்த கோலமாய்
கொங்கிறீட் வீட்டோடு
தகிக்கும் வெயிலில் தாகம் தீர்த்த
செவிளநீர் மரங்கள் ஆறு
சிதைந்து கிடந்தன மண்ணில் வேறாய்.
இனிக் கோபம் கொண்டழுது என்ன பயன்?
மாறாத காயங்கள் மனதை நிதம் தகிக்க....
சாபம் போடுவதைத் தவிர
சத்தியமாய்
வேறுவழி தெரியவில்லை எனக்கு.
கொள்கை மாறிக் குணம் மாறி
பணம் பறிக்க முனைந்தவர்கள் மத்தியில்
நான்
பாவப்பட்ட மனிதனாய் பிறந்த பழியாதோ?
நம்பிக் கெட்டு
வாழ்வு நடுத்தெருவான பின்பு
மனம் வெம்பியழுகிறது
இனி 'விடுதலை' வேண்டாமென்று!

அலெக்ஸ் பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

# புருவங்களை அழகுபடுத்த...

*புருவங்களை மிகவும் கீழ் நோக்கி வளைத்து ஷேப் செய்யக் கூடாது. லேசாக மேல் நோக்கி வளைந்திருக்கும் படி செய்தால் பார்க்க இளமையான தோற்றம் கிடைக்கும்.

*நீளமான முகத்திற்கு புருவங்களை கண்களுக்கு



சற்று வெளியே இருக்கும்படி பார்த்து ஷேப் செய்ய வேண்டும். பார்க்க அப்பொழுது தான் பார்க்க அழகாக இருக்கும்.

*சாதாரண முகத்திற்கு சாதாரண அளவில் ஷேப் செய்யலாம்.

*சிறிய முகத்திற்கு புருவங்கள் ரொம்பவும் நீள மாக இருக்க கூடாது.

*புருவங்களை எப்போதும் திரெடிங் (thereding) முறையில் அகற்றுவதே மிகவும் நல்லது. சிலர் வாக்சிங் முறையிலும் அகற்றுவதுண்டு. வாக்சிங் செய்வதால் நாளடைவில் அந்த இடத்துத் தசைகள் சுருங்கித் தொய்ந்து போகக் அதிக வாய்ப்பு உள்ளது. எனவே வாக்சிங் முறையில் புருவங்களை நீக்கக் கூடாது.

*சிலர் பிளேட் உபயோகித்துப் புருவங்களை ஷேப் செய்வதும் உண்டு. இந்த முறை மிகவும் ஆபத்தானது. அப்படி அகற்றும் போது அந்த இடத்து முடிகள் மறுபடி வளரும் போது மிகவும் அடர்த்தியாக மற்றும் ஒழுங்கற்ற முறையில் வளரும். எனவே இவ்வாறு செய்ய கூடாது.



# பெண்களுக்கெதிரான வன்முறைகள்

எப்படி உட்கார்வது, தூங்குவது என்று கட்டுப்படுத்த, துவங்கும் சிறுவயது முதலே பெண்களுக்கு வன்முறை துவங்குகிறது. சிறுவயதில் ஆண் பெண்களை பிரித்து விடுவதிலேயே பெண் என்பவள் ஆணுக்கு மர்மமாக தெரிகிறாள்.

பெண் பிள்ளைகளை பொறுத்தவரை அன்பு என்பது வன்முறையாகத் தான் இருக்கிறது. ஆண் பிள்ளைகளை பொறுத்தவரை அன்பின் பெயரால் ஆணாதிக்கம் துவங்குகிறது.


கலாச்சாரம் சார்ந்து அழகு சார்ந்து ஆகி யவைகளிலிருந்தெல்லாம் பெண்களுக்கான வன்முறை துவங்குகிறது. சமூக நிர்பந்தம் மூலம் பெண் குண்டா காமல் மெலிதாக இருக்கிறாள். அதுவே ஒரு வன்முறை. கிறது. காதல், பாலியல் இவைகளில் பெண்ணுக்கு என்ன பிடிக்கும் என்பதெல்லாம் யாருக்கும் தெரி யாது. சினிமா குடும்பங்களில் சொல்லப்படுவதையே தங்களுக்கு பிடித்தமானதாக பெண் கொள்ள வேண்டிய சூழல் இவையே பெரிய வன்முறை. பார்வைகளாலேயே பெண்களுக்கு வன்முறை இழைக்கப்படுகிறது. பாலியல் ரீதியாக பெண்ணின் விருப்பத்தை சொல்ல முடியாத சூழல் இதுவே ஒரு வன்முறை.


தாய்மை என்பதில் தான் பெண்ணின் முழுமை என்ற கருத்து அழுத்தமாக நம் சமூகத்தில் இருக்கிறது அதை உடைத்தெறிய வேண்டும். ஆண், பெண் வாழ்வு இயற்கை நியதிதான். உண்மையான அன்போடு வாழ்ந்தால் சந்தோசமாய் தான் இருக்கும். அப்படியான சந்தோசம் இல்லாமல் இருப்பதற்கு தனியாக வாழ்தல் நலம் பயக்கும்.

ஆண் துணையில்லாமல் பெண் வாழலாம். அதற்கான ஏற்பாடெல்லாம் இங்கில்லை. முதுமை என்ற பெயரில் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு அளவே கிடையாது. பெண் ஒவ் வொரு திருப்பங்களிலும் காயப்படுத்தப்படுகிறாள். குடும்பங்களில் நடக்கும் வன்முறைகளுக்கு தீர்வு சொல்லவே முடியாது. புகை பிடிக்கிற, மது அருந்தும் கணவனுடன் வாழ வேண்டிய நிர்பந்தம். மற்றவர் முன்னிலையில் கணவன் மனைவியை அடிப்பது. பொருளாதார ரீதியான வன்முறை பெண் ஊதியத்தை கணவன் பெற்றுக்கொள்வது.

இது போல விதவிதமான வன்முறைகள் எல்லா குடும்பங்களிலும் நிகழ்ந்துக் கொண்டே இருக்கிறது. இவ்வாறு பல வடிவங்கள் எடுத்து வேறுவேறாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பெண்களுக்கான வன்முறைகளைத் தடுத்துநிறுத்த வேண்டும்.

## சல்வார்களுக்கான அழகான டிசைன்கள்






# முதுகுவலியால் பாதிக்கப்படும் பெண்கள்

**ஆண்களைவிட** பெண்கள் தான் முதுகுவலியால் அதிகமாக அவதிப்படுகின்றனர். ஏனெனில் குதிக்கால் செருப்புகள், நாகரிக செருப்புகள் அணிவதால், உடலின் புவியீர்ப்பு மையம் மாறு-பாடு அடைகிறது. ஆங்கில எழுத்தான 'எஸ்' வடி வில் அமைந்துள்ள முதுகுத் தண்டு வடம், பெண் மகப்பேறு அடை யும் போது மேலும் வளைந்து விடுகிறது.

சிலருக்கு ஹோர்மோன் மாறுபட்டால், முள்ளெலும்புகளுக்கு இடை யில் உள்ள சவ்வு நழுவி, வலி ஏற்பட்டு வாழ்க்கை முழுவதும் அவதிப்படும் நிலை ஏற்படுகிறது. உடல் உழைப்புக்கு பழக்கப்படாதோர், திடீரென குனிந்து, நிமிர்ந்து பணி செய்யும் போதோ, எடை அதிகம் கொண்ட பொருட்களை



தூக்கும் போதோ, தசைகள் ஒத்துழைக்காமல் முதுகுவலி ஏற்படும்.

உடல் எடை அதிகரித்தாலும் முதுகுத்தண்டு வடத்தை பதம் பார்க்கும். நடக்கும் போதெல்லாம் உடல் எடையை தூக்கி கொண்டு நடக்க வேண்டிய நிலை ஏற்படுவதால், முதுகில் கடுமையான வலி ஏற்படும். வயது ஏறஏற முள்ளெலும்புக்கு இடையில் உள்ள நீர் வற்றி தசைகள் சுருங்கி வலுவிழந்து விடுவதால், பயன்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையை எட்டி விடுகின்றனர்.

எலும்புகளில் சுண்ணாம்பு குறை வதால், அவையும் வலுவிழக்கின்றன. எலும்புகள் ஒன்றுக்கொன்று தாறுமாறாக ஒட்டிக் கொள்வதால், வயதானவர்களின் உயரமும் குறைகிறது. இதனால் அடிக்கடி முதுகு வலி ஏற்படுகிறது.


## அன்னாசிப் பழ ஜாம்

**தேவையான பொருட்கள்:**

முற்றிப் பழுத்த அன்னாசி - 1
ஓரளவான தக்காளிப் பழம் - 4
சீனி - 500 கிராம்
முந்திரிப்பருப்பு - 50 கிராம்
ப்ளம்ஸ் - 50 கிராம்

**செய்முறை:**

அன்னாசிப் பழத்தின் தோலை சீவி நடு தண்டை அகற்றி சின்னதாக வெட்டி அரைத்துக்கொள்ளவும். தக்காளிப் பழத்தை கொதி நீரிட்டு மூடி வைத்து தோலுரித்து அதனையும் அரைத்துக்கொள்ளவும். அடி தடிப்பான பாத்திரத்தில் இரண்டையும் கலந்து வற்றக் காய்ச்சவும். நன்றாக வற்றியதும் சீனியை இட்டு வற்ற விடவும். அடித்தடிப்பான பாத்திரமென்றால் அடிக்கடி கிளர தேவைப்படாது. நன்றாக இறுகி வரும் போது நட்ஸ், பிளம்ஸ் தூவி கிளறி இறக்கவும்.



## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :- 277**

கேள்வி : எந்த முறையில் புருவங்களை அகற்ற வேண்டும்?

பரிசு 1000/- ரூபா.

விடையைப் பக்கத்திலுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி, பரிசுப் போட்டி இல : 277**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல : 1772, கொழும்பு, த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.**
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- **27.07.2011**

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்.

பரிசுப் போட்டி இல:- 275 இற்கான விடை:- புரதம், கல்சியம், விற்றமின் A&D
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- தம்பையா யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

277


பெயர் : ..........
முகவரி : ..........
..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
கையொப்பம் : ..........

# விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

## இவர்களுக்கும் துயரம் உண்டு

கார்லொஸ் ரவேஸ். இவர் ஆர்ஜென்ரீனாவின் தேசிய அணி வீரர். தற்போது கோபா அமெரிக்கா கிண்ணத்துக்கான சுற்றுப் போட்டியில் தன் தாயகத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறார். அதோடு இங்கிலாந்தின் மென்செஸ்ரர் சிட்டி உதைபந்தாட்ட அணியின் தலைவரும் இவர்தான். இவர் தற்போது அந்த அணியில் இருந்து விலகப்போவதாக அறிவித்துள்ளார். இதற்குக் காரணம் அணியுடன், அணி நிர்வாகத்துடன் ஏற்பட்ட முரண்பாடுகள் எதுவும் இல்லை. என் குடும்பத்துடன் ஒன்றிணைவதற்காகவே இந்த முடிவை மிகக் கவலையுடன் நான் எடுக்கின்றேன். இதற்காக என்னை என் கழகம் மன்னிக்க வேண்டும் என்கிறார்.




கடந்த ஜனவரியில் இந்த எண்ணம் தனக்குத் தோன்றியதாகவும், இருந்தும் மன அழுத்தங்களைச் சகித்துக்கொண்டு தான் விளையாடியதாகவும் இவர் கூறுகின்றார். என் இரண்டு பெண் குழந்தைகளான கெட்டி, மற்றும் புளொரென்சியா இருவரும் எனக்காக நிறையவே ஏங்குகிறார்கள் என்கிறார் இவர். ஆனாலும் விலகும் எண்ணத்தை விலக்கிக் கொண்டு விளையா- டியதால் இவர் மென்செஸ்ரர் சிட்டி FA கிண்ணத்தை வென்றதுடன், அணியை அடுத்த வருட சாம்பியன் லீக் ஆட்டங்ளுக்கும் தகுதியாக்கியவர். மேலும் 35 வருடங்களுக்குப் பின் பெரிய வெற்றியொன்றை மென்செஸ்ரர் அணி பெறவும் காரணமாக அமைந்தவர். கழக உதைபந்தாட்டம் நீண்டகாலம் நடைபெறுவதால் மனைவி வனீஸாவையும் பிள்ளைகளையும். இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்று அங்கேயே குடும்பம் நடத்தினார் ரெவெஸ். ஆனால் இங்கிலாந்தின் காலநிலை, மற்றும் வாழ்க்கை முறைகளோடு இவரின் குடும்பத்தவர்களால் ஒத்திசைந்துபோக முடியவில்லை. இதனால் குடும்பம் மீண்டும் ஆர்ஜென்ரினா செல்லவேண்டி ஏற்பட்டுவிட்டது.

2009 இல் மென்செஸ்ரர் சிட்டியில் இணைந்த ரெவஸ் அதற்கு முன் இங்கிலாந்தின் மிகப் பலமான அணியான மென்செஸ்ரர் யுனைட்டட் அணிக்காக விளையாடியவர். இந்தக் கழகம் இரண்டு பிரீமியர் லீக் கிண்ணங்கள், ஒரு சாம்பியன் லீக் கிண்ணம் வெல்லக் காரணமாக அமைந்தவர். இதில் இருந்து இவர் எவ்வளவு விலைமதிக்க முடியாத வீரர் என்பதையும் எந்த ஒரு இங்கிலாந்து அணியும் எத்தனை மில்லியன்கள் கொடுத்தாலும் தம் அணியில் இணைந்துக்கொள்ள விருப்பம் என்பதும் புரியும். ஆனால் இவை எல்லாவற்றையும் விடுத்து, தன் குடும்பத்துடன் இணைய விரும்புகிறார் இவர். நான் ஆடிய கழகங்களுக்கு என்னால் இயன்ற முழுவதையும் கொடுத்தேன். இப்போது என் மனைவி பிள்ளைகளின் எதிர்காலத்தையும் நான் கவனத்தில் கொள்ள வேண்டும். இனி என் முடிவில் எந்த மாற்றமும் ஏற்படுத்தமாட்டேன் என்கிறார்.

இவரின் குரலை ஒரு தனி நபரின் குரலாக எடுக்க முடியவில்லை. பல்வேறு விளையாட்டுக்களில் மாதக் கணக்கில் (சிறப்பாகக் கிரிக்கெட்) வீரர்களைத் தம் இனிய குடும்பங்களில் இருந்து பிரிந்து விடுகின்றன. ஆங்காங்கே பல வீரர்களின் இதேபோன்ற கவலை தோய்ந்த குரல்களைக் கேட்டிருக்கிறோம். சர்வதேச வீரர்களின் அவர் தம் விளையாட்டுக்கள் அவர்களின் தொழிலாக அமைந்துவிடுவதால் இத்தகைய துன்பங்கள் மன உளைச்சல்களுக்கு அவர் ஆளாவது தவிர்க்க முடியாதது. ஒன்றைப் பெறுவதற்கு இன்னொன்றை இழக்கலாம். ஆனால் குடும்பத்தை இழக்கலாமா? கார்லொஸ்ரெவொஸ் அதற்கான பதிலைத் தந்துள்ளார்.

## மறுபக்கம்

இந்திய, மே.இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் மைதான மத்தியஸ்தராகக் கடமையாற்றிய 59 வயதான டரல் ஹார்ப்பரின் தீர்ப்புகள் இந்திய அணிக்குப் பாதகமாக அமைந்ததாக தோனி மற்றும் வீரர்கள் குற்றம்சாட்டி இருந்தார்கள். ஊடகங்களும் ஹார்ப்பரை வாங்குவாங்கென்று வாங்கி இருந்தன. எப்பொழுதும் நன்றி பாராட்டப்படாத ஒரு தொழில் என்றால் அது கிரிக்கெட் மத்தியஸ்தர் வேலைதான். கூசாமல் அவர்களை எல்லோரும் குற்றம் சாட்டிவிடுவோம்.

ஆனால் நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் உண்டல்லவா? எனவே ஹார்ப்பரின் பக்கத்தையும் பார்க்க வேண்டாமா? இதோ அவர் பேசுகிறார். இறுதித் டெஸ்ட் போட்டியின் மத்தியஸ்தர் பதவியில இருந்து அவர் நீக்கப்பட்டது அவரைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. ஆனாலும் (ICC) சிலவிமர்சனங்கள் காரணமாக அவரே விலகிக்கொண்ட மாதிரியும் ஒரு பாவனை காட்டுகிறது. எத்தரப்பாருடைய கண்ணியமும் குறைந்து விடக் கூடாது என்பதற்காக இருக்கலாம்.

தனது தீர்ப்புகளில் 94வீதமானவை சரியானவை எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஹார்ப்பர் தன் பக்க நியாயத்தைக் கூறுகிறார். இது என்னுடைய சிறந்ததொரு ஆட்டமாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஆட்ட மத்தியஸ்தர் ஜெப்குரோவின் கணிப்புகளின் அடிப்படையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார். ஜெப்குரோவின் ஆய்வுகள் துபாயில் உள்ள ICCயின் தலைமைப் பீடத்திலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மேலும் கூறுகிறார். ஹார்பஜன் மீதான LBW முடிவு சரியல்ல என்பதை ஒப்புக்கொள்ளும் அவர் தேவேந்திர பிசுவின் விக்கெட் எடுத்த பந்தொன்று நோபோல் என்பதைத் தான் கவனிக்கத் தவறிவிட்டதையும் கூறி இவை திட்டமிட்ட செயல்கள் அல்ல என்கிறார். விராட்கோலி அவுட்டாகிய விதத்தில் தன் தீர்ப்புச் சரியானது என்பதில் ஹார்ப்பர் உறுதியாகவே இருக்கிறார். இந்த [illegible] (RePlay) முடிவு சரியானது



என்றோ அல்லது பிழையானது என்றோ உறுதிப்படுத்த முடியவில்லை என்கிறார்.

எது எவ்வாறாயினும் ஏதோ ஒரு காரணத்தால் இந்திய வீரர்கள் கிரிக்கெட் சட்ட விதிகளுக்குச் சற்று மேலானவர்களாகத் தங்களை நினைத்துக் கொள்வது புலனாகிறது என்று குற்றம் சுமத்துகிறார். மே.இந்திய அணி கூட இந்திய வீரர்கள் APPEAL பண்ணும் போது முடிவைத் தாங்களே தீர்மானித்தவர்களாக ஆக்ரோஷப்படுவதையும் தம்மிடம் கருத்துக் கூறியதாகக் கூறுகிறார். கிரிக்கெட் விதிகளுக்கு உட்பட்டு இந்திய வீரர்களுடன் கடமையாற்றுவது சவாலானதுதான் என்று கூறும் இவர், இந்த ஆட்டத்தில் தோனியுடனான உறவு அவ்வளவு மகிழ்ச்சியானதாக இருக்கவில்லை என்றவர், இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் என்றும் சம்மனசுகளோ, தேவதைகளோ இல்லை என்று முடிக்கும் போது, இந்திய வீரர்களைப் பெரிதாக அவர் மதிக்கவில்லை என்றும் தோன்றுகிறது.

எது எவ்வாறாயினும் டரல் ஹார்ப்பரின் கருத்துக் கூறும் சுதந்திரத்தை யாரும் மறுத்து விடக் கூடாதல்லவா. அவர் பக்க நியாயங்களும் எடுத்துக் கூறப்பட்டால்தான் ரசிகர்கள் சரியான முடிவுக்கு வரமுடியும்.

## மெல்லெனப் பாயும் தண்ணீர்



**இவ்வருட** மாண்புமிகு விம்பிள்டன் ஆடவர் ஒற்றையர் ரென்னிஸ் இறுதிப் போட்டியில் சேர்பியாவின் 24 வயதான ஜோகோவிச், ஸ்பானியாவின் ஏபெல் நடாலைத் தோற்கடித்து கிண்ணம் வென்று அசத்தியுள்ளார். அதேநேரம் தரவரிசைப்பட்டியலிலும் முதலாம் இடத்துக்கு வந்துவிட்டார். காலங்கள் மாறுகின்றன. புதிய முகங்கள் பிரபல்யமாகின்றன என்று வெற்றியின் பின்னர் ஜோகோவிச் கூறினார். 2004 இல் ரோஜர் பெடரர் தரவரிசையில் முதல் இடம் பெற்ற பின் தொடர்ந்து பல வருடங்கள் இவரும், ரபேல் நடாலுமே தரவரிசை ஒன்றை மாறிமாறிப் பெற்றுக்கொண்டு வந்தனர். இவர்கள் இருவரையுமே பல சந்தர்ப்பங்களில் ஜேகோவிச் சந்தித்தவர். அவர்களைப் பற்றிக் கூறும் போது, இந்த இரண்டு * ஜாம்பவான்களுடன் விளையாடிப் பெற்ற அனுபவம்தான் விம்பிள்டன் கிண்ணமும் தரவரிசை ஒன்றும் என்று மனம்திறந்து கூறியுள்ளார் இவர்.

இவ்வருட ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய ஓப்பன் வெற்றிக் கிண்ணத்தை வென்றவர் இவர். 2008இலும் இவர் அவுஸ்திரேலியா ஓப்பன் கிண்ணம் வென்றிருந்தார். 2011 அவுஸ்திரேலிய ஓப்பன் முடிவடைந்ததும் ரென்னிஸ் உலகில் BIG3 என்றொரு சொற்றொடர் பாவனைக்கு வந்தது. அதாவது ரோஜர் பெடரர், ரபேல் நடால் இருவருடனும் இணைந்து இவரது பெயரும் பேசப்பட்டது. ஆனால் அப்போதும் ஜொகோவிச் அடக்கமாகவே பேசினார். அவர்கள் இருவரதும் சாதனைப் பட்டியல் மிகப் பெரியது. அவர்களின் பாய்ச்சலும், வீச்சும் அருகில் நெருங்க முடியாதவை, என்னை அவர்களுடன் இணைத்துப் பேசினாலும் கூட அவர்களே Great Players என்று கூறி இருந்தார்.

கடந்த மூன்று வருடங்களாக இவரால் திறமையாக விளையாட முடிந்ததே தவிர கிண்ணங்களைக் கையகப்படுத்த முடியவில்லை. இவர் தன்னைப் பற்றிய சுயவிமர்சனத்தில் கடந்த மூன்று வருடங்களாக என்னில் எனக்கே நம்பிக்கை இருக்கவில்லை. அதோடு தொடர்ந்து திறமையைத் தக்கவைத்துக்கொள்ளவும் இயலவில்லை. ஆனால் படிப்படியாக இவற்றில் இருந்துமீண்டு கடந்த ஆறு மாதங்களில் உயர் ஆட்டத்திறனை வளர்த்துக் கொண்டுள்ளேன் என்கிறார். எனது தன்னம்பிக்கைதான் அவுஸ்திரேலிய ஓப்பன் மற்றும் விம்பிள்டன் வெல்லக் காரணமாக அமைந்தது என்கிறார் இவர்.

கடந்த ஐந்து வருடங்களாகக் (DRAND SLAM) போட்டிகளில் பங்குபற்றும் இவர் பிரென்ஞ் ஓப்பன் போட்டிகளில் 2007,2008 ஆம் வருடங்களில் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றவர். இதே போலவே விம்பிள்டன் போட்டிகளில் 2007, 2010 ஆண்டுகளில் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதிபெற்றவர். மேலும் 2007,2010 ஆம் ஆண்டுகள் யூ.எஸ். ஓப்பன் போட்டிகளில் இறுதி ஆட்டத்தில் தோல்விகண்டவர். அதே வேளை இரண்டு GRAND SLAMகளையும் WIT போட்டிகளில் 2008வெற்றிக் கிண்ணமும் 2008 ஒலிம்பிக் போட்டிகளில் வெண்கலப்பதக்கமும் வென்றவர்.

ஒப்பீட்டளவில் பார்க்கும் போது இவர் தன்னைப் பற்றிக் கூறும் குறைபாடுகளே ஒரு சில GRAND SLAM பட்டங்களை இவரிடம் இருந்து பறித்துக்கொண்டது தெளிவாகின்றது. இருந்தாலும் இந்த 24 வயது சேர்பியருக்கு இந்த வருடம் வெள்ளித்திசை பிறந்திருக்கிறது போலத் தெரிகின்றது. இனிவரும் எல்லாப் போட்டிகளிலும் தனது முழுத் திறமையையும்காட்டி இவர் விளையாடுவர் என்று நம்பலாம். விமர்சகர்கள் கருத்துக் கூறுகையில் புதிய வீரர்கள் பலரது வருகையால் பெடரர் மற்றும் நடால் இருவரின் ரென்னிஸ் ஏக போகம் உடைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஜோகோவிச்சும் முக்கிய இடம் பெறுகிறார் என்றும், இது மிகவும் ஆரோக்கியமான ரென்னிஸ் வளர்ச்சிக்கும் உதவும் என்று கூறுகிறார்கள்.



# காலநிலை மாற்றம் தந்த மாற்றங்கள்

**இயற்கையின் எந்த சீற்றம் ஏற்பட்டாலும் பாதிக்கப்படுபவர்கள் மனிதனும் அவனை அண்டி வாழும் ஏனைய உயிரினங்களும்தான். காரணம் என்னவெனில் இயற்கையின் இத்தகைய சீற்றத்தின் காரணகர்த்தாக்களில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் மனிதர்களாகிய நமது இயற்கைக்கு தீங்கை விளைவிக்கும் செயற்பாடுகள் தான். நாம் ஏற்படுத்திய இம்மாற்றங்களின் எதிரொலியாக, கால்நடைகள் மேய்ச்சல் தரையின்றி அலைவதையும் காணக்கூடியதாக உள்ளது. வரட்சியினால் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தூர இடங்களிலிருந்து நீர் நிரப்பி மூலம் நீரைப் பெற வேண்டியிருக்கிறது. நீரை சிக்கனமாக பாவிக்குமாறு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

**(கிருபா-ஜனோ)**

கடந்த வருடம் டிசம்பர் 25 ஆம் திகதி தொடங்கி ஜனவரி 14 ஆம் திகதி வரை தொடர்ந்த அடை மழை பாரிய அழிவை ஏற்படுத்திச் சென்றது. இக் காலப்பகுதியில் பெய்த கடும் மழையினால் பல்லாயிரக் கணக்கான உயிர்களும், சொத்துக்களும் நாசம் செய்யப்பட்டன.

நாடு பூராகவும் 13 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு 2 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறி 700 தற்காலிக முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளார்கள். பதினோராயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. மக்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றிய வெள்ளம் அவர்களின் நிம்மதியைச் சீர்குலைத்ததோடு ஜீவனோபாயத்தையும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது.

இன்று இந்நிலை தலை கீழாக மாறியிருப்பது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மழைக் காலம் மாறி அண்மைக் காலமாக நமது நாடு பூராகவும் நிலவும் கடும் வரட்சியே.

கடும் வரட்சியுடன் கூடிய உஷ்ண காலநிலை நிலவி வருகிறது. இதனால் பகல் வேளைகளில் கடும் வெப்பத்துடன் வெயிலும் இரவில் உஷ்ணமும் தொடருகின்றது.

தொடரும் கடும் உஷ்ணம் காரணமாக மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். நிலவும் பலத்த வெயிலுடன் கூடிய காலநிலையினால் வைவை கால நோய்களும் தலை தூக்கியுள்ளன. இதனால் சிறுவர் முதல் முதியவர்கள் வரை பெரிதும் பாதிக்கப்பட்டுப் போயுள்ளனர்.

உலகம் வெப்பமாகி வருவதனால் நம்மைப் போலவே மற்ற ஜீவராசிகளும் பெரிதும் பாதிக்கின்றன. இதனால் புதிய கிருமிகள் உற்பத்தியாகின்றன. இதனால் கணிக்க முடியாத புதிய வியாதிகள் உருவாகின்றன. கடந்த காலங்களில் காலநிலை மாற்றத்தால் உயிர்கொல்லி நோயான எயிட்ஸ் போன்ற நோய்கள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வரட்சி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆறுகள், குளங்கள், நீர் நிலைகள் மற்றும் கிணறுகள் என்பவற்றின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது. நீர் நிலைகளில் வற்றிப் போவதனால் அதனை நம்பி வாழும் பெரும்பாலான குடும்பங்களும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

நம் நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பிரதானமாக விவசாயத்தையும் மீன்பிடியையும்தான் நம்பியுள்ளது. ஆறுகளையும் குளங்களையும் நம்பி வாழும் குடும்பங்கள் ஏராளமானவர்கள்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் விவசாயத்தையும் அதனை நம்பி வாழ்ந்த குடும்பங்களின் நிலையினையும் வெகுவாகப் பாதித்தது. இன்று நிலுவுகின்ற கடும் வெப்பம் நன்னீர் மீன்பிடியினை சற்று தள்ளாட வைத்திருக்கிறது.

இயற்கையின் எந்த சீற்றம் ஏற்பட்டாலும் பாதிக்கப்படுபவர்கள் மனிதனும் அவனை அண்டி வாழும் ஏனைய உயிரினங்களும்தான். காரணம் என்னவெனில் இயற்கையின் இத்தகைய சீற்றத்தின் காரணகர்த்தாக்களில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் மனிதர்களாகிய நமது இயற்கைக்கு தீங்கை விளைவிக்கும் செயற்பாடுகள்தான்.

நாம் ஏற்படுத்திய இம்மாற்றங்களின் எதிரொலியாக, கால்நடைகள் மேய்ச்சல் தரையின்றி அலைவதையும் காணக்கூடியதாக உள்ளது. வரட்சியினால் மேட்டு நிலப்பயிர்ச் செய்கைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. தூர இடங்களிலிருந்து நீர் நிரப்பி மூலம் நீரைப் பெறவேண்டியிருக்கிறது. நீரை சிக்கனமாக பாவிக்குமாறு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இன்னுமொரு முக்கிய பிரச்சினை தலைதூக்கியுள்ளது. தற்போது நாட்டில் நிலவும் வரட்சி காரணமாக நீர் மின் உற்பத்திகளில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. நீர்மின் நிலையங்களை அண்மித்த நீர் நிலைகளில் நீர்மட்டம் 25 வீதம் குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கிறது. நீர் மட்டம் 15 வீதமாகக் குறைவடைந்தால் நீர்மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். இலங்கையில் நீர்மின் உற்பத்தியை மேற்கொள்ளும் பெரும்பாலான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

இதனால் மின்சாரப் பாவனையாளர்கள் மின்சாரத்தை வீண்விரையம் செய்யாது மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பாவிக்குமாறு இலங்கை மின்சார சபை மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வாறு தினமும் ஏற்படும் மாற்றங்களுக்கு மனிதர்களாகிய நாமே காரணமாக மாறியிருக்கின்றோம். நாம் வெயிலிலும் மழையிலும் ஒதுங்குவதற்கு இயற்கை தந்த அருங்கொடை மரம். மானிட வளர்ச்சி என்ற பெயரால் ஏராளமானவற்றை சுருட்டி அழிக்கின்றோம்.

காலநிலை மாற்றத்தின் விளைவுகளாகக் கருதப்படக் கூடிய வகையிலே நாம் அன்றாடம் பல விடயங்களை அவதானிக்கின்றோம். ஆனால் அவை பற்றிச் சிந்தித்து அவற்றின் பின்னணி தொடர்பாக ஆராய முற்படுவதில்லை. அவசர உலகும் அதற்கு நேரம் கொடுப்பதில்லை.

தன்னைப் பற்றி மட்டுமே கருத்திற் கொள்ளும் மனித மனப்பாங்குகள் மாற்றம் பெற்றாலன்றி வேறெந்த வகையிலும் காலநிலை மாற்றத்தை விளைத்திறன் மிக்க வகையில் கட்டுப்படுத்த முடியாதென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகமே அரசியல் மயப்படுத்தப்பட்ட நிலையில் காலநிலை மாற்றமும் அரசியல் மயப்படுத்தப்பட்டு விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.


காலநிலை எனப்படுவது எங்கோ நடக்கும் விடயமல்ல. மனித நடமாட்டம் உள்ள பகுதிகளின் செறிப்பாடுகளால் மனித நடமாட்டம் அற்ற துருவப்பகுதிகளில் பனி உருகுகிறது. துருவப் பகுதிப் பனிப்பாறைகளே உலகின் காலநிலையைப் பேணும் பிரதான காரணிகளாகையால் அவை உருக பூமியின் காலநிலையும் மாறத் தொடங்குகிறது.

இது நாம் ஒவ்வொருவரும் வருந்த வேண்டிய ஒரு விடயமாகும். நடந்தவை நடந்தவைகளாக இருக்க, இனியாவது நாம் எமது மனப்பாங்குகளை மாற்ற முயல வேண்டும். இல்லையேல் காலநிலை மாற்றத்தால் உருவாகப் போகும் புதுப்புது விளைவுகள் தவிர்க்க முடியாதனவாகிவிடும்.

இவை யாவற்றுக்கும் அப்பால் சகல வெகுசனத் தொடர்பூடகங்களும் காலநிலை மாற்றங்கள் தொடர்பாகவும் சூழல் பாதுகாப்புத் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு அறிவூட்ட ஒன்றிணைய வேண்டு மென்பதே காலத்தின் தேவையாகும்.

ஆகவே, பொறுப்புடைய வர்களான நாம் அனைவரும் இயற்கைக்கு எதிராகச் செய்யப்படும் கேடு விளைவிக்கும் செயல்களை முற்றாகத் தவிர்த்து இயற்கையோடு இசைந்து வாழவும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதும் நமது கடமையாகும். ■


## மலையாள மாந்தரீக முறைப்படி


**45 வருட காலம் தொட்டுச் செய்யும் எமது தெய்வீக சேவை**

மழைக்கு முளைக்கும் காளான் பயிரைப் போல் அல்லாது தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக, வாழையடி வாழையாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை ஆணிவேராகக் கொண்டு வளர்ந்து வரும் எமது மகத்தான மாந்திரீக சேவையின் நிமித்தமே நாம் வாரா வாரம் செய்து வரும் விளம்பரம்.

வாடிக்கையாளர் ஒருவர் தன் பிரச்சினையை என்னிடம் ஒப்படைத்த அடுத்த விநாடியே ஒருவர் புது வீடு கட்டத் திட்டமிட்டு அஸ்திவாரம் போட்டு அவ்வீடுவரை உறுதியாக, உண்மையாக உழைக்கின்றாரே, அதேபோல் வாடிக்கையாளரின் பிரச்சினைகளை உள்வாங்கி முழுமனதோடு அவரின் பிரச்சினை தீரும் மட்டும் இருந்து இரவு பகலாக தியான பூஜைகள் நடைபெறுவது என்பது உறுதி.

தொடர்ந்து வாராவாரம் விளம்பரம் செய்வது என்றாலே அது எமது மாந்திரீக உச்சாடன பீடம் மட்டுமே. கருணை, அன்பு, நேர்மை, உண்மை, உழைப்பு இவை அனைத்தையும் கொண்டு வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரிந்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அவர்களின் சிரிப்பிலே இறைவனைக் காண ஆதி பராசக்தி எனக்கு இந்த அற்புத அருள்ஞான சக்தியை அருளியுள்ளார்.

"நேரம் காலம் பாராது காலா காலம் பழைமை வாய்ந்த ஜோதிட மாந்திரீக சேவை என்றால் அது எனது சேவையே!" என நான் சொல்வதில் பெருமிதம் அடைகிறேன். நல்லது நடக்க நல்வாழ்வு பெற என்னை ஒரு முறை சந்திக்கலாமே!

ஒரே கூரையின் கீழ் சகல சாந்தி பரிகாரங்களும் செய்வதற்கு விசேட பிரிவுரைகள் உண்டு. உண்மையையும், நேர்மையையும் அடித்தளமாகக் கொண்டு, பரிசுத்தமாகச் செய்யும் என் பரிகாரத்தால், எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்குப் பிரச்சினைகள் தீரும், நல்லது நடக்கும் எனத் திட்டவட்டமாக உறுதியாக உறுதிமொழி வழங்குவது மட்டுமல்லாது உறுதிக்கடிதம் வழங்குவது மாந்திரீக சேவையில் நான் மட்டுமே.!

வெளிநாட்டவர்கள் அவரவர் குறைநிறைகளுக்கு ஜாமபிரம்ப முகூர்த்தத்தில் தியான பூஜைகள் கடல் கடந்து செயல் புரியும் வண்ணம் உத்வேகத்துடன் நடைபெறுகின்றது. மேலும் வெளிநாட்டவர்கள் என்னிடம் தொடர்புகொள்ள 24 மணிநேர தொலைபேசி சேவையும் எம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திட்டவட்ட ஜாதகக் குறிப்பு என்றால், என் கணிப்புத் திட்டவட்டமாக இருக்கும். செல்வாக்கு, செல்வாக்கு அருளியது, எனது குருநாதர், சிவகாமியின் செல்வ குமரகுருபரனே!

நல்லது செய்ய நினையுங்கள், நல்லது நடக்கும்,
நல்வாழ்வு பெற என்னிடம் வாருங்கள்.
எல்லாம் நன்மைக்கே!

(என்னைச் சந்திக்க முன் அனுமதி பெற்று வருவது மிக முக்கியம்.)

*** வெளிநாட்டவர்கள் ஐயாவிடம் நேரடியாக கதைக்க விரும்பினால் முன் அறிவித்தலுடன் (ஸ்கைப்) (Skype:drpksamy) மூலம் கதைக்கலாம்.**

**DESABANTHU Prof.P.K.SAMY (J.D.G.A.N.) JP. ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM
NO.23, MAYFIELD ROAD, KOTAHENA, COLOMBO-13.
011-2470615, 011-2342463, 011-2342464. FAx.094-112344831
நுவரெலியா கிளை இல.33, Daily Fair Complex052-2222508




# ஆபத்தானவர்கள்

"நமது அனுமானங்கள் எல்லா நேரத்திலும் சரியாக இருக்குமென்று சொல்ல முடியாதுதான். இருப்பினும் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்வதில் தவறு இல்லையே?" புஷ்பராஜ், தொலைபேசியைப் பார்த்தவாறு கூறினார்.

"அது இயற்கைதான். இருந்தாலும் ஞாபகத்துக்கு வருகிறதா என்று முயற்சி செய்யுங்கள்." என்று கூறிய புஷ்பராஜ், அவர்களிடமிருந்த வயர்லெஸ்ஸை வாங்கி, அந்த மில்க் வேனின் நம்பரைக் கூறி, அதை எங்கிருந்தாலும் உடனடியாகக் கண்டுபிடிக்கவும், கொண்டு வரவும் கண கண்ட்ரோல் ரூமுக்குத் தெரியப்படுத்திவிட்டு, அதை எல்லா இடங்களுக்கும் தெரியப்படுத்தவும் கூறினார்.

"உங்களக்கு அந்த மில்க்வேன் மீது சந்தேகம் ஏற்படுகிறதா என்ன?" ஜோஸப் மாத்யூ கேட்டார்.

"ஆமாம்... நேரம் துல்லியமாக இருக்கிறது. மொத்தப் பட்டியலிலும் எனக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இது ஒன்றுதான் மட்டுமன்றி, எனக்குள் ஒரு குரல் 'இது சரி' என்றே வாதிடுகிறது."

அவரது சந்தேகம் நியாயம்தான் என்று எஸ்.பி.பிக்கும் தோன்றியது. அதில் அர்த்தம் உள்ளது.

சாதாரணமான பால் வண்டி மீது எவருக்கும் சந்தேகம் ஏற்படாது. அதற்குள் எதைக் கடத்திச் சென்றாலும், எவராலும் அவ்வளவு சுலபத்தில் கண்டுபிடிக்கவும் முடியாதுதான்.

எனவே, டிக்சனை அதில் கடத்திச் சென்றிருக்க வாய்ப்புண்டு.

கடிகாரத்தில் விநாடி முள் சுறுசுறுப்பாக நகர்ந்து கொண்டிருந்தது. அங்கிருந்த எல்லோரும் மௌனமாக, ஒருவரை ஒருவர் பரஸ்பரம் பார்த்துக்கொண்டனர்.

அதற்குள் கண்ரோல் ரூமிலிருந்து ஜீப்புகள் நான்கு திசைகளிலும் பாய்ந்தன.

பால் வண்டியாக இருந்தால், அதைக் கண்டுபிடிப்பது சுலபம்தான் என்று அவர்கள் நினைத்தனர்.

இருபது நிமிடங்கள் கடந்தன.

தொலைபேசி அலறியது.

எதிர்பார்ப்பு நிறைந்த கண்கள் சட்டென்று கூர்மையடைந்தன.

புஷ்பராஜ் ரிசீவரை எடுத்தார்.

"என்ன... அப்படியா? வர வேண்டுமா? இதோ வருகிறேன்..." ரிசீவரை கிராடிலில் வைத்த புஷ்பராஜ் பரபரப்பாகச் செயல்பட்டார்.

அடுத்த ஒரு சில நிமிடங்களுக்குள் புஷ்பராஜும், ஜோஸப் மாத்யூவும் ஜீப்பில் ஏறி மேற்குத் திசையில் விரைந்தனர்.

இரண்டு பெரிய பாலங்களைக் கடந்து ஜீப் பாய்ந்து சென்றது.

கடற்கரையை ஒட்டிய நெடுஞ்சாலையில் ஜீப் தென்புறமாகத் திரும்பியது. ஜீப்பின் பாய்ச்சல் சாலையில் சென்றவர்களைத் திகைப்புக்கு உள்ளாக்கியது.

பத்து நிமிடத்துக்குள் அவர்கள் இலட்சியப் பகுதியை அடைந்தனர்.

"அதோ கிடக்கிறது நாம் தேடிய வண்டி." புஷ்பராஜ் சுட்டிக்காட்டினார்.

அவர்கள் நெருங்கியபோது மீனவர்கள் சிலர் அதைச் சூழ்ந்து நிற்பது தெரிந்தது.

வேனுக்குள் எவரையும் காணவில்லை.

"இந்த வேன் இங்கு எப்போது வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?" புஷ்பராஜ், அங்கிருந்தவர்களிடம் கேட்டார்.

"தெரியவில்லை சேர். விடியும் போதுதான் இந்த வாகனம் நிற்பதைக் கண்டோம்."

"இது அடிக்கடி இங்கு வருவது உண்டா?" ஜோஸப் மாத்யூ விசாரித்தார்.

"இங்கு இதற்கு வேலையே கிடையாது சேர்!"

"சார் இது பின்னிரவில் வந்தது..." இளைஞன் ஒருவன் தானாக முன்வந்து பேசினான். லுங்கி-சேர்ட் அணிந்திருந்தான். அவன் கழுத்தில் துண்டு ஒன்றும் கிடந்தது.

"இப்படி வாருங்கள்... நீங்கள் பார்த்தீர்களா?" புஷ்பராஜ் அந்த இளைஞனிடம் கேட்டார்.

"நான் தூக்கம் வராததால் எழுந்து உலாவிக்கொண்டிருந்தேன். இந்த வாகனம் மெதுவாக வந்து நின்றது. இதிலிருந்து இருவர் இறங்கினர்." அவர் விவரித்தான்.

"பிறகு?"

"அவர்கள் இருவருமாகச் சேர்ந்து மற்றொரு மனிதரைத் தாங்கிப் பிடித்துச் சென்று மோட்டார்ப் படகு ஒன்றில் ஏற்றினார்கள். அந்தப் படகு நடுக்கடலை நோக்கி விரைந்தது" இளைஞன் படகு சென்ற திசையைச் சுட்டிக்காட்டினான்.

"நாம் உடனே கிளம்ப வேண்டும்!" புஷ்பராஜ், ஜீப்பை நோக்கி விரைந்தார. ஜோஸப் மாத்யூ அவரைப் பின் தொடர்ந்தார்.

"துறைமுகத்தை அடைந்து படகு ஒன்றை விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும். நாம் சந்தேகப்பட்ட நபர்தான் இதைச் செய்திருக்கிறான். கடலில் நின்றிருக்கும் ஏதாவது ஒரு கப்பலில் ஏற்றியிருப்பான். அந்தக் கப்பல் அநேகமாக லட்சத்தீவுகளை நோக்கிச் செல்லும் என்பது என் யூகம். எனவே, நாம் முடிந்த விரைவில் அந்த இடத்தை அடைய வேண்டும்."

"நாம் அவரைத் தொடர முடியுமா? அவர்கள் இதற்குள் வெகுதூரம் போயிருப்பார்களே?" ஜோஸப் மாத்யூ சந்தேகம் கேட்டார்.

"இதற்கு உடனடியாக என்னால் பதில் சொல்ல முடியவில்லை. எப்பிடியிருப்பினும் கப்பல் அல்லது மோட்டார் படகு மூலம் டிக்சன் லட்சத்தீவுக்குக் கடத்தப்பட்டிருக்கிறார். அதை லட்சத்தீவுடன் தொடர்புகொண்டுதான் நாம் தெரிந்துகொள்ள முடியும்."புஷ்பராஜ் பதிலளித்தார்.

அவர்கள் துறைமுகத்தை அடைந்தனர்.

அங்கிருந்து லட்சத்தீவைச் சேர்ந்த 'கவரத்தி'யுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டனர்.

அப்படி எந்த ஒரு கப்பலோ, மோட்டார் படகோ அங்கு வரவில்லை என்ற தகவல் கிடைத்தது.

"அப்படியானால். அவர்கள் மாலைதீவுக்குச் சென்றிருக்க வேண்டும். நாம் ஒரு ஹெலிகப்டரின் உதவியை நாட வேண்டியதுதான். இதைவிட அதிகமான தொலைவுக்கு அவர்கள் செல்ல வாய்ப்பு இல்லை. எதற்கும் நமது கடற்கரைக் காவலாளிகளிடம் தகவல் தெரிவித்து விடுவதும் ஒரு பாதுகாப்புத்தான்." புஷ்பராஜ், மாத்யூவிடம் கூறினார்.

ஜோஸப் மாத்யூ உடனே அவர்களுடன் தொடர்புகொண்டு தகவல் தெரிவித்தார்.

(தொடரும்...)

# கொங்கோ விமான விபத்து

# மர்மங்களும் குழப்பங்களும்



கொங்கோ. ஊழல் விவகாரங்களுக்குப் பெயர்போன நாடு. இந்த விமான நிறுவனம். அதிகாரிகளின் உதவியுடன் இறந்துபோன பயணிகளின் உடல்களை அகற்றியதா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் சந்தேகம் கிளப்பப்பட்டு விட்டது. விபத்தில் கொல்லப்பட்டவர்கள் வெளிநாட்டுப் பிரஜைகளாக இருந்து. அவர்கள் இறந்தது மறைக்கப்பட்டால்தான் இதில் சர்வதேச விசாரணை இடம்பெறும். கொல்லப்பட்டவர்களில், 'மாயமாக மறைந்த' அனைவரும் கொங்கோ பிரஜைகளாக இருந்தால். உள்நாட்டு விசாரணைதான்!

**அண்மையில்** கொங்கோவில் நடைபெற்ற விமான விபத்தில் கொல்லப்பட்டவர்கள் நிஜமாக எத்தனை பேர் என்பதில் மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டுள்ளது. காரணம் விமானத்துக்குள் பயணம் செய்த பயணிகளின் நிஜ எண்ணிக்கை யாருக்குமே தெரியவில்லை. சிவில் ஏவியேஷன் வரலாற்றில் இப்படி நடப்பது இதுவே முதல் தடவை.

போயிங் 727 ரக விமானம், கிசாங்கானி விமான நிலையத்துக்கு அருகே விபத்துக்குள்ளானது. ஹேவா போரா ஏர்லைன்ஸ் என்ற விமான நிறுவனத்தின் விமானம் இது. ஹேவா போரா ஏர்லைன்ஸ், ஐரோப்பிய ஒன்றியத்தால் 'பாதுகாப்பற்ற விமான நிறுவனம்' என்று கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நிறுவனம்!

ஹேவா போராவின் தலைவர் ஸ்டாவ்ரோஸ் பப்பயானோ, 'எமது விமானம் விபத்துக்குள்ளாகியது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. தலைநகர் கின்ஷாவிலிருந்து புறப்பட்ட விமானத்தை, கிசாங்கனி விமான நிலையத்தில் விமானியால் தரையிறக்க முடியாத நிலை ஏற்பட்டதாலேயே, விபத்து ஏற்பட்டது' என்று அறிவித்திருந்தார்.

விமான நிறுவனம், விமானத்தில் பயணம் செய்த மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 110. அதில், 53 பேர் கொல்லப்பட்டனர். 57 பேர் உயிர் தப்பியுள்ளனர் என்று அறிவித்தது.

ஆனால், சூடானின் போக்குவரத்து அமைச்சு, விமான நிறுவனத்தின் கூற்றை மறுத்திருக்கிறது. 'விபத்தில் உயிர் தப்பியவர்கள் 57 பேர் என்பது உண்மைதான். ஆனால், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 127. 'ஏதோ காரணங்களுக்காக' பயணிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கூறுகின்றது விமான நிறுவனம்' என்பது போக்குவரத்து அமைச்சின் அறிக்கை.

இதற்கிடையே, சர்வதேச விமானப் பயணத்துக்கான கூட்டமைப்பு, 'கொல்லப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை, விபத்து நடைபெற்ற இடத்திலுள்ள இறந்த உடல்களின் எண்ணிக்கையை வைத்துக் கணிப்பிடப்படலாமே' என்று கூறியுள்ளது. ஆனால், அதற்கான பதிலை கொங்கோ அரசோ, விமான நிறுவனமோ கூறுவதாக இல்லை.

கொங்கோ, ஊழல் விவகாரங்களுக்குப் பெயர்போன நாடு. இந்த விமான நிறுவனம், அதிகாரிகளின் உதவியுடன் இறந்துபோன பயணிகளின் உடல்களை அகற்றியதா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் சந்தேகம் கிளப்பப்பட்டு விட்டது.

விபத்தில் கொல்லப்பட்டவர்கள் வெளிநாட்டுப் பிரஜைகளாக இருந்து, அவர்கள் இறந்தது மறைக்கப்பட்டால்தான் இதில் சர்வதேச விசாரணை இடம்பெறும். கொல்லப்பட்டவர்களில், 'மாயமாக மறைந்த' அனைவரும் கொங்கோ பிரஜைகளாக இருந்தால், உள்நாட்டு விசாரணைதான்!

கதை வெளியே வந்துவிட்டதால், சில வேளைகளில் உண்மையான பயணிகளின் எண்ணிக்கை விமான நிறுவனத்தால் ஒப்புக்கொள்ளப்படலாம்!

## மனதுக்கு நிம்மதி

“கோபமாக இருக்கும் ஒவ்வொரு நிமிடமும், அறுபது விநாடி ஆனந்தத்தைத் தொலைத்து விடுகிறோம்” என்கிறார் ரால்ப் வால்டோ.

ஆனந்தமும் கோபமும் எதிர் எதிர் துருவங்களில் வேர்விட்டு அமர்ந்திருப்பதை அவருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன.

“எனக்குக் கோபமே வராது” என்று யாராவது சொன்னால் அவர் பொய் சொல்பவராக இருக்க வேண்டும் அல்லது அதிசயப்பிறவியாய் இருக்க வேண்டும்.

கோபம் தும்மலைப் போன்றது. சாதி மத நிற பேதமில்லாமல் எல்லோருக்குமே வரும். சிலரிடம் “நீங்க அடிக்கடி கோபப்படுவீங்களாமே?” என்று கேட்டால் கூட “எவண்டா அப்படிச் சொன்னது?” என கோபப்பட ஆரம்பித்துவிடுவார்கள்.


இதில் சமர்த்துக் கோபம் ஒன்று உண்டு. “வரையறுக்கப்பட்ட, கட்டுக்குள் இருக்கக் கூடிய, நிலை தடுமாற வைக்காத” கோபத்தை அப்படி அழைக்கிறார்கள். உதாரணமாக உங்கள் குழந்தை கீழ்ப்படிதல் இல்லாமல் வளர்கிறது எனில் உங்களுக்குக் கோபம் எழும். அந்த கோபம் கத்தலாகவோ, சண்டையாகவோ இல்லாமல் வரையறுக்கப்பட்ட நிலையில் வெளிப்படும்போது வழிகாட்டும் அறிவுரையாய் மாறி விடுகிறது.

‘மெனேஜர் கோபப்படுவதிலும் ஒரு நியாயம் இருக்குப்பா. இன்னிக்கு வேலையை முடிக்கவில்லையென்றால் சிக்கல் பெரிசாயிடும்’ எனப் பேசிக்கொள்ளும் ஊழியர்கள் மேலதிகாரியின் நியாயமான கோபத்தைப் பேசுகிறார்கள்.

ஆனால் கண்கள் விரிய, கைகளை நீட்டி, குரலை உயர்த்தி ஆவேசமாய்ப் பேசும் கோபம் எந்த இடத்திலும், எந்தச் சூழலிலும் கொண்டாடப்படுவதில்லை என்பதே உண்மை.

கோபத்தை ஒரு மிகப்பெரிய கோடு கிழித்து இரண்டு பாகமாக பிரிக்கிறார்கள். ஒன்று வெளிப்படையான கோபம். “நீ... எப்படிய்யா என் மனைவியைப் பற்றி பற்றி தப்பாகப் பேசலாம்” என நரம்புகள் புடைக்கக் கத்தும் கோபம். இதை ‘எக்ஸ்ப்ளோசிவ் ஆங்கர்’ என்பார்கள்.

இரண்டாவது உள்ளுக்குள் உடைந்து சிதறும் கோபம். இதே பிரச்சினையில்



# வெற்றிக்குத் தடையான கோபம்!!

எதிராளி உயர் அதிகாரியாகவோ, அரசியல்வாதியாகவோ இருக்கும்போது கோபத்தை வெளிக்காட்டாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கிவிடுகிறார்கள் அது ஒரு கண்ணிவெடிபோல உள்ளுக்குள் வெடித்துச் சிதறும். இதை ‘இம்ப்ளோசிவ் ஆங்கர்’ என்பார்கள்.

எந்த வகைக் கோபமாக இருந்தாலும் அது நமது உடலையும் மனதையும் ஒரு கை பார்க்காமல் விடாது என்பது தான் உண்மை. சண்டை, அடிதடி, பிரிவுகள், தோல்வி, உடல் பலவீனம் எல்லாவற்றுக்கும் அடிப்படையில் இந்த கோபமே பதுங்கிக் கிடக்கிறது.

மாரடைப்பு, மன அழுத்தம், தலைவலி, வயிற்று வலி, உயர் இரத்த அழுத்தம், தோல் வியாதிகள், வலிப்பு என பலநோய்களுக்கும் கோபமே அடிப்படையாய் இருப்பதாய் மருத்துவம் நீட்டும் பட்டியல் எச்சரிக்கிறது.

அமெரிக்காவின் ஒஹையோ பல்கலைக்கழக ஆய்வு ஒன்று இன்னும் ஒரு படி மேலே போய், நோய்கள், காயங்கள் போன்றவை குணம் அடையாமல் இருப்பதன் காரணமும் கோபமே என்கிறது.

கோபத்தின் கொடுமையான விளைவுகளைச் சிறைக் கைதிகளின் கதைகள் துயரத்துடன் பேசுகின்றன. ஏதோ ஒரு ஆவேசத்தில் தன்னிலை மறந்து யாரையோ தாக்கிவிட்டோ, கொன்றுவிட்டோ, பழி தீர்ப்பதாய் நினைத்துக் கொண்டோ பலரும் சிறைச்சாலைக்கு வந்துவிடுகிறார்கள். பின் தங்களுடைய கோபத்தின் மீதே கோபம் கொண்டு மிச்ச வாழ்க்கையைக் கண்ணீரின் கரைகளில் வாழ்ந்து முடிக்கிறார்கள்.

கோபமும், மன்னிப்பும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. நான் செய்வதும் சொல்வதும் சரியானவை, மற்றவர்கள் செய்வது தவறு எனும் புள்ளியிலிருந்தே பெரும்பாலான கோபங்கள் புறப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் எனில் சுயநலமே கோபத்தின் அடிப்படை. மன்னிக்கும் மனதை வளர்த்துக் கொண்டால் கோபத்தின் தளிர்கள் காய்ந்துவிடும். இதையே எல்லா மதங்களும், மகான்களும் போதித்துச் செல்கின்றனர்.

இருபத்து ஆறு ஆண்டுகள் சிறையில் வாடிவிட்டு வெளியே வந்தபோது நெல்சன் மண்டேலாவுக்கு சிறை அதிகாரிகளின் மீது கடுமையான கோபம் வந்தது. ஆனால் அடுத்த நிமிடமே அதை அழித்து விட்டு, “சிறையின் கோபங்கள் சிறையுடனே போகட்டும்” என வெளிச்சத்தை நோக்கி நடை போட்டாராம். இதை அவருடைய சிறை அனுபவக் குறிப்புகள் பேசுகின்றன.

உறவுகளுக்கு இடையே வரும் பிளவுகளும் கோபத்தின் குழந்தைகளே. “கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன்” என்றோ, “கொஞ்சம் நிதானமாய் நடந்திருக்க வேண்டும்” என்றோதான் விவாகரத்துகளின் சோகக் கதைகள் புலம்பித் திரிகின்றன.

கத்துவது, அவமானப்படுத்துவது, அடுத்தவரை குற்றவாளியாக்குவது, பழி சுமத்துவது, நான் சொல்வதே சரியென பிடிவாதம் செய்வது, நீ எப்பவுமே இப்படித்தான் எனப் பாய்வது.... என மணமுறிவுக்கான காரணங்கள் எக்கச்சக்கம்.

மொத்தத்தில் கோபம் எனும் ஒரு கொலைக் கருவி வெட்டிப் புதைத்த வாழ்க்கையின் கணக்குகள் எண்ணிலடங்காதவை.

கோபமும், மன்னிப்பும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. நான் செய்வதும் சொல்வதும் சரியானவை, மற்றவர்கள் செய்வது தவறு எனும் புள்ளியிலிருந்தே பெரும்பாலான கோபங்கள் புறப்படுகின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் எனில் சுயநலமே கோபத்தின் அடிப்படை. மன்னிக்கும் மனதை வளர்த்துக் கொண்டால் கோபத்தின் தளிர்கள் காய்ந்துவிடும். இதையே எல்லா மதங்களும், மகான்களும் போதித்துச் செல்கின்றனர்.

“அவர் “வள் வள்”ன்னு எரிஞ்சு விழறார். காலைல வீட்ல சண்டை போட்டுட்டு வந்திருப்பார் போல... “என்பது சர்வ சாதாரணமான ஒரு பேச்சு. இது கோபத்தின் மிக முக்கியமான ஒரு பண்பை வெளிப்படுத்துகிறது. கோபம் என்பது எங்கோ ஒரு இடத்தில் உருவாகி அங்கேயே முடிந்து விடுவதில்லை. அடுத்தடுத்த இடங்களில் அது தொடர்ந்து, அந்த கோபம் மறையும் வரை நாம் செய்யும் செயல்கள் எல்லாவற்றிலும் அதன் பாதிப்பு நேர்ந்துவிடுகிறது என்பதே அது!

நான் ஒரு கோபக்காரன் என்பதைப் புரிந்து கொள்வது தான் கோபத்தை வெற்றி கொள்வதன் முதல் படி. எனக்கு நோயே இல்லை என்பவர்கள் குணமடைவதில்லை. கோபம் இருப்பதைப் புரிந்து கொண்டால், “இந்தக் கோபத்துக்குக் காரணம் நான் மட்டுமே. நான் நினைத்தால் இந்தக் கோபத்தை எப்படி வேண்டுமானாலும் கட்டுப்படுத்த முடியும்” எனும் எண்ணத்தையும் மனதில் எழுதிக் கொள்ளுங்கள். ●

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 427

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | ■ | 9 | ■ | 11 | 12 |
| 13 | ■ | 15 | ■ | ■ | 18 |
| 19 | 20 | ■ | 22 | 23 | ■ |
| 25 | ■ | ■ | ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 27.07.2011 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-427
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல.: - 1772, கொழும்பு. - த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.425 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம்.தயானந்தரூபி, வாழைச்சேனை, மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01.த.யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. ம.பிருந்தன், மந்திகை, பருத்தித்துறை.
03. எஸ்.பாலலேந்திரன், தென்னங்குப்புர,கண்டி.
04. கு.கென்ஷிகா, மருதனார்மடம், யாழ்ப்பாணம்.
05. எஸ்.தாமரைச்செல்வி,பூவரசங்குளம், வவுனியா.
06 கே.திஜா,காளிகோவிலடி, திருகோணமலை.
07. A.S. அகஸ்ரின். 7 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
08. பா.பாலசுபாஜினி, மண்டைதீவு.
09. ப.தர்சிகா, நல்லூர். யாழ்ப்பாணம்.
10. எஸ்.கஜானன், திருநகர், கிளிநொச்சி.

**இடமிருந்து வலம்**

01.அமைதிப் போராட்டங்கள் கட்டுப்பாட்டை இழக்கின்ற போது ஏற்படுவது.

11.நமது கால் சுவட்டை இவ்வாறு கூறுவர்.

19.பூமி அல்லது நிலம் என்றும் கூறலாம்.

22.இரும்பில் பழயும் கறை. (திரும்பியுள்ளது)

29.முன்னைய காலத்தில் தண்ணீர் அள்ளுவதற்கு இதுவும் பயன்பட்டது. (திரும்பியுள்ளது)

31.பெரியோர் முன் கூறும் வணக்கத்தை இவ்வாறு கூறுவர்.

### குறுக்கெழுத்துப் போட்டி 425- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சா | 2 ர் | 3 க் | ■ | 5 கா | 6 ரை |
| ■ | ■ | 9 கு | ■ | 11 ர் | ■ |
| ■ | 14 ஆ | 15 வி | ■ | ■ | 18 ன் |
| ■ | ■ | 21 ள | ■ | 23 மை | 24 ஆ |
| 25 மி | ■ | ■ | 28 ளை | 29 து | 30 மா |
| 31 பூ | 32 ம் | 33 ம் | 34 க | 35 ப | ■ |

**மேலிருந்து கீழ்**


01.அண்மையில் காலமான இலங்கைத் தமிழ்ப் பேரறிஞர். (குழம்பியுள்ளது)

03.பல்லின் அடிப்பாகத்தை இவ்வாறு கூறுவர்.

06.குடிப்பிறந்தாருடைய இயல்புகளைக் கூறும் அதிகாரம்.

23.இராசிகளில் ஒன்று.

## கடிகாரத்தின் கண்டுபிடிப்பு



இன்று இலத்திரனியல் கடிகாரங்களின் பயன்பாடு அதிகரித்து விட்டாலும், சென்ற நூற்றாண்டில் நடுத்தர மக்கள் வாழ்வில் சுவர் கடிகாரம் என்பது விலை உயர்ந்த ‘பர்னிச்சர்’களில் ஒன்றாக இருந்தது. அதனால் மக்கள் கூடும் இடங்களில் ‘மணிக்கூண்டு’கள் கட்டப்பட்டு அதை இயக்கவும், கண்காணிக்கவும் ஆட்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு உலகம் முழுவதும் ‘கிளாக் டவர்’ கட்டப்பட்டது. பின் 1850ஆம் ஆண்டுவாக்கில் கைக்கடிகாரமும், அதன்பின் 1925இல் நடந்த இலத்திரனியலின் புரட்சியால் அனைவரிடமும் இருக்கும் வகையில் ‘காலக்கருவி’யாக மாறியது.

கி.பி. 330ஆம் ஆண்டு முதல், கிரேக்க நாட்டில் நீர்க்கடிகாரம் சுமார் 600 வருடங்களாக பயன்படுத்தப்பட்டு வந்தது. 13ஆம் நூற்றாண்டில் கடிகாரங்கள் தேவாலயங்களின் கோபுரங்களில் இடம்பெற்றன. 1335ஆம் ஆண்டளவில் மிலன் நாட்டில் தானியங்கி கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்டது. 1350இல் ஐரோப்பாவில் ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை மணி அடிக்கும் கருவி தயாரிக்கப்பட்டது. ‘பெண்டுலம்’ உத்தியை 1656இல் டட்ச் வானவியலாளர் கிறிஸ்டியன் ஹைஜென்ஸ் கண்டுபிடித்தார். 1700 க்குப் பின் எல்லோரும் பயன்படுத்தும் வகையில் கடிகாரம் நடைமுறைக்கு வந்தது. ‘கிளாக்’ என்ற வார்த்தை இலத்தீன் மொழியாகும். இதன் அர்த்தம் ‘மணி’ என்பதாகும்.




**பார்வையாளர்** அறையில் அவன் உட்கார்ந்திருந்தான்.

"யாரு?"

"மிஸ் அகல்யா? சப்ரைஸ்! என்னை ஞாபகம் இருக்கா? ஸ்ரீதர்!"

அகல்யாவுக்கு முதலில் அவனை அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒரே ஒரு நாள் விழாவின் இரைச்சலில் எத்தனையோ முகங்களுக்கிடையே பார்த்தது. ஏதோ ஒரு விதத்தில் அவன் அடையாளம் மாறியிருந்தான். மீசை வைத்திருந்தானோ இல்லை, தலை மயிரை சுருக்கிவிட்டானோ? ஏதோ ஒன்று அடையாளத்தடை செய்தது.

"விநோதமாகப் பார்க்கிறீங்க... நான் ஸ்ரீதர் உங்க கூட இசைவிழாவில் முதல் பரிசு வாங்கினேன். நீங்ககூட எமிலி டிக்கிஸன் போயம் ஒண்டு மொழிபெயர்த்து பிரமாதமா பாடினீங்களே."

அகல்யா, 'தெரிஞ்சிடுச்சு, ஆனால் என்னவோ மாறிட்டுது' என்று தலைமயிரைப் பார்த்தாள்.

"அப்பா செத்துப்போய் காரியம் பண்ண மொட்டை அடிக்கும்படியா ஆகிட்டுது. இப்ப தான் வளருது. உங்களுக்கு ஞாபகம் வரலைன்று நினைக்கிறேன். அந்த மறக்க முடியாத இரவு. அத நீங்க மறந்திட்டீங்களா?"

"இல்லை" என்றாள்.

"மறக்க முடியுமா அந்த இரவை. வாங்க, எங்கயாவது போகலாம். ஒரு நல்ல செய்தி சொல்லணும். நின்றுகொண்டே பேசவேண்டாம்."

"இல்லை, எனக்கு வேலை இருக்கு."

"உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்லத்தான் வந்தேன். முத முதல்ல உங்கக்கிட்டத்தான் சொல்லணும் என்னு."

"என்ன?"

"அமெரிக்கா போகப்போறேன். விசா கிடைச்சிடுத்து.

"வாழ்த்துக்கள்" என்றாள். இவனிடம் என்ன சொல்லப் போகிறேன்?

"நான் எதுக்கு வந்தன் என்றால், போன உடன உங்களுக்கு ஒரு பி.எஸ். அனுமதிக்கு ஏற்பாடு பண்ணப் போறன்.

**அகல்யா குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு தடையும் இல்லை, வயதும் பிரச்சினை இல்லை என ராஜேஸ்வரி ராபர்ட் கூறினார். அகல்யா இருதலைக் கொள்ளி எறும்பு போல தவித்தாள். இருந்தும் அவள் அபோஷன் செய்துகொள்ளப் போவதற்கு ஆயத்தமானாள். கிருத்திகாசாரி மேடத்துக்கு ராஜேஸ்வரி தன்னைக் குழந்தை பெற்றெடுக்குமாறு கூறியதைத் தெரிவித்தாள். அந்தவேளையில் ரகுவும் சீனும் திருச்சிக்குப்போய் என்னவெல்லாம் செய்யலாம் எனத் திட்டம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அன்று காலை அவள் ஒரு கெட்ட கனவு ஒன்று கண்டிருந்தாள்.**

அந்த விவரம் கேட்டு வைக்கிறதுக்குத்தான் வந்தேன். அகல்யா.. அன்றைக்கு நான் உன்னை... சொரி... உங்களைப் பார்த்த கணத்திலேயே என்னவோ நீதான் என் வருங்கால மனைவின்று தீர்மானம் பண்ணிட்டேன்." பாதியில் நிறுத்திவிட்டான்.

அகல்யாவின் கண்களில் நீர்த்துளிகள் இயல்பாகவே உருண்டன.

"ஏன் அகல்யா உடம்பு சரியில்லையா?"

"ஆமாம், அரை மணிதான் இருக்கு, வைத்தியசாலைக்குப் போகணும்"

"ஏன் என்ன பிரச்சினை?"

"ஆமாம், சொல்றேன்?"

ஸ்ரீதரும், அகல்யாவும் உணவு விடுதியொன்றுக்குச் சென்றார்கள்.

"எனக்கு எதுவுமே வேண்டாம்" என்றாள் அகல்யா.

"என்ன சொல்லுங்க" என்று அவள் கையைப் பற்ற, அதைப் பிடுங்கிக்கொண்டாள் அகல்யா.

"அகல்யா உங்களுக்கு என் மேல கோபம் தெரியுது. நான் பொறுப்பற்றவன். அப்படியே விட்டுவிட்டுப் போய்ட்டான்னு தானே நினைச்சீங்க? லெட்டர்கிட்டர் போடாம, நேர்ல வந்து பார்க்காமா... காரணம், வைத்தியாசலைக்கு அலைஞ்சுகொண்டு இருந்தேன் அகல்யா.. அப்பா கோமாவில... ஆனாலும் உங்களை நினைக்காத நாள் இல்லை..."

அகல்யா அவன் சொல்வதைக் கவனிக்காமல், "நான் கர்ப்பமா இருக்கேன்" என்றாள்.

"என்னது!"

"ஆமாம். அன்றைக்குத் தப்பு நடந்துபோச்சுது."

" கடவுளே! அன்றைக்கா!"

'ஆமாம்."

"சரியா தெரியுமா?"அவனைக் கோபத்துடன் பார்த்தாள்.

"தெரியும்! ஏன்னா நான் வேற தப்பு எதுவும் என் வாழ்க்கையில செய்யலை. ஒரே ஒரு தப்பு ஒரே ஒரு கவனக்குறைவு. மாட்டினேன்."

அவன் முகம் மாறியது. நெற்றியைச் சுருக்கிக் கொண்டான்.

"ஐயோ என்ன இது வெடிகுண்டை தூக்கிப் போடறீங்களே?" என்று அரை மொட்டைத் தலையை இரண்டு கைகளாலும் சொறிந்தான். புருவம் துடித்தது.

"என்னைப் பார்த்து, 'ஏன் என்னவோ மாதிரி இருக்கே' என்று கேட்டியே... இதான் பதில்."

"அதுக்கில்லை... நான் வந்து இப்ப செப்ரெம்பர்ல அமெரிக்காவுக்குப் போற சமயத்தில..."

"தாராளமா போய்ப் படி... பாஸ் பண்ணு. நான் அதுக்குத் தடையா ஏதும் பண்ணமாட்டேன்."

" நீ கர்ப்பமா இருக்கிறதை டொக்டர் உறுதிப்படுத்திட்டாங்களா?"

"அந்த எழவெல்லாம் ஆச்சு" என்றாள் எரிச்சலுடன்.

"போகலாமா?"

"இல்லை, அதுக்கு நான்தான் பொறுப்பென்று..."

"ஆமாம் நீதான் பொறுப்பு."

"நீங்க சொல்றதை நம்பறேன். அப்ப நான் அமெரிக்கா போகலை."

" நீ அப்படி ஒண்டும் செய்யத் தேவையில்லை. நான் வேற ஏற்பாடு பண்ணியாச்சு. எங்க கிருத்திகா மேடம் உதவி செய்யிறாங்க. உன்னிடம் எதுக்குச் சொல்றேன் என்றால் ஏதோ என் விதிப்படி நடந்து போச்சு. ஆனா அமெரிக்கால போய் இந்த மாதிரி என்னை மாதிரி ஒரு அப்பாவி கெடைச்சா ஏதும் செய்திடாத... அங்கே மன்னிக்கமாட்டாங்க. புழிஞ்சு எடுத்துடுவாங்க. ஏன் அழறே?"

அவன் தன் பையிலிருந்த துண்டு எடுத்து கோவைப் பழம்போல மூக்கைச் சிந்திக்கொண்டு அழுதான். லேசான பச்சைக் கண்கள் மெல்லிய உதடு, கழுத்திலும் மணிக்கட்டிலும் கறுப்புக் கயிறு. நெற்றியில் அனுமாரோ பிள்ளையாரோ ஒரு குங்குமத் தொடுகை.

"அகல்யா நீ என்னை தப்பா நினைச்சிட்டாய். நான் எப்படி எப்படி..." அவன் பையிலிருந்து தடவித் தடவி எதையோ எடுத்தான். அவளுக்குப் பரிசாகக் கொண்டுவந்திருந்த சொக்லேட் பெட்டி.

அதன் மேலே 'என் வருங்கால மனைவிக் அகல்யாவுக்கு" என்று எழுதியிருந்தான். அதன் பின் அவன் தன் பாஸ்போட்டை எடுத்துக்காட்டினான். அதைப் பிரித்து "பாரு அமெரிக்கன் விசா"

"சந்தோஷம்" என்றாள்.

சற்றும் எதிர்பார்க்காமல் ஒரு பெரிய காரியம் செய்தான். புத்தம் புதிய பாஸ்போட்டின் முரட்டு அட்டையில் நடுவில் கிழித்தான். பக்கம் பக்கமாக உதிர்த்தான். ஒவ்வொரு பக்கத்தையும் கிழித்து இன்னமும் சாப்பிடாத கோப்பிக்குள் திணித்தான்.

"என்ன பைத்தியகாரத்தனம் பண்றே ஸ்ரீதர்."

" இல்லை அகல்யா. எனக்கு அமெரிக்காவைவிட நீங்க முக்கியம். நீங்க என்ன தீர்மானிச்சீங்களோ, அபோஷன் முடியற வரைக்கும் மெட்ராஸை விட்டுப் போகமாட்டேன். உங்களுக்கு உறுதுணையா-பக்கபலமாக இருக்கப்போறேன். ரூம் வாசலிலேயே படுத்துக்கிடக்கப் போறேன்.

"அதெல்லாம் ஒரு எழவும் வேண்டாம். நீ அமெரிக்காவைப் பார்க்கப் போய்ச்சேரு."

"எங்க? இனி போக முடியாது."

**இன்பம் தொடரும்**

**இவ்வாரச் சிறுகதை**

# வழித்துணை



சாலையில் ஆட்களின் நடமாட்டம் நின்று போயிருந்தது. அவன் மட்டும் தனியாக நடந்து கொண்டிருந்தான். பத்துப் பதினொரு மணிக்கு வீடுதிரும்புவது என்பது அவனுக்கு இப்போது சகஜமாகிவிட்டது. அவனுடைய குடியிருப்பு நகரத்திலிருந்து விலகியிருந்தது. இரண்டு கிலோமீற்றருக்கும் மேலே இருக்கும். இடையில் தெருவிளக்குகள் இல்லாததால் அது முற்றாகத் துண்டிக்கப்பட்ட பிரதேசம் போன்று தோற்றம் தந்தது.

இன்று வானத்தில் நிலவு இல்லை. நட்சத்திரங்கள் மட்டும் மினுமினுத்துக்கொண்டிருந்தன. இதுபோன்று எப்போதாவதுதான் வானம் அவனுக்குப் பார்க்கக் கிடைக்கிறது. அப்படியே கிடைத்தாலும் அது பிரக்ஞைக்குள் வந்து படர்வது அரிதாகிவிட்டது. அவன் அம்மாவைப் பற்றிய நினைவுகூட அப்படித்தான். இரண்டு மூன்று நாட்கள்கூட அவளைப் பற்றிய யோசனைகள் இல்லாமல் இருக்க நேரிடுகிறது. வேறு ஏதேதோ வேலைகள், உறவுகள். இவ்வளவு இருந்தும் சமீப காலங்களில் ஜனசஞ்சாரத்திலிருந்து விலகி விலகி எங்கோ தனியாகப் பிரயாணப் பட்டுக்கொண்டிருப்பதான ஒரு உணர்வு ஏற்படுகிறது. இது தன்னை எங்கே கொண்டு சேர்க்குமோ என்று அச்சப்பட்டான்.

அவனுடைய சினேகிதி சொல்கிறாள், "உங்களைத் திரும்பவும் சந்திக்காமலேயே போய்விட்டால் என்ன ஆவேன் பயமாக இருக்கிறது"எதையும் நம்பமுடியவில்லை.

அவனுக்கும்தான், அவள் கிடைப்பாள் என்பதை, இப்போது கிடைத்திருப்பதை. காலம் எப்போது வேண்டுமானாலும் அற்புதங்களைப் பிடுங்கிக் கொண்டு போய்விடலாம். இதுதான் எல்லோரையும் கலங்கச்செய்கிறது போலும்.

அவளைப் பற்றிய எண்ணங்களுடன் துக்கமும் ஏன் உடன் சேர்ந்து வர வேண்டும் பிரகாசிக்கும் கண்களுடன் தோன்றிய அவள் முகம் படர்ந்த நினைவுகள், நீரைப் போல அலைவுற்றபடி வருகையில் அவனுக்கு முன்னே நாய்க்குட்டி ஒன்று பே?ய்க் கொண்டிருப்பதைப் பார்க்கிறான். எதிர்பாராமல் அது எங்கோ ஓரமாக இருந்து சாலைக்கு வந்ததில் ஒரு கணம் அவன் உடல் திடுக்கிட்டு அடங்கியது. சாதாரண நாய்க்குட்டிதான். கறுத்கித நிறம். வேறு அடர்ந்த நிறமாகக்கூட இருக்கலாம். இந்த தாட்சண்யமற்ற இருளில் எதைத்தான் சரியாகப் பார்க்க முடிகிறது.

எந்தத் துணையுமில்லாமால் இந்த நேரத்தில் எங்கே போய்க் கொண்டிருக்கிறது நாய்க்குட்டி பகல் பொழுதென்றால் யாரும் இதைக் கவனிக்கப்போவதில்லை. எதிர்ப்படும் எவ்வளவோ நாய்களைப்போல என இருந்திருப்பான். ஆனால் இதுவோ அவனுக்காகவே காத்திருந்து, வம்புக்கு வந்ததுபோல வந்திருக்கிறது.

அவன் கேட்டான்,

"நாய்க்குட்டியே, நீ யாருக்காகக் காத்திருந்தாய், எனக்காகவா?"

அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல், அது சாலையே தானென்று போய்க்கொண்டிருந்தது. எவ்வளவு நேரம் வெறுமனே நடப்பது ஏதாவது பேச வேண்டியதுதானோ அவனிடம் பேச அதற்கு விருப்பமில்லை போலத் தெரிந்தது. ஆமாம், மனிதர்களிடம் பேச அதற்கு என்ன இருக்கிறது.

அவன் கேட்டான்,

"நாய்க்குட்டியே! உன் புகலிடம் எங்கே இருக்கிறது? அங்குதான் பிரயாணமா, வேறு எங்காவதா? "

அது அவனுடைய கேள்விகளைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அச்சமூட்டும் இந்த இரவில் சாலையில் தனியாக அவனுக்கு தாஸ்தாவஸ்கியின் "வெண்ணிற இரவுகள்" கதாநாயகன் ஞாபகத்தில் வந்தான். ஒரு வேளை இந்த நாய்க்குட்டியும் காதலைத் தேடித்தான் போய்க்கொண்டிருக்கிறதே? என்னவே?.

திரும்பவும் பேச்சுக் கொடுத்துப்பார்த்தான்,

"உணவை முடித்துக்கொண்டாயா? எங்கே உறங்கப்போகிறாய்?"

ஒரு பதிலும் இல்லை.

அவனது துணையை நிராகரிக்கத்தான் இந்த மௌனம் காட்டுகிறதாக இருக்கும். இல்லை மனிதர்களைப்போல அசட்டுத்தனமாக ஏதாவது வைராக்கியமா, பேசுவதில்லை என்று.

***

அவன் கேட்டான்,

"நீ எங்கிருந்து வருகிறாய்? உனது பூர்வீகம் எது? அந்நிய தேசமா? கடல்கடந்து வருகிறாயா? ஒரு வேளை வேற்றுக்கிரக வாசியா நீ?"

அவன் மகன் பிறந்ததும் இப்படித்தான் நினைக்கத் தோன்றியது, வேற்றுக்கிரக வாசிபோல் ஒரு பயணியாக அவன் இந்த பூமிக்கு வந்திருக்கிறவன்போல.

சாலையில் நாய்க்குட்டியைக் காணவில்லை. எங்கே போய்விட்டது.

**நன்றி இணையம்**

கூப்பிட்டுப் பார்க்கலாமா என்று நினைத்தான். என்னவென்று கூப்பிடுவது? பெயர் தெரியவில்லை. இது பெயர் இடப்படாத நாய்க்குட்டியாக இருக்கலாம். சுதந்திரவான்களுக்குப் பெயர் தேவையில்லை. மனிதர்களுக்குத்தான் பெயர் அவசியம் அடிமை கொள்வதற்கும் அடிமையாவதற்கும். இதற்காக ஒன்றும் அது வருந்தப் போவதில்லை. வெட்டவெளிதான் இவைகளுக்கு வாழ்விடம். மனிதர்களுக்குதான் பாதுகாப்பான கூடு தேவை. அலங்காரமான கூடாக இருந்தால் இன்னும் அவனுக்கு சந்தோசம்.

திரும்பவும் அது சாலையில் தோன்றியது.

இருளானது, தாய் தன் குட்டியோடு விளையாடுவது போல இந்த நாய்க்குட்டியோடு விளையாடுவதாக அவனுக்குத் தோன்றியது கவ்வியிழுப்பதும் தப்பவிடுவதுமாக.

அவன் சொன்னான்,

"வந்துவிட்டாயா ரொம்ப மகிழ்ச்சி. எங்கே போயிருந்தாய்? திரும்பவும் வரமாட்டாயே? என்று நினைத்தேன்."

இப்போதும் கூட அது அவனைப் பொருட்படுத்தவில்லை. மனிதனின் ஆதரவை ஏன் இப்படி நிராகரிக்க வேண்டும். ஏன் வினோதமாக நடந்துகொள்கிறது. ஒரு வேளை பிசாசோ! பிசாசுகள்தான் நாயுருவில் தோன்றுமென்று சொல்வார்கள். பகலில் இவ்வழியாக நடந்துபோன ஒரு நாய்க்குட்டியின் நிழல்தான் இப்படிப் பின்தங்கிவிட்டதாகவும் அவனுக்குத் தோன்றியது. இந்தநிழல் தனிமைப்பட்டதாக, துக்கம் நிறைந்ததாக இருக்கிறது.


"ஆமாம், எல்லோரும் என்னைக் கடந்து சடுதியாகப் போய்க்கொண்டிருக்கையில் நான் மட்டும் பின்தங்கிப் போனேன்" என்றாள் ஒரு நாள் அவன் சினேகிதி. "எனக்காக நீங்கள் தாமதம் காட்டுவது ஆறுதலாக இருக்கிறது. யாராவது உங்களைச் சங்கடப்படுத்தி உடன் கொண்டு போய்விடுவார்களே? என்ற அச்சமும் தோன்றுகிறது. என்னை விட்டு அவர்களுடன் செல்லும் நீங்கள் திரும்பிப் பார்க்கும் வேளை என் தனிமை மேலும் வலிமிக்கதாகும் இல்லையா?"

தனிமை!

"நாய்க்குட்டியே! இந்த வலியும், துன்பமும் எங்களுக்கு மட்டும்தானா? இது உன்னைத் துன்புறுத்தவில்லையா?"

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# பொன்மொழி



உலக மக்கள் இன்று கடவுளை கைகழுவி வருகிறார்கள். காரணம் கேட்டால், 'கடவுள் எங்களுக்கு என்ன செய்தார்? அவரால் எங்களுக்கு என்ன பயன்?' என்று கேட்கிறார்கள். நீங்கள் கேட்பதை எல்லாம் செய்வதற்கு கடவுள் ஒன்றும் நகரசபை அதிகாரி அல்ல.


**சுவாமி விவேகானந்தர்**



35

# சுழி 2

**கே.வி. குணசேகரம்**



**'காயத்திரி'** என்று அந்த ஊரே முணுமுணுக்கும் அவள் வீதியால் நடந்து சென்றால் வீதியில் உள்ளவர்களது கண்கள் யாவும் முகத்தில் மொய்த்திருக்கும். அந்தளவு அழகானவள்; அன்பானவள்; பக்திமயமானவள். அவள் கோயிலில் சரியைத் தொண்டுகளான கூட்டுதல், கழுவுதல், விளக்குதல் என்பன செய்வாள். அவ்வேளைகளில் அவ்வூர் இளைஞர்கள் தாமும் சரியைத் தொண்டுகள் செய்தவாறு அவளை அன்போடு பார்ப்பார்கள். அவள் குனிந்த தலை நிமிராது தனது வேலையைக் கவனிப்பாள்.

அரவிந்தன் என்றொரு பெரும் வணிகன் அந்த ஊரில் இருந்தான். அவன் காயத்திரி மீது அளவுகடந்த காதல் கொண்டான். அவனின் தந்தை காயத்திரியின் தந்தையின் உயிர் நண்பர். அதனால் நல்லதொரு நாளில் திருமணம் நடைபெற்றது.

காயத்திரி அமைதியானவள். கணவனைத் தன் உயிராக நினைப்பவள். அவன் நினைத்தவற்றை நினைத்தவாறு செய்பவள். அதனால் அரவிந்தன் மிகவும் மகிழ்ந்தான். அவளுடன் கூடியிருக்கும் நேரங்கள் அவனக்கு அமுதாக இனித்தன. அந்த ஊரில் ஒரு பொய்மையான அழகிய பெண் இருந்தாள். அவளுடன் அவ்வூரில் உள்ள தீயவர்கள் கூடி இன்பம் அனுபவித்தனர்.

ஒரு நாள் அரவிந்தன் அவளைத் தற்செயலாகக் கண்டான். அவள் அரவிந்தனை வளைத்து அவனிடம் பொருள்பெற எண்ணிக் காமம் கலந்த புன்சிரிப்பைத் தனது உதடுகளில் தவழவிட்டாள்.

மயக்கும் தன்மை வாய்ந்த அந்த கவர்ச்சியான சிரிப்பு மின்னலைப் போல அரவிந்தனைத் தாக்கியது. சுழன்றாடும் அவளது விழிகள் மயக்கத்தை உண்டு பண்ணின. சிவந்த கன்னங்கள் அவனைச் செயலிழக்க வைத்தன. அவள் அன்பொழுகக் கதைத்தாள். அக்கதையில் காமம் பொங்கிவழிந்தது.

அரவிந்தன் அவளது மயக்க மொழியிலும், கவர்ச்சியிலும் காமங்கொண்டு அவளிடம் சென்றான். ஆரம்பத்தில் அவள் பொருளை நினையாது பெரும் இன்பம் கொடுத்தாள். அந்த இன்பம் காயத்திரி கொடுக்கும் இன்பத்தைவிட மேலானது என்று எண்ணினான் அரவிந்தன். சில நாட்கள் செல்ல அவன் ஆசையோடு அவளிடம் சென்றபோது அவள் சோகமாக இருந்தாள். அவளது முகம் கறுத்துச் சுருங்கி இருந்தது. அதைக் கண்ட அரவிந்தன் துடித்துப்போனான். பலமுறை அவன் அதற்கான காரணத்தைக் கேட்ட போதும் அவள் அதைச் சொல்லாது விம்மிவிம்மி அழுதுகொண்டிருந்தாள். "அன்பே, உனது துன்பத்தைச் சொன்னால்தானே என்னால் உதவ முடியும். பயப்படாமல் சொல். என்னவானாலும் நான் செய்வேன்" என்றான் அரவிந்தன்.

அவள் அழுவதை நிறுத்திவிட்டுச் சொன்னாள். "அன்பானவரே என்மீது உயிரையே வைத்திருப்பவரே; இந்த வீடு வாடகை வீடு. இதை விற்கப்போகிறார்களாம். விற்றால் நான் எங்கே போவது" விம்மி விம்மி அழுதாள். அவளது அழுகையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை." எவ்வளவு பணம் தேவை? என்று கேட்டான் அரவிந்தன்.' 'பத்து இலட்சம் ரூபா" என்றாள் அவள்.

"நான் தருகிறேன்" என்றான் அவன்.

அது அவளது சொந்த வீடு. ஆடவர்கள் மயக்கமுற்றிருக்கும்போது அவள் இப்படியான பொய் வார்த்தைகளைக் கூறி அவர்களிடம் பணம் பெறுவாள்.

பத்து இலட்சம் ரூபாவை அவளுக்குக் கொடுப்பதற்காக அவன் தனது விவசாய நிலத்தை விற்றான். சில தினங்களின் பின் அவளின் வீட்டுக்கு வந்த அவனது சகோதரன் அரவிந்தனைப் பயமுறுத்தினான். " நீ இங்கு வருவதை ஊர் முழுவதும் சொல்வேன். நீ எனக்கு நான் கேட்கும் போதெல்லாம் பணம் தரவேண்டும்" என்றான்.


அரவிந்தன் அதை அவளிடம் சொன்னான். அவள் சொன்னாள்; அவன் தீயவன் எனது சொற் கேட்கமாட்டான். நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் சந்தியில் நின்று கண்டபடி கத்துவான்" என்றாள்.

அவனது நண்பன் கூறியது அவனது ஞாபகத்திற்கு வந்தது. "அரவிந்தா அவள் காமப்பேய். ஆரம்பத்தில் இனிக்க இனிக்கப் பேசுவாள். பின் செயலாற்ற ஆரம்பிப்பாள். அவளது குடும்பமும் அவளுடன் சேர்ந்து பணம் பறிக்கும். உனக்கு அழகான மனைவி உள்ளாள். அவளோடு கூடி அனுபவிக்கும் இன்பம் சுனை நீரில் நீராடுவதைப் போன்றது. விபச்சாரிகள் தரும் இன்பம் சுணைக்குள் இருக்கும் அபாயமான சுழியைப் போன்றது. அதற்குள் அகப்பட்டால் மரண வேதனைதான். அதனால் அவளைவிட்டுவிடு"

அரவிந்தன் அவளின் தொடர்பை அறுக்க முயன்றான். முடியவில்லை. அவளும் அவளது குடும்பத்தினரும் அவனைப் பயமுறுத்திப் பொருட்களைப் பெற்றுவந்தனர். இப்போது அவனுக்கு அவளை நினைக்கப் பயமாக இருந்தது. தனது வாழ்வு அழிந்துவிடுமோ என அஞ்சினான் அரவிந்தன்.

பெரும் சமூகச் சீர்கேடு ஒன்றை மிகவும் எளிமையாகவும் உண்மையாகவும் சமய சாத்திர நூலினூடாகத் திருமூலர் விளக்கியிருப்பதைப் போல எந்தப் புலவரும் விளக்கியதில்லை. சமயத்தின் மூலம் சமூகத்தைத் திருத்தும் முயற்சி இது.

# சிந்தியா பதில்கள்



✉ சிந்தியா! தமிழ்ப்பேரறிஞர் கா.சிவத்தம்பி மறைவை இட்டு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**எஸ்.பாலேந்திரன், யாழ்ப்பாணம்.**

● தமிழ் இலக்கியத் துறையில் மட்டுமல்லாமல் பரந்துபட்ட எழுத்துத் துறையிலும் தனது பதிவுகளை மிக ஆழமாகப் பதிவு செய்திருப்பவர். அந்த இடைவெளி எப்போதும் இருக்கவே போகின்றது.

அவரின் மறைவுச் செய்தி, கேட்ட அந்த நிமிடங்கள் ஒவ்வொரு தமிழ் மக்களின் இதயங்களிலும் கனமாகவே விழுந்திருக்கும்.

✉ சிந்தியா! தெற்கு சூடானின் விடுதலை பற்றிய உங்களின் அபிப்பிராயம் என்ன?

**வ.கஜமுகன், கண்டி.**

● தெற்கு சூடானுக்கு விடுதலை என்பது அதற்குரிய பொறுப்பிலிருந்து, தப்பித்துக் கொள்வதற்கான உத்தியாகவே பார்க்கப்பட வேண்டும். அதன் வறுமையும், ஏனைய பொருளாதார சிக்கல்களும், விடுதலை என்ற மகிழ்ச்சியில் அந்த மக்கள் பூரணமாகக் கொண்டாட வழி வகுக்காது.

போரா? சுதந்திரமா? என்ற கேள்வியே இப்போது சூடான் மக்களிடம் கேட்டால், இரண்டுமே தேவை என்பார்கள் அல்லது உணவு என்பார்கள். தனித்துச் செல்வது என்பது சர்வதேச சமூகங்கள் மத்தியில் இருந்து ஒதுங்கிப்போவதாக அமைந்துவிடக் கூடாது. இதில் நகைச்சுவை என்னவென்றால், சூடான் விடுதலையைப் போல தமிழீழமும் ஒரு நாள் மலரும் என்று வை.கோபாலசாமி கூறியிருப்பதுதான்.

✉ சிந்தியா! சூடு பிடித்திருக்கும் தேர்தல் பற்றி..?

**ம.பிரபாகர், யாழ்ப்பாணம்.**

● சூடு பிடித்திருக்கும் என்பது வன்முறைச் சொல். களை கட்டியிருக்கின்றது என்பது அழகுச் சொல். ஆகவே யாழ்ப்பாணத் தேர்தல் களம் களைகட்டியிருக்கின்றது என்றே நான் நினைக்கின்றேன். தேர்தலுக்குப் பின்னர் யாழ். மாவட்டப் பிரதேசங்களில் என்னென்ன அபிவிருத்திகள் நடைபெறும் என்பதைத் தற்போது வாக்குறுதிகளாகக் கேட்கும் அதேவேளையில் தேர்தலுக்கு முன்னமே அமைச்சர்கள் வருகையை ஒட்டி முழுவீச்சில் அபிவிருத்திப் பணிகள், மாறிவருகின்ற சூழலை உணரச் செய்கின்றது.

அந்த வகையில் தேர்தல் களம் களைகட்டியிருக்கின்றது என்று நினைக்கின்றேன்.

✉ சிந்தியா! டில்சான் தலைமையிலான இலங்கை அணி இங்கிலாந்துடனான ஒருநாள் தொடரை இழந்தது குறித்து தங்களின் கருத்து?

**ம.குமரன், கண்டி.**

● அது இலங்கை அணியின் தோல்வியாக எனக்குத் தெரியவில்லை. அணியைத் தயார்ப்படுத்துபவர்களின் தோல்வியாகவே கருதுகின்றேன்.

இதே நிலைமை தொடர்ந்தால், வீரர்கள் விளையாடுவார்கள். நாடு தோத்துப் போகும்.

✉ சிந்தியா! சினிமாவில் நடக்கும் வன்முறை போன்றே நிஜ வாழ்விலும் அதை மேற்கொள்பவர்கள் பற்றி?

**வா.நஜீதா, மட்டக்களப்பு.**

● நிஜவாழ்வில் இருக்கின்ற வன்முறைகளையே சினிமா பிரதிபலிக்கின்றது. மிகச் சொற்பமான வன்முறையே கற்பனையில் உதிக்கிறது. சினிமா சிறந்த ஊடகம் என்ற வகையில் ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு வன்முறையைப் பரப்புகின்றது என்றே நாம் கூறலாம்.

✉ சிந்தியா! மறுபிறப்பு எடுப்பதாக சொல்லப்படுவது உண்மையா?

**ஜ.கீர்த்தனா, வவுனியா.**

● அப்படியொரு வாய்ப்பு நமக்கு இல்லையென்றே நம்புகின்றேன், ஏனென்றால், ஒரு மனிதனின் இறப்புக்குப் பின், எல்லாமே இடைநடுவே முற்றுப்பெறுகிறது. எந்தவொரு மனிதனும் நான் மீண்டும் வந்தேன், என்று கூறிவிட்டுச் சென்ற கடமைகளைத் தொடர்ந்தாக இதுவரை அறியவில்லை.

✉ சிந்தியா! பெண்களின் பெயர்களை ஏன் நதிகளுக்குச் சூட்டினார்கள்.?

**எச்.எம்.எம்.மஸ்னவீ, புத்தளம்.**

● ஒருவேளை நதிகளுக்குச் சூட்டிய பெயரை பெண்களுக்குச் சூட்டினார்களோ தெரியவில்லை. பெயர்கள் சூட்டப்பட்டதற்குக் காரணம் எதுவென்று நதிகளைப் பற்றிப் பேசுபவர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் இருக்கின்றார். என்னைக் காணுகின்ற சந்தர்ப்பங்களில் நிச்சயம் கடனாகப் பணம் கேட்பார். அவரது பெயர் கோடீஸ்வரன்.

✉ சிந்தியா! காதலித்தால் கவிதை வரும் என்கிறார்களே. அப்படியானால் திருமணம் முடிப்பவர்களுக்குக் கவிதை வராதா?

**எஸ்.எழிலரசி, திருகோணமலை.**

● எழிலரசி, உங்களின் கேள்வியைப் பார்த்தவுடன் ' ஒருவரின் துடிப்பினிலே கவிதை வரும். இருவரின் துடிப்பினிலே மழலை வரும்' என்ற கவியரசர் கண்ணதாசனின் பாடல்கள்தான் ஞாபகத்துக்கு வருகின்றது.

காதல், திருமணம் இரண்டுமே மகிழ்ச்சியாக அமையும் வரை மனதிற்கு இதமான சம்பவங்கள்தான். எனவே உங்கள் திருமண வாழ்க்கையை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளும்வரை திருமணத்தின் பின்னரும் நீங்கள் கவிதை எழுதலாம். வாழ்வை மகிழ்ச்சியானதாக்க வழிவகைகளைத் தேடுங்கள். ஆயுளுக்கும் கவிதை வரும்.

# சம்பந்தரின் போர்முரசும் தமிழ்மக்களின் பதிலடியும்

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக கறுப்பு ஜூலையாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற அதே ஜூலை 23 அன்று யாழ்ப்பாண மக்கள் தங்களுடைய எதிர்கால அபிவிருத்தியை நிர்ணயிக்கப் போகின்ற வாக்குகளை அளிக்க இருக்கின்றார்கள்.

தேர்தல் பிரச்சார பணிகள் மெதுவாக சூடுபிடிக்க ஆரம்பித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இம்முறை தேர்தலைப் பொறுத்தவரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன களமிறங்கியிருக்கின்றன. இதுவரை கால பிரச்சார நடவடிக்கைகளை அவதானித்து பார்க்கின்ற வரையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடுகின்ற ஈ.பி.டி.பி. யினரின் பிரச்சார வேலைகள் சற்றுக் கூடுதலாக இருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இவர்களின் பிரச்சார வேலைகளுக்கு ஈ.பி.டி.பி. மற்றும் ஆதரவாளர்கள் என்பதற்கும் அப்பால் தென்னிலங்கை அமைச்சர்கள் சிலர் நேரடியாகக் களமிறங்கி பிரச்சாரப் பணி களில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. அதேவேளை எதிர்வரும் வாரங்களில் ஜனாதி- பதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பிரச்சார வேலைகளில் நேரடியாக ஈடுபட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையிலேயே எதிர்த் தரப்பினரின் பிரச்சாரங்களை முறியடிக்கும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் தமது பிரச்சார வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். வழமை போன்று யாழ்ப்பாண வாக்காளர்களின் சிந்தனைக்கு ஏற்ற விதமான பிரச்சார உத்திகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கையாண்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

அதன் ஒரு கட்டமாகவே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் ஒரு கருத்தினைத் தெரிவித்திருந்தார். "தமிழர் விரோத செயற்பாடுகளை நிறுத்தாவிடின் வடக்கு, கிழக்கு மக்களை அணி திரட்டி பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்திருக்கிறார். இங்கு தமிழர் விரோத நடவடிக்கை என்பது என்ன? எவ்வாறான விரோதங்கள் மேற்கொள்ளப்படுகின்ற என்பது பற்றியெல்லாம் விளக்கியிருக்கவில்லை. இது அரசியல் தீர்வு விடயத்தில் கூட்டமைப்பினருக்கு இருப்பது போன்ற விளக்கமின்மையினையே இங்கும் வெளிப்படுத்துகின்றது. கேட்டால், தடுப்பில் இருப்பவர்கள் விடுவிக்கப்படாமை, மீள்குடியேற்றங்கள் பூரணமாக்கப்படாமை, அரசியல் தீர்வு முன்வைப்பதில் காலதாமதம் செய்தல் போன்றவை எல்லாம் மக்கள் விரோதச் செயற்பாடுகள் தானே என விளக்கம் தர முனைவார்கள். இவையெல்லாம், ஒருவகையில் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் தான் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் இவை எவையும் இரவோடு இரவாக வானத்தில் இருந்து குதித்தவைகள் அல்ல. பல வருடங்களாக நடைமுறை ரீதியில் எமது மக்கள் அனுபவித்து வருகின்ற கஷ்டங்கள்.

கடந்த காலங்களில் இதைவிட மோசமான அவலங்களுக்கு எல்லாம் தமிழ் மக்கள் முகம்கொடுத்திருக்கின்றார்கள். அப்போதெல்லாம் பேசாது மௌனம் காத்துக் கொண்டிருந்தவர்கள், வெளிநாடுகளின் குழந்தைகளுடனும் பேரக்குழந்தைகளுடனும் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று ஞானோதயம் பெற்றவர்களாக மக்கள் விரோத நடவடிக்கைகள் நடப்பதாகவும், தீர்வு இல்லையேல் போராட்டம் வெடிக்குமென வரிந்து கட்டிக் கொண்டு பாராளுமன்றம் சென்று முழங்கியிருப்பது சந்தேகத்துக்கு இடமற்ற அரசியல் சுத்துமாத்து என்றும் எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன.

அதேவேளை கூட்டமைப்புத் தலைவரினால் கூறப்படுவது போன்று சமூக விரோத நடவடிக்கைகள் நடைபெறுகிறது என்று வைத்துக் கொண்டாலும், கூட்டமைப்பின் அழைப்பையேற்று மீண்டுமொரு முறை அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பது சிந்திக்கப்பட வேண்டியது. ஏற்கனவே கூட்டமைப்பின் கருத்துக்களை ஏற்று ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் தவறான வழியில் சென்று சொல்லொணாத் துன்பங்களையும் இழப்புகளையும், மக்களுக்கு வழங்கியிருக்கின்றது. அந்த வடுக்கள் இன்னும் ஆறாத நிலையில் மீண்டும் கூட்டமைப்பினர் மக்கள் போராட்டம் பற்றி பேசியிருக்கின்றார்கள். இது தமிழ்க் கூட்டடைப்பினரின் மக்களை ஏய்த்து அரசியல் செய்யும் பாங்கு இன்னும் மாறவில்லை. இத்தனைக்குப் பின்னரும் தங்களை மாற்றிக் கொள்வதற்கும் அவர்களின் சுயநலக் கொள்கைகள் இடம்தரவில்லை என்பதை தெளிவாக்குகிறது.

அன்று, இந்த அரசியலுக்காக வட்டுக்கோட்டைத் தீர்மானம், சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி போன்ற கோஷங்களை உயர்த்திப் பிடித்தவர்கள் இன்றும் அதேபாணியில் மக்கள் உணர்ச்சிகளை தூண்டும் வகையில் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாகவே கூட்டமைப்பு வேட்பாளர்களின் வீட்டு வாசலில் சாம்பல் வீசுவது. நாய்களின் தலையைத் தொங்க விடுவது போன்ற செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மக்களின் மனங்களில் அரச எதிர்ப்பு நிலைப்பாடுகளையும், தமி ழின உணர்வுகளையும் தட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தப்பட்டவர்களின் எண்ணமாக இருக்கலாம். ஆனால் கடந்த கால அனுபவங்களும் அரசியல் நிகழ்வுகளும் மக்கள் மத்தியில் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றது. தொட்டதற்கெல்லாம் தடியெடுத்து சண்டித்தனம் செய்வது என்பது தம்மைத் தாமே அழித்துக் கொள்வதற்கான முதன்மை வழியென்பதை மக்கள் அனுபவப்பட்டறிவின் ஊடாக உணர்ந்து வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலேயே தற்போதைய நிலைமையையும் மக்கள் நோக்குகின்றார்கள். தற்போது, கூட்டமைப்பினரின் குற்றச்சாட்டுக்களையும் ஒப்பாரிகளையும் கணக்கில் எடுக்காது வேடிக்கை பார்க்கின்ற நிலையில் மக்கள் இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. இந்த அவதானிப்பின் யதார்த்தத்தை எதிர்வரும் ஜூலை 23, ஆம் திகதி வாக்களிப்பின் மூலம் அனைவரும் உணர்ந்து கொள்ளக் கூடியதாவிருக்கும்.



**கூட்டமைப்பின் கருத்துக்களை ஏற்று ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் தவறான வழியில் சென்று சொல்லொணாத் துன்பங்களையும் இழப்புகளையும், மக்களுக்கு வழங்கியிருக்கின்றது. அந்த வடுக்கள் இன்னும் ஆறாத நிலையில் மீண்டும் கூட்டமைப்பினர் மக்கள் போராட்டம் பற்றி பேசியிருக்கின்றார்கள். இது, தமிழ்க் கூட்டடைப்பினரின் மக்களை ஏய்த்து அரசியல் செய்யும் பாங்கு இன்னும் மாறவில்லை. இத்தனைக்குப் பின்னரும் தங்களை மாற்றிக் கொள்வதற்கும் அவர்களின் சுயநலக் கொள்கைகள் இடம்தரவில்லை என்பதையும் தெளிவாக்குகிறது.**

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி **வழித்துணை...)**

"இந்தத் தோட்டத்தில் தனியே கிடந்து ஏன் கஷ்டப்பட வேண்டும். என்னுட னேயே நகரத்திற்கு வந்துவிடுங்கள்" என்று சொன்னபோது அவன் அம்மா சொன்னாள். "எனக்கு இது ஒன்றும் புதுசில்லையே, நான் இங்கேயே இருந்து விடுகிறேன், எனக்குப் பழகிப்போய்விட்டது."

ஆமாம், இந்த நாய்குட்டிகூட தனிமைக்குப் பழகி விட்டிருக்கலாம் இந்த நகரத்திற்கு நான் பழகிக்கொண்டது போல. எத்தனை விதமான யோசனைகளில் கிடந்து அல்லாடுகிறேன்! ஆனால் இதுவோ கண்டுகொள்ளாமல் போய்க் கொண்டிருக்கிறது. வைராக்கியம் மிக்கதான மௌனம். யாருக்குத் தெரிகிறது, இந்த மௌனமே இதன் கண்டுகொள்ளும் முறையாகக்கூட இருக்கலாம்.

அவன் கேட்டான்,

"உன்னுடைய தாய் எங்கே இருக்கிறாள்? உன்னைத் தனியாக்கிவிட்டு எங்கே போயிருக்கிறாள்? என்னைப்போல நீதான் அவளை விட்டு வந்திருக்கிறாயா?"

"இந்நேரத்தில் தோட்டத்தில் உள்ள எங்களது வீட்டில் திண்ணையில் வானத்தைப் பார்த்தபடி அவள் படுத்திருப்பாள் உறங்கிப்போயிருக்கலாம் சுவரில் சாய்ந்து உட்கார்ந்து, இருளில் அசையும் தென்னை மரங்களை வெறித்தபடி இருக்கலாம். அழுதுகொண்டிருக்கக்கூடும். எத்தனையே? இரவுகளில் தனிமையில் அவள் அழுவதைப் பார்த்திருக்கிறேன். எதற்காக அழுகிறாள்? யாருக்குத்தெரியும், எவ்வளவோ காரணங்கள். தனது வாழ்நாளில் இழந்தவற்றையும், அடைந்தவற்றையும் அவள் மனம் கணக்கிட்டுக்கொண்டே இருக்கும் போல.

"நீ எப்போதாவது அழுதிருக்கிறாயா? சென்டிமென்ட் டெல்லாம் உண்டா உனக்கு? ஒரு வேளை போஸ்ட் மார்டனிஸ்டா நீ?"

அவன் தலைக்கு மேலே காற்றை உலுக்கியபடி ஒரு வௌவால் விருட்டென்று பறந்து மறைந்தது. அண்ணாந்து பார்த்துத் துழாவினான். எதுவும் தென்படவில்லை. வான்வெளி இன்னும் வசீகரமாகத் தெரிந்தது.

"என்னுடைய கேள்விகளும் பதில்களும் உனக்குப் புரிகிறதா என்று தெரியவில்லை. ஆனால் எனக்கோ உன்னுடன் பேசிக் கொண்டு வருவது ஆறுதலாக இருக்கிறது. நான் சொல்லுவதையெல்லாம் கேட்டுவிட்டுப் புத்திபுகட்டமாட்டாய் என்ற தைரியமாகக்கூட இருக்கலாம்."

குடியிருப்பின் விளக்குகள் சமீபித்துக் கொண்டிருந்தன. நாய்க்குட்டியைத் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தான். ஏர் போல அது அவன் மனதை உழுது கொண்டே முன்செல்கிறது.

அவன் சொன்னான், "நமக்கு மேலே கவிழ்ந்திருக்கும் இந்த வானம், நம்மைச் சூழ்ந்திருக்கும் இருள், இந்தச் சாலை, எதேச்சையான இந்தக் கணம், நாம் இருவரும் ஏதோ ஒரு நிச்சயமற்ற புள்ளியில் சந்தித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில் விலகியும் இருக்கிறோம். ஏதோ ஒரு உணர்வு நம்மைப் பிரித்து வைத்திருக்கிறது. ஒரு வேளை என் குற்ற உணர்வாக இருக்குமா அது, இல்லை மானுடத்தின் ஒட்டு மொத்தமான சீரழிவா?" நாய்க்குட்டியைக் காணவில்லை.

"திரும்பவும் எங்கே போய் ஒளிந்துகொண்டுவிட்டது? ஏன் இப்படி என்னிடம் கண்ணாமூச்சி விளையாடுகிறது? ஒரு வேளை தோன்றி மறைவதுதான் அதன் குணாதிசயமே இருளுக்கும் ஒளிக்கும், நினைவுக்கும் மறதிக்கும், வார்த்தைக்கும் மௌனத்திற்கும் இடையே?"மறைந்து போன நாய்க்குட்டி இக்கணத்தில் எங்கே இருக்கும் என்று அவனால் யூகிக்கவும் முடியவில்லை. வீடு வந்துவிட்டது. ஏதோ ஒரு அசாதாரண கணம் முடிவுக்கு வந்து விட்டதுபோல ஒரு பிரமை. ஒரு பிரகாசம் அணைந்துவிட்டது போன்ற இருளின் அழுத்தம். திரும்பவும் அதைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது தெரியவில்லை.

கதவைத் தட்டி அவன் மனைவியைக் கூப்பிட்டான். அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருக்க வேண்டும். நீண்ட அழைப்புக்குப் பின் கதவைத் திறந்தாள். அவன் வீட்டுக்குள் வந்ததும் தூக்க கலக்கத்திலேயே அவள் தெருவை எட்டிப்பார்த்து எதையோ தேடினாள்.

இந்த இருளில் எதைத் தேடுகிறாள்? கேட்டான், "என்னது?"

"பொழுதெல்லாம் ஒரு நாய்க்குட்டி இங்கே சுத்திக்கிட்டிருந்தது, எங்க போச்சின்னு தெரியல, பாவம்" என்றாள் அவள். அவன் வியப்புடன் கேட்டான், "நாய்க்குட்டியா?"

"ஆமாம் ஒரு கறுப்பு நாய்க்குட்டி" என்றாள் அவள்.



# இந்தவாரம் உங்கள் பலன்

(14.07.2011 தொடக்கம் 20.07.2011 வரை **ஸ்ரீதர்**

## மேடம்

இது சந்தோஷமான வாரம். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். செலவுத்தானம் அதிகரிக்கலாம். தொழில் ஸ்தானத்தில் முன்னேற்றம் உண்டு. வருமானம் அதிகரிக்கும். எதிர்ப்பு போட்டி பொறாமைகள் விலகும். பணத்தட்டுப்பாடு வரும். கொடுக்கல் வாங்கல்களில் குளறுபடிகள் ஏற்படலாம். வீண் பேச்சுக்களால் மனஸ்தாபம் வரக் கூடும். உறவினர்களால் சந்தோஷம் உண்டு. உடம்பில் பெரிதாக மாற்றம் எதுவும் இல்லை. எனினும் மனதில் மகிழ்ச்சி நிலவும். மாணவர்கள் படிப்பார்கள். வர்த்தகர்கள், வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்:ஞாயிறு

## இடபம்

இது கொஞ்சம் சிக்கலான வாரம்தான். வீண் அலைச்சல், தண்டச் செலவு, ஏமாற்றங்கள் வரலாம். திட்டமிட்ட காரியங்கள் செவ்வனே நிறைவேறும். ஞாபக மறதியால் துன்பங்கள் வரும். பணவரவு சுமாராக இருக்கும். தொழில் ஸ்தானத்தில் குழப்பங்கள் வரக் கூடும். நீண்டநாள் பாடுபட்டதன் பலன் இப்போது கிடைக்கப்போகிறது. சேமிப்புப் பணத்துக்கு செலவுத்தானமுண்டு. குடும்ப உறவுகளின் ஆசைகளை நிறைவேற்ற முடியாது போகலாம். எந்தக் காரியத்திலும் தீர்க்கமான முடிவு எடுக்கமுடியாமற் போகலாம். நண்பர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். சகோதர வழியால் சொத்து சேர வாய்ப்புண்டு.

அதிர்ஷ்ட நாள்:திங்கள்

## மிதுனம்

இவ்வாரம் சாதகமான வாரம். பணவரவுகள் உண்டு. உறவினர்களால் நன்மையுண்டு. மருத்துவச் செலவுண்டு. செய்காரியங்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படலாம். எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை பார்த்தாலும் நன்மை கேட்க முடியாது. குடும்ப உறவுகளின் செயற்பாட்டால் நற்பலன் கிட்டும். தேவையான பொருட்களை அளவுக்கு அதிகமாகவே வாங்கிக் குவிப்பீர்கள். மற்றவர்களைப் பற்றி விமர்சனம் செய்யவேண்டாம். ஆபத்துக் காத்திருக்கிறது. வன்சொற்களை விடுத்து எந்நேரமும் இன்சொல் பேசவும். ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கவும். விருப்பமின்றிச் சில காரியங்களைச் செய்ய நேரிடும். அதிர்ஷ்ட நாள்:செவ்வாய்.

## கடகம்

இது உங்களுக்கு நல்ல பலன் தரும் வாரமாகும். திட்டமிட்டவாறே எல்லாம் நடக்கும். தொழில் ஸ்தானத்தில் நற்பெயர் கிட்டும். திடீர் பயணத்துக்கு வாய்ப்புண்டு. இல்லம் சிறக்க நல்ல காரியங்கள் பேச்சுக்கால் நிகழும். கடன் பிரச்சினை சுமூக நிலைக்கு வரும். உங்களது நியாயமான கோரிக்கைகள் நிறைவேற இடமுண்டு. விலகிப்போன உறவினர்கள் மீண்டும் வந்து இணைந்து கொள்வர். திடீரென்று பணச்செலவு வரும். முன்வைத்த காலைப் பின் வைக்க வேண்டாம். நண்பர்கள், உறவினர்களால் ஆபத்து வரும். சகோதரி வழியால் எதிர்பார்த்த உதவிகளே கிடைக்கும். மாணவர்கள் நன்கு படிப்பார்கள். வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். அதிர்ஷ்ட நாள்:புதன்.

## சிங்கம்

இது உங்களுக்குக் கொஞ்சம் குழப்பமான வாரம். தொழில் ஸ்தானத்தில் மதிப்புக் குறையும். இல்லத்திலுள்ள மற்றவர்கள் பாசங் காட்டுவர். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவித்துப் போவீர்கள். பிள்ளைகளால் மதிப்பு, கௌரவம் என்பன உயரும். எதிர்பார்த்த சில விடயங்களில் பலன் கிட்டாது. நீண்ட தூரப் பயணங்களால் வீண் செலவுக்கு ஆளாவீர்கள். பெண்கள் ரீதியாகக் கெட்ட பெயர் வர இடமுண்டு. எதிர்பார்த்தபடி தூரச்செய்திகள் வந்து மன நிம்மதிக்கு வழிகோலும். பணம் பொருள்வர வாய்ப்புண்டு. மருத்துவச் செலவும் உண்டு. கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

அதிர்ஷ்ட நாள்:புதன்.

## கன்னி

இந்த வாரம் மறதி, கவனக்குறைவு, தாமதம் என்பன ஏற்பட்டுகெட்ட பெயர் எடுக்க வேண்டி நேரிடும். ஆதாயமற்ற வீண் அலைச்சலுக்கு இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் மந்த நிலைக்கு இடமுண்டு. எந்தக் காரியமானாலும் தடை, தாமதங்களுக்கு இடமுண்டு. நீங்கள் நினைத்து ஒன்று, நடந்தது ஒன்றாக இருக்கும். உறவினர்களால் நன்மைகள் உண்டு. அரச காரியங்கள் தங்களுக்கு அனுகூலமாக வர வாய்ப்புண்டு. உடல்நிலை பாதிக்கப்பட்டு மருந்துவச் செலவு ஏற்படும். எட்டிக்குப் போட்டியாக நடந்தவர்கள் நாணமுற்று விலகுவார். கலைஞர்கள், வர்த்தகர்கள் இலாபமீட்டுவர். பணவருவாய் உண்டு.

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.

## துலாம்

இந்த வாரம் அனுகூலமான வாரமாகும். முக்கியமான காரியங்கள் முடிவுக்கு வரும். உற்றார் உறவினர் உதவி புரிவார்கள். உற்சாகத்துடன் காலங்கழிப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் குழப்பங்கள், தடுமாற்றங்கள் சந்திக்கலாம். சக ஊழியர்கள் மீது ஜாக்கிரதையாக இருக்கவும். எதிலும் எச்சரிக்கையாகவே இருக்கவும். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். கடுமையான வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டாம். குடும்ப அங்கத்தவர்கள் ஒத்துப்போவார்கள். அடைவு வைக்கப் போகவேண்டாம். அயல்வீட்டுக்காரரால் தொல்லையுண்டு. மாணவர்கள் கொஞ்சம் அக்கறையின்றிக் காணப்படுவார்கள். வர்த்தகர்கள் கௌரவம்பெறுவார்கள்.அதிர்ஷ்ட நாள்:வெள்ளி.

## விருச்சிகம்

இது உங்களுக்கு மிக மிகச் சிறப்பான வாரமாகும். பணவரவு தாரளமாக உண்டு. விருப்பமான பலர் உங்களைச் சந்திப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. திட்டமிட்டவாறே காரியங்கள் நிறைவேறும். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். சக ஊழியர்களுடன் எச்சரிக்கையாக இருங்கள். குடும்பத்தில் சிறிது சலனம் இருக்கும். தூர தேசத்தில் இருந்து நல்ல செய்தி வரும். கடன் பிரச்சினை சுமூக நிலைக்கு வரும். அலங்கார ஆடம்பரப் பொருட்கள் வாங்கலாம். மாணவர்கள் கல்வியில் நாட்டங்காட்டுவர். உடல் நலக்குறைவினால் மருத்துவச் செலவுக்கு இடமுண்டு. அதிர்ஷ்ட நாள்:ஞாயிறு

## தனுசு

இந்த வாரம் வீணான குழப்பங்களும் தடுமாற்றங்களும் வரும் வாரமாகும். பிரச்சினைகள் அதிகரித்துத் தேவையற்ற குழப்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும். எதிர்பாராத பணம் வரும். அப்படி வந்தாலும் நிம்மதி என்பது மருந்திற்கும் இருக்காது. உறவினர்கள், நண்பர்கள் கை கொடுத்து உதவுவார்கள். தொழில் ஸ்தானத்தில் சில நெருக்கடிகள் வரக்கூடும். எனினும் அதிகம் பாதிப்பில்லை. கடுமையான முயற்சியின் பின்புதான் வெற்றி கிடைக்கும். எவ்வளவு முயன்றாலும் நல்லபெயர் கேட்கமாட்டீர்கள். நிலம், பூமி வாங்கும் பலன் காணப்படுகிறது. மாணவர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்வார்கள். கடவுள் வழிபாடு நன்மை பயக்கும் அதிர்ஷ்ட நாள்:வெள்ளி.

## மகரம்

இந்த வாரம் வீண் அலைச்சல் கொடுக்கும் வாரம். ஆதாயமற்ற அலுவல்களால் வாழ்க்கையில் விரக்தி ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் உதவுவார்கள். குடும்பத்தில் செய்ய வேண்டியனவற்றைச் செய்ய முடியாத ஓர் இக்கடான நிலை வரும். எந்தக் காரியத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தவிப்பீர்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு வீண் அவதிக்கு ஆளாகலாம். உண்மையான நம்பிக்கையுடன் போராடினால் வெற்றி நிச்சயம். உறவுகளிடம் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி சுமூக நிலை உருவாகலாம். பெற்றோர் உடல்நலத்தைப் பாதுகாக்க வேண்டும். பிறரின் பேச்சைக் கேட்டு வீணான துன்பங்களுக்கு ஆளாக நேரிடும்.

அதிர்ஷ்ட நாள்:புதன்.

## கும்பம்

இந்த வாரம் உங்களுக்குக் கலகலப்பான வாரம். எதிலும் உற்சாகத் துடன் செயற்படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் வெற்றி வீறு நடை போடும். குடும்பத்தில் உள்ளவர்கள் பாசமாக நடந்துகொள்வார்கள். செய்கின்ற காரியங்களில் தடை தாமதம் ஏற்பட்டாலும் ஈற்றில் வெற்றி கிட்டும். மனதில் தெம்பு பிறக்கும். குடும்பத்துக்குத் தேவையான பொருட்களை ஒன்றுவிடாமல் வாங்கிக் கொடுப்பார்கள். உங்களது உற்ற உறவினர்கள் இதுவரை காணப்பட்ட மனஸ்தாபம் நீங்கி சுமூக நிலை உருவாகும். அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கலாகாது. ஆற அமரச் சிந்தித்த பின்பே தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

அதிர்ஷ்ட நாள்:செவ்வாய்.

## மீனம்

இது மங்களகரமான நல்ல வாரம். திட்டமிட்டவாறே எல்லாம் நடக்கும். மனதில் ஊக்கம், உற்சாகம் குடிகொள்ளும். பணம் வரவு அதிகரிக்கும். மனச் சந்தோஷத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் திகைப்பீர்கள், இடையிடையே உடற்கோளாறு ஏற்படும். அசதி, சோர்வு, மயக்கம், உபாதை, வீண் செலவு என்பனவற்றக்கு ஆளாவீர்கள். நினைத்த காரியம் வெற்றி ஈட்டும். உறவுகளில் அன்பு காட்டுவீர்கள். வீட்டுத் தேவைகள் யாவும் குறைவின்றி நிறைவேறும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். மாணவர்கள் என்றுமில்லாதவாறு கல்வியில் கவனஞ் செலுத்துவார்கள்.

அதிர்ஷ்ட நாள்:சனி.

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்
பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை
- காதில பூ கந்தசாமி -

வணக்கமுங்கோ! இவ்வளவு நாளும் பரபரப்பு இல்லாமல் இருந்த யாழ்ப்பாணத்துத் தேர்தல் களம் இப்பதான் சூடு பிடிக்கத் தொடங்கியிருக்கெண்டு பார்த்தால் அதுக்கிடையில எங்கட கூட்டமைப்புக்காரர் திடீரெண்டு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கினமுங்கோ.

அதாகப்பட்டது. தேர்தல் நடைபெறவிருக்கிற ஜூலை இருபத்திமூன்றாம் திகதியானது ஜூலைக் கலவரங்கள் நடந்த கறுப்பு நாள் எண்டபடியாலை மானமுள்ள தமிழ் மக்கள் அனைவரும் தேர்தலை பகிஷ்கரிக்க வேணுமாமுங்கோ.

உந்த விஷயம் வெளியானதும் என்னால நிம்மதியாகத் தூங்க முடியுமோ. உடன ரெலிபோனை எடுத்து சம்மந்தம் ஐயாவுக்கு தொடர்பை ஏற்படுத்தினேனுங்கோ. அவர் என்ன சொன்னவர் எண்டதை தொடர்ந்து படியுங்கோவன்.

**நான்:** என்ன சம்மந்தம் உண்மையாக தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போறீங்களோ?

**சம்மந்தம்:** இஞ்ச கந்தசாமி! என்னை சம்மந்தம் எண்டு சொல்லுறதை முதலிலை நிப்பாட்டும். நீர் அப்புடிச் சொல்லேக்க எனக்கு கூச்சமாக இருக்குது. சம்மந்தம் எண்டதும் ஏதோ கல்யாண புறோக்கர் மாதிரியெல்லோ யாரும் நினைப்பினம். பிறகு ஊரில இருக்கிற விடலைப் பெடியல் என்னை மாமா எண்டெல்லோ கூப்பிடுவாங்கள்.

**நான்:** கிட்டத்தட்ட அந்த வேலைக்கும் நீங்கள் இப்ப பார்த்துக் கொண்டிருக்கிற வேலைக்கும் சம்மந்தம் இருக்கத்தானே செய்யுது. சரி அதை வீடுவம், நான் கேட்டதுக்குச் சொல்லுங்கோவன்.

**சம்மந்தம்:** எங்கட தமிழ் முறைப்படி ஜூலை மாதங்களிலை நாங்கள் ஒண்டும் செய்யிறதில்லை. அதுமட்டுமில்லாமல் கறுப்பு ஜூலை மாசமும் கூட இரண்டையும் மனதில வைச்சுக்கொண்டுதான் நாங்கள் உந்தத் தேர்தலை பகிஷ்கரிக்கப் போறம்.

**நான்:** நிங்கள் உப்பிடிச் சொன்னாலும் வெளியாலை சனம் வேற மாதிரியெல்லோ சொல்லினம்.

**சம்மந்தம்:** இஞ்ச உந்தச் சனங்கள் ஆயிரத்தைச் சொல்லுவினம்.' அதையெல்லாம் கேட்டுக்கொண்டு எங்களாலை ஆடமுடியாது தெரியுமோ. சனங்களாம் சனங்கள் சரி. அப்புடி என்னத்தைச் சொல்லிச்சினம் உந்த சனம்.

**நான்:** ஏன் சம்மந்தம் சனங்கள் எண்டதும் உப்பிடி ரென்சன் ஆகிறியள். நீங்கள் காலத்துக்குக் காலம் வாக்குகளை வாங்கிக் கொண்டு சனத்துக்கு ஒண்டையும் செய்ய இல்லைத்தானே. உங்கட பக்கத்தில குற்றங்களை வச்சுக்கொண்டு சரி அதை விடுவம். இப்ப சனம் என்ன சொல்லினமெண்டால் உந்தத் தேர்தலிலை கூத்தாடிகள் கிட்டமுட்ட பத்தொன்பது சபைகளை வெல்லவேணும். அப்படி வெண்டால்தான், இவையைத்தான் தமிழ் மக்கள் ஏகபோகமாக ஆதரிக்கினம். ஆகவே இவையைத்தான் அரசாங்கமும் சர்வதேச நாடுகளும் அழைக்க வேண்டும், பேசவேண்டும் என்று சொல்லலாம்.

ஆனால் இவைக்கு வவுனியாவுலையும் மன்னாரிலையும் கிழக்கு மாகாணத்திலையும் இருந்ததைப் போன்ற நிலைமை யாழ்ப்பாணத்திலையும் கிளிநொச்சியிலையும் இல்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்திலை இல்லவே இல்லை. ஆனானப்பட்ட புலிகளே துவக்கைக் கொண்டுபோய் தலையில வச்சு அழுத்திக் கொண்டு அச்சுறுத்தியபோதே யாழ்ப்பாணச் சனம் ஈ.பி.டி.பி.க்கு வாக்களிச்சு அமைச்சர் டக்ளஸை வெற்றிபெறச் செய்திச்சினம். அதுக்குப்பின் ஈ.பி.டி.பி. யாழ். மாநகர சபைத்தேர்தலிலை வெற்றிபெற்று ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது. பிறகு நடந்த பாராளுமன்றத் தேர்தலிலை மூன்று ஆசனங்களைப் பெற்றுக் கொண்டு தனது வாக்குகளை அதிகரித்துள்ளது. ஆகவே யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஈ.பி.டி.பி.யை முற்றாகத் தோற்கடிப்பது சிரமமான விடயம். ஈ.பி.டி.பீ இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு தேர்தலில் பத்து சபைகளை வெற்றி பெற்றது. இம்முறை தேர்தலிலும் நிச்சயமாக பெரும்பான்மை சபைகளை வெற்றி பெறுவார்கள் என்பது தெளிவா-கத் தெரிகின்றது. அப்படி ஈ.பி.டி.பி.யினர் சபைகளை வெற்றிபெற்று கூட்டமைப்பை தோற்கடித்தால் கூட்டமைப்பின் அரசியலே கேள்விக்குறியாகிவிடக்கூடும். ஆகையால்தான் கூட்டமைப்பினர் கறுப்பு ஜூலையைச் சொல்லி தேர்தலை பகிஷ்கரிக்கப்போகின்றனர். என்றும் தங்களது கோரிக்கையை ஏற்று மானமுள்ள தமிழ் மக்களும் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் கேட்கின்றனர் என்றல்லவா பேசிக்கொள்கின்றார்கள்.

**சம்மந்தம்:** உண்மையைச் சொல்லும் உப்பிடித்தான் சனம் சொல்லினமோ, நீர் மூச்சுப்பிடிச்சு சொன்ன தோரணையைப் பார்த்தால் நீரே இயற்றிச் சொல்லுமாப் போலையெல்லோ இருக்குது. சரி ஏதோ சனங்களின்ர பெயராலை சைக்கிள் கெப்பில, நீர் லொறி ஓட்டாமல் இருந்தால் சரிதான். கந்தப்பு சனங்களை விடப்பா உமக்கு உண்மையைச் சொன்னாலென்ன.

உந்த கறுப்பு ஜூலைக் கதையெல்லாம் சும்மாதான் இப்ப கூட்டமைப்புக்குள்ளேயும் கூட்டமைப்பு பொறுப்பெடுத்திருக்கும் பதவிகளை வகிக்கிறவைக்குள்ளேயும் ஒரே குத்துவெட்டாக் கிடக்கு. இது உமக்குத் தெரியுமெல்லோ. உந்த நிலையில சனங்களிட்டை எந்த முகத்தோடை போய் வாக்குக் கேக்கிறது. சனம் காறித்துப்பாதோ. அதுகளும் எப்பையடா தங்கட வாசலிலை வந்து நிப்பம் எண்டெல்லே பார்த்துக் கொண்டிருக்குதுகள். ஏதோ உதுகளெல்லாம் தெரிஞ்சும் தெரியாதது போலை நீரும் போன்போட்டு கேக்கிறீர். வடிவேலு சொல்லுமாப்போலை என்னை வச்சு ஏதும் காமெடி பண்ணுறீரோ. நாங்கள் வெளியில சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் படுகிறபாடு எங்களுக்குத்தான் தெரியும்.

**நான்:** பின்னயேன் மானமுள்ள தமிழ் மக்கள் தேர்தலை பகிஷ்கரிக்க வேணுமெண்டு சொல்லுறியள். உதே கேள்வியை சனங்கள் திருப்பிக்கேட்டால் நிங்கள் பதில் சொல்லுவியளோ. அதாவது இவங்களுக்கு என்ன மானமிருக்கோ. மானமிருந்தால் இத்தடிக்கும் தூக்கில தொங்கியெல்லோ உந்தக் கூட்டமைப்புக்காரர் ஒவ்வொருவரும் தூங்கியிருப்பாங்கள் எண்டு கேட்டால்?

**சம்மந்தம்:** அட! உதை நான் யோசிக்கல்லையே. சனம் அப்புடியும் யோசிக்குமோ எனக்கென்னவோ நீர்தான் என்னிட்ட போட்டு வாங்குறீர்போலை சந்தேகமாக இருக்குது எண்டு சொல்லிப்போட்டு மிஸ்டர் சம்மந்தம் போனை துண்டிச்சிட்டாருங்கோ.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# மின்சாரத்துக்குக் கடிவாளமிட்டவர்



மின்சாரம், இரசாயனம் இவைகளைப் பற்றிய இவரது சொற்பொழிவுகளைக் கேட்கச் சிறந்த அறிவாளிகள் எல்லாரும் வந்து கூடுவார்கள். விஞ்ஞானத்தில் விருப்பம் மிகக் கொண்ட ஃபாரடே, தனக்கு டேவியின் பிரசங்கத்தைக் கேட்க டிக்கெட் கிடைத்ததை மகத்தான பாக்கியமாகக் கருதினான். அன்று இரவு அவனுக்கு தூக்கமே வரவில்லை. மறுநாளும் 'பிரசங்கம் ஆரம்பிக்கும் நேரம் வெகுவேகமாக வரக்கூடாதா?' என்று அதே நினைவாகக் காத்திருந்தான். அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், பெருந்தொழில் அதிபர்கள் குழுமி இருந்த அரங்கிலே அவர்களிடையே தானும் அமர்ந்திருப்பதை ஃபாரடேயி-னால் நம்பவே முடியவில்லை. டேவியின் பிரசங்கத்திலே, அவரது விஞ்ஞான விளக்கங்களிலே அவையோர் அப்படியே தங்களை மறந்து ஈடுபட்டிருந்தனர். ஃபாரடே என்ன செய்துகொண்டிருந்தான் தெரியுமா? டேவினுடைய பிரசங்கத்தை அப்படியே ஒன்றுவிடாமல் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தான். டேவி தன் விஞ்ஞானத் தத்துவங்களுக்குச் செய்து காட்டிய பரிசோதனைகளையெல்லாம் அப்படியே வரைபடமாக கீறிக்கொண்டான். ஃபாரடே அன்று இரவும் தூங்கவில்லை. முதல் நாள் இரவு தலைசிறந்த விஞ்ஞானியின் பிரசங்கத்தைக் கேட்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில், அந்தக் கற்பனைகளில் தூக்கம் வரவில்லை.

உலகை வியக்க வைத்தவர்கள்

[வியப்புக்கள் தொடரும்...]

Regd. as a News paper at the G.P.O.(QD/129/NEWS/2011)

# கடல் கார்









நிறுவனமொன்று நீர்க்கார்களை உற்பத்தி செய்துள்ளது. இக்காரானது படகாக நீரில் மிதந்து செல்லவும், தரையில் உருண்டு செல்லவும் வல்லது. இக்கார்கள் சுமார் 100 Km வேகம் வரை பயணிக்கக் கூடியது. மெதுவாக சந்தைக்கு வந்து கொண்டிருக்கின்ற தற்போதைய சந்தை விலை 2 இலட்சம் அமெரிக்க டொலர்களாகும். (இந்தத் தொகை தற்போது வாயைப் பிளக்கும் வகையில் இருந்தாலும் காலப்போக்கில் கைக்கு எட்டும் வகையில் வந்துவிடும் என்று உற்பத்தி நிறுவனம் நம்பிக்கை தெரிவிக்கிறது.

# மூட நம்பிக்கை

ஆன்மீக ஈடுபாடு உடையவர்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களுக்கு விரதம் இருந்து நேர்த்திக் கடனாக பல்வேறுவிதமான சடங்குகளை செய்துவருவது எமக்கு தெரியும். காவடி எடுத்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், கற்பூரச் சட்டி எடுத்தல் என நாம் அறிந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இதேபோன்று கிழக்காசிய நாடுகளிலும் இவ்வாறான சடங்குகள் காணப்படுகின்றன. அதில் ஒரு வகைச் சடங்கையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். முள்ளுக் கட்டில் மேல் படுத்திருந்து இரத்தம் வழியவழிய அங்கப் பிரதட்சணம் செய்கிறார் இந்தத் தீவிர பக்தர்.

இவ்வாறான செயற்பாடுகளை மூடநம்பிக்கையாக எள்ளிநகையாடுபவர்கள், எம்மத்தியில் இருக்கிறார்கள் என்பது மறுப்பதற்கில்லை. எல்லாமே அவரவர் நம்பிக்கையைப் பொறுத்த விஷயம்.



# கில்லாடி






மெக்ஸிக்கோ நாட்டிலுள்ள சிறைச்சாலை ஒன்றில் 20 வருட சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்ற ரமிறெஷ் என்பவரை சிறையில் இருந்து மீட்பதற்கு முயன்ற அவரது காதலி மரியாவிற்கு ஒரு விபரீதமான எண்ணம் மனதில் பட்டிருக்கிறது. உடனடியாக செயலில் இறங்கிய மரியா, சூட்கேஸ் ஒன்றை எடுத்துக் கொண்டு சிறைச்சாலைக்குச் சென்றார். தனது காதலனை சந்திப்பதற்கான அனுமதியையும் பெற்றுக் கொண்டார், உள்ளே சென்றவர் வெளியே வரும் போது அவரிடம் பரபரப்பு இருப்பதை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவதானித்துவிட்டனர். உஷாரடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அந்த சூட்கேஸை திறந்து பார்த்த போது தாயின் கருப்பையில் இருந்த சிசுவைப் போன்று ரமிறெஷ் சூட்கேசுக்குள் இருப்பதைக் கண்டு அதிர்ந்து போய்விட்டனர். கில்லாடித்தனமாக கடத்த முயன்ற மரியாவை மடக்கிப் பிடித்த பாதுகாப்பு உத்தியோகத்தரும் கில்லாடிதான்.

# கவனிப்பு

வைத்தியசாலையில் தாதியர்கள் இருவர் நோயாளி ஒருவரை மிகவும் சிரத்தையுடன் கவனித்து வருவதாகவே இந்தப் படத்தைப் பார்த்ததும் எண்ணியிருப்பீர்கள். ஆனால் அது உண்மையல்ல. இப்படம் கிளிக் செய்யப்பட்டது ஒரு உணவு விடுதியில். அதாவது வைத்தியசாலை சூழலை ஒத்த உணவு விடுதி இது.

தாய்லாந்து நாட்டின் தாய்பேய் என்னும் நகரத்தில் அமைந்திருக்கிறது இந்த உணவகம். இங்கு வேலை செய்யும் பெண் ஊழியர்கள் எல்லோரும் தாதிமார் உடையிலேயே காட்சியளிக்கின்றனர். குடிபானங்கள் மருத்துவப் பைகளில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. நுகர்வோருக்கு இங்கு கிடைக்கின்ற அனுபவங்கள் புதுமையாக இருக்கின்றனவா?



# கலக்கல்




சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து முரளி ஓய்வு பெற்றதனால் கவலைப்படாத கிரிக்கெட் ரசிகர்களே இருக்கமாட்டார்கள். அதுவும் தமிழ் பேசும் ரசிகர் என்றால் இக்கவலை இரட்டிப்புத்தான். 'நம்மாள் ஓய்ந்து விட்டாரே' என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடு.

அப்படியானவர்களுக்கு ஆறுதலான செய்தி இது.

இன்னொரு தமிழ் பேசும் வீரர் கிரிக்கெட் அரங்கிற்கு புயலாய் நுழைந்திருக்கிறார். மலேசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட அருள் சுப்பையா என்கின்ற 28 வயது நிரம்பிய இவர், தற்போது இங்கிலாந்தின் பிராந்திய அணிகளில் பிரகாசித்து வருகிறார். சுழல்பந்து வீச்சாளரான இவரின் பந்துவீசும் பாணி ஏறக்குறைய நம்ம முரளியை ஒத்ததாகவே இருக்கின்றதாம். (அப்பிடீன்னா இவருக்கும் நோ போல் சொல்லுவாங்களா?!) கிரிக்கெட் கனவோடு இங்கிலாந்து சென்றிருக்கும் இந்தத் தமிழ்பேசும் வீரர், ஏற்கனவே இங்கிலாந்து சார்பாக 14,15,16,18 ஆகிய வயதுகளுக்கு உட்பட்ட அணியில் இடம்பிடித்து தனது திறமையை காட்டியிருக்கிறார். தற்போது இங்கிலாந்தின் கௌண்டி அணிகளில் ஒன்றான வொஷோஸ ியர் அணி சார்பாக விளையாடி வருகிறார். கடந்த 5ஆம் திகதி இளமோகன் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டி ஒன்றில் 3.4 ஓவர்களில் 05 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 விக்கெட்டுக்களைச் சரித்துள்ளார். இங்கிலாந்தில் உரிய சந்தர்ப்பம் வழங்கப்படுமாயின் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஏற்பட்டிருக்கும் முரளியின் இடைவெளி கொஞ்சமாவது குறைவடையும் என்பது விமர்சகர்களின் கருத்து.